# இருதயத்தில் கிறிஸ்து

பரமானந்தம் ஐயர்



THANKS TO OUR ALMIGHTY GOD. MAY GOD BLESS YOU AND MAY HOLY SPIRIT LEAD YOU

## To the Readers

Dear Beloved Brother/Sister, Thank you for downloading this Ebook. Please note that this Ebook is copyrighted by the author of the book or the publisher of the book or as mentioned in the book. Word of God Ministries is just providing you this ebook as free of cost and it is for your personal use not for commercial purposes.

## To the Copyright Owners

Dear Copyright owners, Word of God Ministries is doing this Free Ebook service to help the people who are not able to find the printed copy of your book from various countries arround the world and to the people who are restricted to have the printed materials in their house. And this will help the readers to improve their spiritual life.

If you want your new books to be published here as Free Ebook, kindly EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489

If you feel that your book should not be published, we are KINDLY REQUESTING YOU TO EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489. We will remove it from our Free Service as early as possible.

## About Word of God Ministries

**Word of God Ministries** was founded in the year 2007, July 29th with the grace and leading of Almighty God by Bro. Yesudas Solomon as an interdenominational ministry. The popular ministry "**Word of God Team**" is one among our various ministries. Now this ministry has 10 branches such as **1)** Word of God Team, **2)** Mobile Ministry, **3)** Internet Ministry, **4)** Deaf Ministry, **5)** Blind Ministry, **6)** Tribal Ministry, **7)** Computer Ministry, **8)** Audio Ministry, **9)** Video Ministry and **10)** Printing Ministry. We all thank our God with full of our heart for using us in His Great Ministry. We need your continuous prayer support. Our vision is to "Reach the Unreached through Technology". Our websites are: www.WordOfGod.in, www.ChristiansMobile.com, www.FreeChristianEbooks.in, www.IndianBibles.net, www.ChristianAudioBooks.in, www.WordOfGodTeam.com, www.WordOfGodMinistry.in, www.KannadaBible.net, www.KannadaChristian.net, www.PrayForKarnataka.com

# இருதயத்தில் கிறிஸ்து

எஸ். பரமானந்தம் ஐயர்

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்

THE CHRISTIAN LITERATURE SOCIETY
POST BOX NO. 501, PARK TOWN, MADRAS-3

**IRUTHAYATHIL CHRISTU**
in Tamil
By REV. S. PARAMANANDAM

125th Anniversary Publication

COPYRIGHT C.L.S.

*First Printed, 1942*
*Second Edition, 1956*
*Third Edition, 1983*
*Fourth Edition, 1996*

**விலை ரூ. 30.00**

Printed at the C.L.S. Press, Madras-7. L 6018

# இரண்டாம் பதிப்புக்கான பதிப்புரை

ஆண்டவரால் வல்லமையாகப் பயன்படுத்தப்பட்டவர் பரமானந்தம் ஐயர் என்பதை மூன்று தலைமுறை தமிழ்க் கிறிஸ்தவர்கள் அறிவார்கள். இராயபுரத்தில் போதகப் பணியாற்றிய நாற்பதாண்டுக் காலத்திலும், அதற்கு முன்பு உவாக்கர், ஷெர்வுட் எடி, வேதநாயகம் அசரியா ஆகிய அருள் தொண்டர்களுடன் தமிழகமெங்கும் நற்செய்திப் பணியாற்றிய நாட்களிலும் அவர் ஆற்றிய அருளுரைகள் ஏராளம். திருமறை ஆய்வுகள் பலப்பல. அத்துடன் **கிறிஸ்துவின் ஜீவியம்** என்ற அருமையான நூலை — ஆண்டவரின் வாழ்க்கை வரலாற்றைத் தியானக் கருத்துக்களோடு வழங்கும் கிறிஸ்தவ இலக்கியச் செல்வத்தை — அவர்கள் எழுதினார்கள். எண்ணற்ற இசைப் பாடல்களைப் புனைந்ததோடு **இரட்சண்யக் கீர்த்தனைகள்** என்ற தொகுப்பையும் வெளியிட்டார்கள். அதில் இடம்பெற்ற பாடல்களுள் சில **கிறிஸ்தவக் கீர்த்தனைகள்** நூலில் சேர்க்கப்பட்டிருப்பதால் இன்றளவும் தமிழ்த் திருச்சபைகள் அவற்றைப் பாடி வருகின்றன.

பரமானந்தம் ஐயரின் பல நூல்கள் இப்போது கிடைப்பதில்லை. **நூறு பிரசங்கங்கள், சுவிசேஷ பிரசங்கங்கள், நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர், கிருபைப் பிரவாகம்** போன்ற நூல்களை மீண்டும் பதிப்பித்து இக்காலத் திருச்சபைகளுக்கு அறிமுகப்படுத்த வேண்டியது அவசியம் ஆகும். இந்த முயற்சியில் **கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்** தனிக் கவனம் செலுத்துகின்றது என்பதைத் தெரிவிக்கும் வகையில், நாற்பதாண்டுகளுக்கு முன்பு தான் வெளியிட்ட **இருதயத்தில் கிறிஸ்து** என்ற இந்த அருமையான நூலை வெளியிடுகிறது.

இந்த நூலை ஏறத்தாழ முப்பதாண்டுகளுக்கு முன்பு படித்துப் பயன் பெற்றவன் என்ற முறையிலும், பரமானந்தம் ஐயர் அவர்களை நேரில் கண்டவன், அவர் அருளுரைகளைக் கேட்டவன், அவரோடு உரையாடி மகிழ்ந்தவன் என்ற வகையிலும் கிறிஸ்தவ அன்பர்கள் யாவருக்கும் பரிந்துரைப்பதில் மகிழ்ச்சிகொள்கிறேன்.

பரமானந்தம் ஐயர் தம் வாழ்க்கையில் சிறப்பித்துப் போதித்து வந்த சத்தியம் கிறிஸ்துதான். அவரே எல்லாவற்றுக்கும் முந்தியவர், மேலானவர் என்பதும், அவர் அருளும் மீட்பு ஒன்றே நமக்குத் தேவை என்பதும் ஐயரின் நூல்கள் அனைத்திலும் வலியுறுத்தப்படு கின்றன.

இந்நூலில் அடங்கும் நான்கு பகுதிகளில் கிறிஸ்து நம் உள்ளத் தில் வாழ்ந்திடுதல் பற்றியும் அதன் விளைவாக நாம் பெறக்கூடிய ஜீவனைப் பற்றியும் ஐயர் விளக்குகிறார். அவருக்கே உரித்தான முறையில் எளிய இனிய நடையில் எழுதுகிறார் — இல்லை — பேசுகிறார். வாசகர்களிடம் நேரிடையாகப் பேசுவதுபோல எழுதும் ஆற்றலைப் பெற்றிருந்தவர் அவர்.

இவ்வாண்டின் இலெந்து காலத்துக்குரிய தியான நூலாக இதனை வெளியிடுகிறோம். இதனைப் படிப்போர் யாவரும் தங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையில் பல ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டவர்களாய்ப் புது பலத்தோடும் தங்கள் வாழ்க்கையைக் கிறிஸ்துவுக்காக அவரு டைய ஆற்றலைச் சார்ந்து வாழ முற்படுவார்களாக.

சென்னை<br>31-1-1983

டாக்டர் தி. தயானந்தன் பிரான்சிஸ்<br>பொதுச் செயலாளர்<br>கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்



# மூன்றாம் பதிப்பு — ஓர் அறிமுக உரை

இந்த நூற்றாண்டில் கிறிஸ்தவத் தமிழ் இலக்கியத்திற்கு வளம் கூட்டும் வகையில் பல தியான நூல்களையும் அருளுரைக் கோவைகளையும் எழுதி வழங்கியவர் அருள்திரு. எஸ். பரமா னந்தம் ஐயர் ஆவார். அருளுரை மன்னர் என்று போற்றப்படு கின்ற அருட்கவிஞர் அவர். அவருடைய அருளுரைகளைக் கேட்ட மூத்த தலைமுறையைச் சேர்ந்த சிலர் இன்னும் நம் மோடு இருக்கிறார்கள். அத்தகையோர் ஐயரை அடிக்கடி நினைவு கூர்ந்து மகிழ்வதை நான் கண்ணாரக் கண்டிருக்கிறேன். அவ ருடைய ஏழு வார்த்தைகள், கிறிஸ்துவின் ஜீவியம், கிறிஸ்தவ ஜீவியம், இருதயத்தில் கிறிஸ்து, தேவனுடைய ஈவு, கிருபைப் பிரவாகம், நூறு பிரசங்கங்கள், கிறிஸ்தற்ற கிறிஸ்து மார்க்கம், என் சுய சரிதை, நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர், சுவிசேஷப் பிரசங்கங்கள் போன்ற நூல்களை நம்முடைய தலைமுறையின ரும் படித்துப் பயன் பெற்றுள்ளனர். இந்நூல்களுள் பலவற்றை வெளியிடும் வாய்ப்பு கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்திற்குக் கிடைத்து வந்துள்ளது.

இவ்வாண்டில் இவ்வாய்ப்பினை வெகுவாகப் பயன்படுத் திக் கொள்ளவேண்டும் என்பது இச்சங்கத்தின் நோக்கமாகும்.

இதற்கு ஒரு காரணம் வரும் 1997ஆம் ஆண்டில் ஐயருடைய 125ஆவது பிறப்பாண்டு தொடங்குகிறது. அவ்வாண்டிலும் அதற்கு முன்பும் அவருடைய நூல்கள் சிலவற்றின் மறு பதிப்புக் களை வெளிக்கொணரும் திட்டத்தின்கீழ் இப்போதிருந்தே சில நூல்கள் வெளிவர இருக்கின்றன.

அதோடு, ஐயர் இருபத்தி ஐந்து வயது இளைஞராக நாசரேத்தில் உடற்பயிற்சி ஆசிரியப் பணியாற்றி வந்த காலக்கட்டத்தில் 1897ஆவது ஆண்டில் தம்முடைய வாழ்க்கையில் இரட்சிப்பின் மாறுதலைக் கண்டவர். அந்நிகழ்ச்சியின்போது ஆண்டவர் தம்மோடு பேசியதையும், அவர் ஆண்டவரோடு உரையாடியதையும் என் சுய சரிதை என்னும் நூலில் இவ்வாறு குறிப்பிடுகிறார்:

'ஒருநாள் பகல் பன்னிரெண்டு மணி இருக்கும். வகுப்பில் இருந்த பையன்களுக்கு எழுத்து வேலை கொடுத்தேன். அவர்கள் உட்கார்ந்து எழுதிக் கொண்டிருந்தார்கள். நான் மேஜையின் பக்கமாக உட்கார்ந்துகொண்டிருந்தேன். அந்த அமர்ந்த வேளையில் என் உள்ளத்தில் ஆண்டவர் பேசும் சத்தம் கேட்டது. ''நான் உன்னிடத்தில் அன்புகூர்ந்து, உனக்காக என் உயிரைக் கொடுத்தேன். நீயோ என்னைத் தேடவுமில்லை, என்னை அறியவுமில்லை, என் பேரில் உனக்கு அன்பும் இல்லை'' என்று பேசினார். இது நானே நினைத்துக்கொண்ட நினைவல்ல. ஒருவன் தன்னை ராஜாவென்று நினைத்துக்கொள்வதால் ராஜாவாக மாட்டான். நானே நினைத்துக்கொள்வதால் என் ஜீவியத்தில் இவ்வளவு பெரிய மாறுதல் உண்டாகமாட்டாது. ஒரு பலத்த பிரசங்கி என் முகத்தைப் பார்த்துப் பேசியிருந்தாலும் இவ்வளவு உணர்ச்சி உண்டாயிருக்கமாட்டாது. கர்த்தரே பேசினார். அதைச் சகிக்க முடியாமல் நான் எழுந்து பக்கத்து அறைக்குள் பிரவேசித்து, அங்கே முகங்குப்புற விழுந்து அழுது: ஆண்டவரே, நீர் சொன்னது உண்மைதான் ஐயா. இத்தனை வருஷங்களாக நான் கிறிஸ்தவன் என்றிருந்தும் உம்மை நான் தேடவுமில்லை, உம்மை அறியவுமில்லை, உமது பேரில் எனக்கு அன்பும் இல்லை ஐயா என்று அறிக்கையிட்டதோடு, ஆண்டவரே, ஒன்று சொல்லுகிறேன், ''இந்நிமிஷ முதல் நான் உமக்கே சொந்தம்'' என்பதை எழுதிக்கொள்ளும் என்று சொல்லி, எழுந்து கண்ணீரைத் துடைத்து, வகுப்புக்குத் திரும்பி வந்து உட்கார்ந்தேன். நடந்ததென்னவென்பதை உலகில் ஒருவரும் அறியார்கள். இந்த இரட்சணிய மாறுதல் 1897இல் உண்டாயிற்று' (பக்கம் 26,27).

இந்த இரட்சிப்பின் மாறுதல் நிகழ்ந்து ஒரு நூற்றாண்டு அடுத்த ஆண்டில் நிறைவுறவிருப்பது குறிப்பிட வேண்டிய செய்தியாகும். அவருடைய நூற்றி இருபத்தைந்தாவது பிறப்பாண்டும் மறுபிறப்பின் நூற்றாண்டும் அடுத்த ஆண்டில் ஐயரை அதிகமாக நாம் நினைவுகூர்ந்து நம்முடைய 'இரட்சிப்பின்



மாறுதலை' எண்ணிப் பார்க்கவும், அவருடைய பணிகளை நாம் முனைந்து தொடரவும் நமக்கு அறைகூவல் விடுக்கின்றன.

ஐயருடைய இந்நூலை மறு அறிமுகம் செய்வதில் மகிழ்ச்சி அடைகிறோம். இந்நூலை முதன் முறையாக வாசிக்கும் அன்பர்களும், ஏற்கெனவே வாசித்து இப்போது இன்னொரு முறை வாசிக்க உட்படும் அன்பர்களும் தங்கள் ஆன்மீக வாழ்க்கையில் நற்பலன்களைப் பெறுவார்களாக.

அன்பன்

சென்னை

14-8-96

டாக்டர் தி. தயானந்தன் பிரான்சிஸ்

## அருள்திரு. பரமானந்தம் ஐயர் தம்மைப்பற்றிக் கூறுவன :

*பிறந்தது சங்கரன் கோயில் பேச்சியம்மாளிடம்*
*வளர்ந்தது நாசரேத்தூர்*
*படித்தது மிடில் ஸ்கூல்*
*பார்த்தது ஜிம்னாஸ்டிக் வேலை*
*அடைந்தது முழு ஏமாற்றம்*
*கிடைத்தது தேவ ரட்சிப்பு*
*நிறைந்தது கிறிஸ்துவின் அன்பு*
*நடந்தது ரட்சண்ய ஊழியம்*
*கண்டது மிகுதியான பலன்*
*கர்த்தருக்கே துதி ஸ்தோத்திரம்!*

'என் சுய சரிதை'

*(பக்கம் 101,102)*



## மாபெரும் கவிஞர்

தினமே நானுனைத் தேடிப் பணியத்
துணைபுரி வாயெனத் தொடங்கும் பாடலை
மனதைக் கவரும் வகையில் அளித்த
மாபெருங் கவிஞரை வாழ்த்திடு கின்றேன்!

பரமா னந்தர் பாடலைக் கேட்டால்
பாறை நெஞ்சும் பஞ்சாய் மாறும்!
திறமாய் இசையும் சேர்ந்து விட்டால்
திகட்டா தினிக்கும் தேனும் தோற்கும்!

திருப்புகழ் மற்றும் தேவா ரங்கள்
தியாகர் பண்கள் திறமுடன் கற்றே
அருட்புக ழோதும் அரும்பா சுரங்கள்
அழகாய்ச் சபைக்கே அளித்தோர் வாழ்க!

எத்தனை பாடல் எழுதிக் குவித்தார்!
இயேசுவை அவற்றில் இனிதாய் நிறைத்தார்
இத்தனை வகையாம் இசைவடி வங்கள்
எந்தை அருளின் ஈவே என்பார்!

கவிஞர் தயா

'கிறிஸ்தவ அருட்கவிஞர்கள்'

*(பக்கம் 38,39)*

# முகவுரை

**ச**பைகளின் நிலைமையையும், கிறிஸ்தவர்களாகிய நமது காரியங்களையும் கவனிக்கும்போது நாம் சஞ்சலப்படாதிருக்க முடியாது. ஆண்டவரும் அவர் போதனைகளும் எங்கேயோ போய்விட்டனபோலவும், சபைகள் தங்கள் கடமைகளை வழக்கம்போல் நடத்திக்கொண்டு போவது போலவும் தோன்றுகிறது. சபைகளில் நடந்தேறும் மனுஷருடைய ஏற்பாடுகளும் முயற்சிகளும் கிறிஸ்துவை மறைத்துவிட்டதாக எண்ணவேண்டியதிருக்கிறது. ஆராதனைகளுக்குப் போய் வருவதும், மார்க்க ஆசாரங்களை அனுசரிப்பதுமே போதும் என்றிருக்கிறோம். ஆலயங்கள், ஆராதனைகள், போதகர்கள், போதனைகள் சகலமும் கிருபையின் எத்தனங்களாகும். அவைகளின் பலன் நமது நடக்கையில் காணப்படவேண்டியது. நமது ஜீவியத்தில் இரட்சிப்பின் மாறுதல் உண்டா? கிறிஸ்துவின் சாயல் நம்மில் காணப்படுகிறதா? அவரை மற்றவர்களுக்குக் காட்டும் மாதிரிகளாகப் பிழைக்கிறோமா? நமது ஜீவியம் பிறருக்கு ஆசீர்வாதமும் ஆறுதலுமாயிருக்கிறதா? நமது ஊழியத்தில் தேவ பலம் விளங்குகிறதா?

'என் பாவத்தை மன்னித்து மோட்சத்தில் சேர்த்துக்கொள்ளும்' என்பது பொதுவாய் அநேகருடைய ஜெபமாயிருக்கிறது. பரமபிதா நம்மை அழைத்திருக்கிற அழைப்போ மகா உன்னதமானது. அவர் நமக்கருளும் இரட்சிப்பு மகா விசாலமானது. கிறிஸ்தவப் பெற்றோருக்குப் பிறக்கும் இயற்கைப் பிறப்பு நம்மைக் கிறிஸ்தவர்களாக்காது. கிறிஸ்து **நமக்குள் உருவாகிறதால்** நாம் பிறப்படைந்து தேவ மக்களாக வேண்டும். அவர் **நமக்குள் வசிப்பதால்** அவருடைய மாதிரியின்படி நடந்து அவர் சாயலுக்கொப்பாக மாறவேண்டும். அவர் **நமக்குள் கிரியை செய்வதால்** நாம் பலனுள்ள ஊழியத்தை நிறைவேற்ற வேண்டும். அவர் **நமக்குள் மகிமையின் நம்பிக்கையாக இருப்பதால்** நித்திய மகிமைக்கு நாம் பங்குள்ளவர்களாகவேண்டும். இவைகளை நாம் அறியாமல் உலகத்தாலும் பற்பல பாவங்களாலும் மேற்கொள்ளப்பட்டு நமது ஜீவியத்தைப் பாழாக்கி வருகிறோம். ''அவர்களுடைய கனிகளாலே அவர்களை அறிவீர்கள்'' என்று ஆண்டவர் சொன்னபடி, நமது நடக்கை நாம் எப்படிப்பட்டவர்கள் என்பதை வெளிப்படுத்துகிறது. கர்த்தருக்குப் பிரியமாக நடக்கும் உத்தம விசுவாசிகள் அங்கங்கே இருக்கிறார்கள் என்பதை நாம் மறுக்கிறதில்லை. ஆனால் அநேகர் பேருக்கு மாத்திரம் கிறிஸ்தவர்களாயிருக்கிறார்கள் என்பதை யார் மறுக்கமுடியும்? பரம பிதாவோ நம்மை கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களினாலும் ஆசீர்வதிக்க இப்போதே சித்தமுள்ளவராயிருக்கிறார். அதற்கு உதவியாயிருக்கும்படி இச்சிறு புஸ்தகம் எழுதப்பட்டிருக்கிறது. இதைக் கருத்தோடு படிக்கும் தமது மக்களை ஆண்டவர் ஆசீர்வதித்து, ஆவிக்குரிய மேலான ஜீவியத்திற்கு வழிநடத்துவாராக.

''அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக.''

இராயபுரம் — **எஸ். பரமானந்தம்**

டிசம்பர் 1941

# இருதயத்தில் கிறிஸ்து

''அவர் எல்லார்மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்'' எபே. 4:6.

''நான் உங்களுக்குள் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்'' யோ. 14:20.

''அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால் நீங்கள் அவரை அறிவீர்கள்'' யோ. 14:17.

''நீங்கள் விசுவாசம் உள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்; இயேசுகிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா?'' 2 கொரி. 13:5.

''தேவன் தமது குமாரனை எனக்குள் வெளிப்படுத்தப் பிரியமாயிருந்தார்'' கலா. 1:16.

''இனி நானல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்'' கலா. 2:20.

''என் சிறு பிள்ளைகளே, கிறிஸ்து உங்களில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்பவேதனைப்படுகிறேன்'' கலா. 4:19.

''விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும்... வேண்டிக்கொள்ளுகிறேன்'' எபே. 3:17.

''நான் எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன்'' கொலோ. 1:29.

''நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிறவர்'' எபே. 3:20.

''கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்'' கொலோ. 1:27.

''என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா'' நீதி. 23:26.



# இருதயத்தில் கிறிஸ்து

ஒரு கடிகாரத்திற்கு அதன் பிரதான வில் எப்படியோ அப்படியே மனுஷனுக்கு அவன் இருதயம் பிரதானம். இருதயமே மனுஷன். அவன் புறம்பே எப்படிக் காணப்பட்ட போதிலும், அவன் இருதயம் எப்படியிருக்கிறதோ அதுவே அந்த மனுஷன். நாம் வெளித்தோற்றத்தின்படி மனுஷரை நிதானிக்கி றோம். அவர்கள் இருதயத்தை நாம் அறியமுடியாது. தேவனோ வெளித்தோற்றத்தையல்ல, அவர்களுடைய இருதயத்தின் நிலை மையை அறிந்து தீர்ப்பிடுகிறார். இருதயம் சகல கேடுகளுக்கும் ஊற்றாயிருக்கலாம் அல்லது சகல நன்மைகளுக்கும் ஊற்றா யிருக்கலாம். ''எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே மகா திருக்குள்ளதும் கேடுபாடுள்ளதுமாயிருக்கிறது; அதை அறியத் தக்கவன் யார்?'' இருதயத்திலிருந்தே சகல அக்கிரமங்களும் பாவங்களும் புறப்படுகிறதென்று ஆண்டவரும் சொல்லுகிறார். ''நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்தி லிருந்து நல்லதை எடுத்துக்காட்டுகிறான்; பொல்லாத மனுஷன் தன் இருதயமாகிய பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லா ததை எடுத்துக்காட்டுகிறான்.'' இருதயம் உள்ளான மனுஷன்; புறம்பே காணப்படுவது வெளியான மனுஷன். நன்மையானா லும் தீமையானாலும் உள்ளும் புறமும் ஒன்றுபோலிருப்பது உண்மை. உள்ளே அக்கிரமங்களும் வெளியே தேவ பக்தியும் தோன்றுவது மாயம். மாயக்காரரான வேதபாரகர், பரிசேயர் இரட்சிக்கப்படுவது கஷ்டம். அவர்களால் பாவிகளென்று தள் ளப்பட்டவர்களோ இரட்சிப்புக்கு அருகரானார்கள். அவர்க ளிடத்தில் மாயமில்லை. இருதயம் சரியாயிருந்தால் எல்லாம் சரியாயிருக்கும். ஆகையால் ஆண்டவர் நமது இருதயத்தைக் கேட்கிறார். அங்கே வசிக்க விரும்புகிறார். கிறிஸ்துவுக்கும் இருதயத்திற்கும் உள்ள சம்பந்தமாக நாலு காரியங்களைச் சிந்திப்போம்.

I. இருதயத்தில் கிறிஸ்து பிரவேசிப்பது ஜீவனின் உற்பத்தி.

II. இருதயத்தில் கிறிஸ்து வசிப்பது ஜீவனின் வளர்ச்சி.

III. இருதயத்தில் கிறிஸ்து கிரியை செய்வது ஜீவனின் முயற்சி.

IV. இருதயத்தில் கிறிஸ்து மகிமையின் நம்பிக்கையாயிருப்பது ஜீவனின் உயர்ச்சி.

## பொருளடக்கம்


| | | | | பக்கம் |
|---|---|---|---|---|
| I. | ஜீவனின் உற்பத்தி | ... | ... | 1 |
| II. | ஜீவனின் வளர்ச்சி | ... | ... | 10 |
| III. | ஜீவனின் முயற்சி | ... | ... | 24 |
| IV. | ஜீவனின் உயர்ச்சி | ... | ... | 35 |

# I

## ஜீவனின் உற்பத்தி

இருதயத்தில் கிறிஸ்து **பிரவேசிப்பது** ஜீவனின் உற்பத்தி. ''என் சிறு பிள்ளைகளே, கிறிஸ்து உங்களில் **உருவாகுமளவும்** உங்களுக்காக மறுபடியும் கர்ப்ப வேதனைப்படுகிறேன்'' (கலா. *4:19*). கலாத்திய சபையார் அங்கே குடியேறின யூதர்களாயிருக்கவேண்டும். நிருபத்தில் பழைய ஏற்பாட்டு வாக்கியங்களையும் உதாரணங்களையும் பவுல் தாராளமாக எழுதியிருக்கிறார். புறஜாதிகளுக்கு அவைகள் விளங்கா. அப்போஸ்தலன் சரீரத்தில் நல்ல சுகமில்லாதிருந்தும் கிறிஸ்துவை அவர்களுக்கு ஊக்கமாகப் பிரசங்கிக்க, அவர்களும் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டார்கள். இப்படியிருக்க, வேறு பிரசங்கிகள் சுவிசேஷம் என்னும் பேராலே நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே மாத்திரம் நீதி கிடைக்கும் என்று வற்புறுத்திப் பிரசங்கிக்கவே, இந்தக் கலாத்தியர் கிறிஸ்துவையும், அவரது கிருபையையும் நழுவவிட்டுப் பின்வாங்கிப் போனார்கள். இதினிமித்தம் பவுல் அவர்களைக் கடிந்துகொண்டு, இரட்சிப்புக்குக் கிறிஸ்துவைத் தவிர வேறு வழியில்லையென்றும், அவரை உறுதியாய்ப் பற்றிக்கொள்ளாததால் அவர்கள் விழுந்தார்களென்றும் சொல்லி: ''என் சிறுபிள்ளைகளே, கிறிஸ்து உங்களில் உருவாகுமளவும் உங்களுக்காக **மறுபடியும்** கர்ப்ப வேதனைப்படுகிறேன்'' என்கிறார். சிறு பிள்ளைகளே என்பது அப்போஸ்தலன் யோவான் அடிக்கடி உபயோகிக்கிற அருமையான வார்த்தை. பவுல் இந்த ஒரு இடத்தில் மாத்திரம் அதை உபயோகிக்கிறார். கலாத்தியர் விஷயமாய் தாம் முன் எடுத்துக்கொண்ட பிரயாசம் வீணாயிற்றென்று கண்டு **மறுபடியும்** கஷ்டப்படுகிறேன் என்கிறார். கிறிஸ்து அவர்கள் இருதயத்தில் சரியாய் உருவாகவில்லை. அவர்களுடைய பின்வாங்குதல் அதைக் கெடுத்தது. கிறிஸ்து அவர்கள் உள்ளங்களில் உருவாகிறது அவர்களுக்கு ஜீவனும் மறுபிறப்புமாகும்.

கடவுள் மனுஷனை ஒரு சிறந்த நோக்கத்தோடே சிருஷ்டித்
தார். ஆலயமாகிய மனுஷனுக்குள் தாம் வாசம்பண்ண வேண்டு
மென்பதே அந்த நோக்கம். அவர் அவனுக்குள் வாசம்பண்ணி
அவனை ஆண்டு நடத்துவதாலே அவன் ஆசீர்வதிக்கப்படு
வான், சிருஷ்டிகர் அவனில் மகிமைப்படுவார், ஏற்ற காலம்
வரும்போது அவர் அவனைத் தமது மகிமையிலே சேர்த்துக்
கொள்வார். வானத்திலும் பூமியிலுமுள்ள சர்வ சிருஷ்டிகளும்
சிருஷ்டிகருடைய சித்தத்தைத் தவறாது நிறைவேற்றுவதாலே
அவரை மகிமைப்படுத்துகின்றன. அதுபோலவே மனுஷனும்
தேவ சித்தத்தைப் பூரணமாய் நிறைவேற்றி, அவருடைய நித்திய
மகிமைக்குப் பங்குள்ளவனாக வேண்டுமென்பது தேவ தீர்மா
னம். இந்தத் தீர்மானத்துக்கு ஆபத்து வந்தது. பாக்கியமான
நிலைமையிலிருந்த மனுஷன் சாத்தானால் வஞ்சிக்கப்பட்டு,
அவன் பொய்யை நம்பி தன் ஜீவனின் அதிபதியைப் புறக்கணித்
தான். வெறுமையான அவனுடைய இருதய ஆசனத்தில் சாத்
தான் ஏறிக்கொண்டான். சாத்தானைப்போலவே அவன் ஆளுகை
யும் இருக்கும். அவன் மனுஷ கொலைபாதகனும், பொய்
யனும், வஞ்சித்துக் கெடுக்கிறவனுமானவன். அவன் ஆளுகை
யின் பலனை விஸ்தரிக்க வேண்டியதில்லை. மனுமக்களை
ஆண்டுகொண்ட பாவமும் சாபமும் மரணமும் சகல கேடுகளும்
அவனாலே வந்தன. அவன் எப்படிப்பட்டவன் என்பதை இப்
போது உலகத்தில் நடந்துவரும் யுத்தம் வெளிப்படுத்துகிறது.
பட்டணங்களும், ஆலயங்களும் நிர்மூலமாயின. புருஷர் ஸ்திரீ
கள் குழந்தைகள் ஆயிரக்கணக்காய் மாண்டார்கள். போர் வீர
ரான வாலிபர்கள் இலட்சக்கணக்காய் அழிந்தார்கள், இன்னும்
அழிகிறார்கள். பஸிபிக்கிலும் கீழ்க்கோடியிலும் யுத்தத்தால்
உண்டாகும் அழிவுகள் கொஞ்சமல்ல. இந்தியாவுக்கும் என்ன
சம்பவிக்குமோவென மக்கள் கலங்கித் தவிக்கிறார்கள். இக்
கொடிய செயல்கள் யாவுக்கும் சாத்தானே காரணம் என்பதை
மறுக்க முடியாது.

ஒன்று ஆண்டவர் நமக்குள்ளிருந்து நம்மை ஆள வேண்டும்
அல்லது சாத்தான் நம்மை ஆளவேண்டும். நடுநிலைமை



யில்லை. தன்னை ஆண்டவரும் ஆளுகிறதில்லை; சாத்தானும்
ஆளுகிறதில்லை என்று ஒருவரும் சொல்லமுடியாது. எந்த
இருதயமும் வெறுமையாயிருப்பதில்லை. கிறிஸ்து பன்னிருவ
ரைத் தமக்குச் சீஷராகத் தெரிந்துகொண்டார். அவர்களெல்லா
ரிடத்திலும் அவர் அன்பாயிருந்தார். அவரில் பட்சபாதமில்லை.
இப்படியிருக்க யூதாஸ்காரியோத்தின் இருதயம் வர வர அவரை
விட்டுப் பிரிந்த்து. சத்துருக்களுக்கு அவரைக் காட்டிக்கொடுக்க
வும் அவன் தீர்மானித்தான். இது சாத்தானுடைய **தூண்டுதல்**
என்று வாசிக்கிறோம். கடைசியாக அவனுடைய இருதயம்
முற்றிலும் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்தது. உடனே ''சாத்தான்
யூதாசுக்குள் புகுந்தான்.'' ஆண்டவர் சொன்ன வேறொரு திருஷ்
டாந்தம் இதற்கு அனுசரணையாயிருக்கிறது. அசுத்த ஆவி ஒரு
மனுஷனை விட்டுப் புறப்பட்டது. அவன் இருதயம் வெறுமை
யாயிற்று. அந்த அசுத்த ஆவி வறண்ட இடங்களில் அலைந்து
இளைப்பாறுதல் தேடியும் கண்டடையாமல்: ''நான் விட்டு
வந்த **என் வீட்டுக்குத்** திரும்பிப்போவேன்'' என்றது. அங்கே
வந்து பார்த்தால் அந்த வீடு இன்னும் வெறுமையாயிருப்ப
தோடு அதிகமான கேட்டுக்கும் அனுகூலமாயிருந்ததைக்கண்டு,
திரும்பிப்போய் தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளோடு
வந்து அவன் உள்ளத்தில் குடியிருந்தது. அவன் நிலைமை
முன்னிலும் அதிக மோசமாயிற்று. ஆண்டவரை அவன் ஏற்றுக்
கொண்டிருப்பானானால் திரும்பிவந்த பிசாசுக்கு அங்கே இட
மிராது. ''என்னோடிராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்''
என்றார். கிறிஸ்து இருதயத்தில் இல்லையென்றால் அவருடைய
விரோதியாகிய சாத்தான் எப்படியும் இருதயத்தைக் கைப்பற்றிக்
கொள்வான் என்பது நிச்சயம்.

தன் இருதயத்தில் தேவனை உடையவன் தேவ மனுஷன்
என்றழைக்கப்படுவதுபோல, தன் இருதயத்தில் பிசாசை உடை
யவன் பிசாசென்று அழைக்கப்படுகிறான். யூதாசை சாத்தான்
தூண்டினான், யூதாசுக்குள் அவன் பிரவேசித்தான், அந்த யூதா
சைக் குறித்து: ''பன்னிருவராகிய உங்களை நான் தெரிந்து
கொள்ளவில்லையா? உங்களுக்குள் ஒருவன் **பிசாசாயிருக்**

**கிறான்''** என்றார். பேதுரு ஆண்டவருக்கு எவ்வளவு அருமையானவரானாலும் சிலுவை கூடாதென்று சொன்னபோது: ''எனக்குப் பின்னாகப்போ **சாத்தானே''** என்றார். நமக்குள்ளும் பிறரிடத்திலும் கிரியை செய்யும் சாத்தானைக் காணக்கூடிய பரிசுத்த பார்வை நமக்கில்லை. துர்நாற்றத்திலேயே காலமெல்லாம் குடியிருப்பவர்களுக்கு அந்த நாற்றம் தெரியாததுபோல பாவத்தில் சஞ்சரிப்பவர்களுக்கு சாத்தானுடைய தந்திரங்கள் தெரிகிறதில்லை. நாம் **பாவத்தைப்** பிரதானமாகக் காண்கிறோம். இரட்சகரோ பாவத்துக்குக் காரணனான **பிசாசைக்** காண்கிறார். நாம் பாவம் செய்கிறோம் என்பதும், அந்தப் பாவத்துக்கு நாமே உத்தரவாதிகள் என்பதும் மெய்யாயினும் சாத்தான் சம்பந்தப்படாத பாவமில்லை என்பதை நாம் அறிய வேண்டும். ஒவ்வொரு பாவத்தின் பக்கத்திலும் அவன் நிற்கிறான். அவன் தன்னை மறைத்துக் கொள்ளுகிறான். ''பாவம் செய்கிறவன் பிசாசினால் உண்டாயிருக்கிறான்.'' ஆண்டவர் யூதரைப் பார்த்து: ''நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசினால் உண்டானவர்கள், உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்'' என்றார். ''உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது.'' அவன், அவரவருடைய பாவ வாசல் வழியாய் உட்பிரவேசித்து இருதயத்தைக் கைப்பற்றிக்கொண்டு தன் இஷ்டப்படியே அவர்களை நடத்தி ஆத்துமாக்களை வேட்டையாடுகிறான். ஒருவனுடைய பயங்கரமான பார்வையும், மூர்க்கமான பேச்சும், அக்கிரமமான செய்கைகளும் சாத்தான் அவனுக்குள் இருக்கிறான் என்பதைக் காட்டுகின்றனவல்லவா? கல்விமான்கள் கல்வியற்றோர், தனவான்கள் ஏழைகள், உயர்ந்தோர் தாழ்ந்தோர், ஆண்கள் பெண்கள், அருமையாகப் பெற்று வளர்த்த மக்கள் யாவரும் சாத்தானால் வஞ்சிக்கப்பட்டுத் தங்கள் ஜீவியத்தைப் பாழாக்குகிறார்கள் என்பது நிச்சயம். இந்த மோசமான பிசாசின் வல்லமையிலிருந்து நமக்கு விடுதலை வேண்டும்.

நாம் எவ்வளவாய்க் கெட்டுப்போனபோதிலும் நம்மைப் பற்றிய அனாதித் தீர்மானத்தைப் பரமபிதா கைவிடவில்லை. அவருடைய அளவற்ற அன்பும் இலவசமான கிருபையுமே நமது



இரட்சிப்புக்குக் காரணம். பிசாசின் கிரியைகளை அழிக்கவும் அவன் ஆளுகையிலிருந்து நம்மை விடுவிக்கவும் அவர் தமது அருமைக் குமாரனை உலகத்தில் அனுப்பினார். இவர் தமது மரணத்தின் மூலமாய்ப் பிசாசை அழித்து, நமது பாவங்களை மன்னித்து, பிதாவோடு நம்மை ஐக்கியப்படுத்தினார். கிறிஸ்துவுக்குள் பரமபிதா தாம் இழந்துபோன மனுஷனைக் கண்டடைந்தார், மனுஷனும் தான் இழந்துபோன பிதாவைக் கண்டடைந்தான். அவர் நமது இருதயங்களில் வசிக்க வழி உண்டாயிற்று.

ஆண்டவர் நமக்கு வெளியேயிருந்து நம்மை இரட்சிக்க முடியாது. அவர் நமக்கு வெளியேயிருந்து சரீரத்திற்குரிய ஆயிரம் நன்மைகளை நமக்குக் கொடுக்கலாம். ஆகாரம் கொடுக்கலாம், வஸ்திரம் கொடுக்கலாம், உத்தியோகம் கொடுக்கலாம், சம்பாத்தியம் கொடுக்கலாம், வியாபாரம் லாபமாய் நடக்கலாம், வயல்கள் தானியங்களை விளைவிக்கலாம், இவை போன்ற சகல நன்மைகளையும் அவர் நமக்குத் தாராளமாய்க் கொடுக்கலாம். கிறிஸ்தவர்களுக்கும் தேவ பக்தருக்கும் மாத்திரமா இப்படிச் செய்கிறார்? எல்லாருக்குமே பட்சபாதமின்றி இவ்வாறு சரீர நன்மைகளை அருளுகிறார். இரட்சகர் சொல்லுகிறபடி ''நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும்'' தேவன் நன்மை செய்கிறார். பார்க்கப்போனால் தேவ மக்களைப் பார்க்கிலும் தேவனற்றவர்களும் அவரைத் தேடாதவர்களும் உலகத்தில் செழிப்பாயிருக்கிறார்கள். அவர்கள் முழுமனதோடே பூமிக்குரியவைகளைப் பிரதானமாய்த் தேடுகிறபடியால் அவைகளைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். சங்கீதக்காரன் சொல்லுகிறபடி: ''இம்மையில் தங்கள் பங்கைப் பெற்றிருக்கும் உலக மக்கள்'' அவர்கள். அவர்களுக்குச் சகலமும் வாய்க்கும். தேவனற்ற ஐசுவரியவானுடைய நிலம் **நன்றாய்** விளைந்தது. ஏன் தீய்ந்துபோகக்கூடாது? சொல்லப்போனால் தேவனுடைய பிள்ளைகள் நிலைமைதான் உலகத்தில் கஷ்டமும் கவலையுமுள்ளதாயிருக்கிறது. எவ்வளவுக்கு அவர்கள் கிறிஸ்துவைப் பின்தொடர்ந்து அவர் சாயலுக்கொப்பாய் மாறுகிறார்களோ அவ்வளவுக்குக் கஷ்ட நிலைமையிலிருப்பார்கள். என்றாலும் உண்ண ஆகாரமும் உடுத்த வஸ்திரமும் தலைசாய்க்க இடமும் இல்லாமற்

போவதில்லை. அவர்கள் தரித்திரர் என்றெண்ணப்பட்டாலும்
ஆவிக்குரிய காரியங்களில் அநேகரை ஐசுவரியவான்களாக்கும்
பொக்கிஷம் அவர்களிடத்திலுண்டு. அவர்கள் கிறிஸ்துவை
ஒப்பற்ற செல்வமாக ஏற்றுக்கொண்டிருப்பதால் உலகத்தில்
''எந்த நிலைமையிலும் மனரம்மியமாயிருக்க அவர்களுக்குத்
தெரியும். எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்க
வும், பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும், குறைவுபட
வும் ஆண்டவரால் போதிக்கப்பட்டிருக்கிறார்கள்.'' மற்றவர்கள்
செல்வமாய் வாழ்வதைக் கண்டு அவர்கள் பொறாமைப்படுவ
தில்லை.

கடவுள், மனுஷருக்குப் புறம்பேயிருந்து ஏராளமான சரீர
நன்மைகளை அருளுகிறார் என்றும், அவர்கள் அவரை மறந்து
பாவ வழிகளில் சென்றாலும் அவர் அவர்களை உலக நன்மைக
ளால் நிரப்புகிறார் என்றும் கவனித்தோம். ஆனால் அவர்
**நமக்குள்** வராமல் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களில் கடுகளவு
நன்மையையாகிலும் நாம் காணமுடியாது. வினை எங்கேயோ
அங்கே அதற்குப் பரிகாரம் உண்டாகவேண்டும். மனுஷனில்
காணப்படும் கேடுகள் யாவும் அவன் இருதயத்திலிருந்து புறப்
படுகின்றன. அந்த இருதயம் சாத்தான் கைவசமிருக்குமளவும்
இந்தக் கேடுகள் நீங்க வழியில்லை. ஆகையால் கிறிஸ்து
**நமக்குள்** உருவாகவேண்டியது அவசியம். அவர் உட்பிரவேசிக்
காமல் நமக்கு நிவாரணம் இல்லை. ''குமாரனை உடையவன்
ஜீவனை உடையவன்; தேவனுடைய குமாரன் இல்லாதவன்
ஜீவனில்லாதவன்.'' அவர் உட்பிரவேசிக்காமல் நமக்குள் ஜீவ
னில்லை. ''அவரே நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து.'' அவர்
உட்பிரவேசிக்காமல் நமக்கு மறுபிறப்பில்லை. மறுபிறப்பில்
லாமல் நாம் தேவ மக்களாக முடியாது. மறுபிறப்பில்லாமல்
நாம் தேவ ராஜ்யத்தைக் காணவோ, அதில் பிரவேசிக்கவோ
முடியாது. மறுபிறப்பில்லாமல் மகிமையில் பங்கு பெற முடி
யாது. கிறிஸ்து நமது இருதயத்தில் வீற்றிருக்கும்போது நமது
ஜீவியம் முழுவதையும் மாற்றுகிறார். தாம் சிலுவையில் சம்பா
தித்த இரட்சிப்பின் ஆசீர்வாதங்களை நமது ஜீவியத்தில் பலிதப்
படுத்துகிறார்.



ஆண்டவர் தமது சீஷர்களோடு இருந்த நாட்களில் எவ்வ
ளவோ அருமையாய் அவர்களுக்குப் போதித்தார். அவர்கள்
அவைகளை அறியவுமில்லை, அவைகளைக் கைக்கொண்டு
நடக்கமுடியவுமில்லை. போதித்ததுமன்றி தாமே அவைகளுக்கு
முன்மாதிரியாக நடந்து காண்பித்தார். அந்த மாதிரியின்படி
நடக்க அவர்களால் முடியவில்லை. அவர்களால் அப்போது
முடியாதென்று ஆண்டவருக்குத் தெரியும். ஆகையால் அவர்
அவர்களைக் கடிந்துகொள்ளவில்லை. அவர்தாமே அவர்களுக்
குள் பிரவேசித்து அவர்கள் ஜீவியத்தை மாற்றி, அவர்களைப்
பலப்படுத்தினால் அல்லாமல் அவர்கள் இரட்சிக்கப்படமாட்
டார்களென்பதை ஆண்டவர் அறிவார். அவர் உயிர்த்தெழுந்த
பின் சீஷர்களிடம் பேசின சமயத்தில்: ''நான் உங்களோடு
இருந்தபோது'' என்கிறார். அந்த மூன்று வருஷகாலமாய் அவர்
**அவர்களோடுகூட** இருந்தார். அவர்களுக்கு **வெளியே** அவர்கள்
பக்கத்தில் இருந்தார். அவர்களுக்குள் அவர் இருக்கவில்லை.
ஆனால் அவர் அவர்களுக்குள் இருக்கும் நாள் வருமென்று
அறிவித்தார். இப்போது சரீரத்தில் நான் உங்களோடு இருக்கி
றேன். உங்களை இரட்சித்து ஆவிக்குரியவர்களாக உங்களை
மாற்றமுடியவில்லை. எவ்வளவு காலம் நான் உங்களோடிருந்தா
லும் உங்கள் பாவங்களும், பலவீனங்களும், அறிவீனங்களும்
நீங்கி நீங்கள் இராஜ்யத்தின் பிள்ளைகளாகப் போகிறதில்லை.
ஆகையால் நான் கட்டாயம் உங்களை விட்டுப் போகவேண்டும்.
போவேனாகில் நான் மறுபடியும் என் ஆவியின்மூலம் உங்களுக்
குள்ளே வந்து என்னை உங்களுக்குள் வெளிப்படுத்துவேன்.
''அந்நாளில் நான் **உங்களுக்குள்ளே இருப்பதை** நீங்களே அறிவீர்
கள்'' என்றார். அந்தப்படியே பெந்தெகொஸ்தே நாளில் அவர்
அவர்களுக்குள் வந்து அவர்கள் இருதயங்களை ஆண்டுகொண்
டார். ஆ, அவர்களில் எவ்வளவு ஆச்சரியமான மாறுதல்! அவர்
சிலுவையில் சம்பாதித்த இரட்சிப்பின் ஆசீர்வாதங்களை அவர்
கள் இருதயங்களில் பலிதப்படுத்தினார். சிலுவையை முழுவ
தும் பகைத்து வெறுத்த அவர்கள் இந்த இரட்சிப்பின் ஆசீர்வா
தங்களைத் தங்கள் இருதயங்களில் பெற்றவுடனே, சிலுவையின்
மகத்துவத்தை எங்கும் கூறி அறிவித்தார்கள். கிறிஸ்து அவர்கள்
இருதயங்களில் உருவாகி, அவரே அவர்களுடைய ஜீவனாகி

யிராவிட்டால் அவர்கள் ஒன்றுக்கும் உதவமாட்டார்கள். கிறிஸ்
தவர்களில் அநேகர் ஆவிக்குரிய காரியங்களில் ஒன்றுக்கும்
உதவாமல்தானே இருக்கிறார்கள். பெந்தெகொஸ்தே நாளில்
சாத்தான் புறம்பாகத் தள்ளப்பட்டான். ஆண்டவர் சிங்காசன
மேறி இழந்துபோன இருதயங்களைத் திரும்பவும் கைப்பற்றிக்
கொண்டார். கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களி
னாலும் நிறைந்தார்கள். தேவநாமம் மகிமைப்பட்டது. ஆண்ட
வர் நமக்கு வெளியேயிருந்து நம்மை இரட்சிக்க முடியாது.
அவரே நமது இரட்சிப்பு. ஒளி வேண்டுமானால் சூரியன்
வேண்டும். ஒளியை சூரியனிலிருந்து பிரிக்கமுடியாது. இரட்
சிப்பை இரட்சகரிலிருந்து பிரிக்க முடியாது. அவர் புறம்பே
யிருந்து நமக்கு ஆகாரமோ, வஸ்திரமோ, பணமோ கொடுக்க
லாம். இரட்சிப்பின் ஆசீர்வாதங்கள் அதைப்போல் எடுத்துக்
கொடுக்கிற காரியங்கள் அல்ல. ஆவியாயிருக்கிற கர்த்தர் நமது
ஆவியோடு சம்பந்தப்பட்டு, நமக்குள் கிரியை நடப்பித்து
நம்மை இரட்சிக்கிறார்.

இந்த உள்ளான மாறுதலை அறியாதவர்கள் கிறிஸ்தவர்கள்
அல்ல, இரட்சிக்கப்பட்டவர்களுமல்ல, தேவ ராஜ்யத்திற்குரிய
வர்களுமல்ல. இனி வெளிப்படும் மகிமையில் பிரவேசிக்கப்
போகிறவர்களுமல்ல. ஆயிரம் ஆராதனைகளுக்கு ஒழுங்காய்ப்
போனாலும், நற்கருணைப் பந்தியில் சேர்ந்தாலும், சபை
ஆசரிப்புக்காக பொருள் சகாயம் செய்தாலும், கிறிஸ்து நமது
இருதயங்களில் உருவாகாவிட்டால், அவர் நமக்குள் இராவிட்
டால் சகலமும் வீணாகும். பவுல் தமது குணப்படுதலைப்பற்றி
என்ன சொல்லுகிறார்? அவரிலுண்டான ஆச்சரியமான மாறுத
லுக்குக் காரணமென்ன? எந்த அப்போஸ்தலனாகிலும் அவர்
கிட்ட நெருங்கி அவரோடு தர்க்கிக்க முடியுமா? அவரைக்
கிறிஸ்தவனாக்க முடியுமா? பவுல் எப்படி இரட்சிக்கப்பட்டார்?
''தேவன் **தமது குமாரனை எனக்குள் வெளிப்படுத்தப்** பிரியமா
யிருந்தார்'' என்கிறார். அவர் ஜீவியம் மாற்றப்பட்டதற்கு இரகசி
யம் அதுதான். அது முதல் கிறிஸ்துவே பவுலின் இருதயத்தில்
வாசம்பண்ணி தமது அடியானைப் பரிபூரணமாய் ஆசீர்வதித்து
நடத்தினார்.



பிறப்பின்படி கிறிஸ்தவர்கள் தொகை பெருகலாம். இந்துக்
களுக்குப் பிறந்தவர்கள் இந்துக்கள். மகமதியருக்குப் பிறந்தவர்
கள் மகமதியர். அதுபோல கிறிஸ்தவர்களுக்குப் பிறக்கிறவர்கள்
கிறிஸ்தவர்களென்று எண்ணப்படுகிறார்கள். ஆனால் இயற்
கைப் பிறப்பு நம்மை கிறிஸ்தவர்களாக்காது, தேவ ராஜ்யத்திற்
குரியவர்களாக்காது. ''மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்
கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்.'' ஆவியினால்
உண்டாகும் மறுபிறப்பு அவசியம். இந்த மறுபிறப்பு கிறிஸ்து
நமக்குள் உருவாகுகிறதினாலே உண்டாகும். இது நாம் அறிந்
திருக்கிற நிச்சயமான அனுபவம். அவரை விசுவாசிக்கிறோம்,
விசுவாசிக்கிறோம் என்று வாயினாலே சொல்லுவதில் பிர
யோஜனமில்லை. கிறிஸ்துவை இருதயத்தில் ஏற்றுக்கொள்ளாத
விசுவாசம் விசுவாசமல்ல. ''அவருடைய நாமத்தின்மேல் **விசு
வாசமுள்ளவர்களாய்** அவரை **ஏற்றுக்கொண்டவர்கள்** எத்தனை
பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்
படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்.'' **விசுவாசமும் ஏற்றுக்
கொள்ளுதலும்** சேர்ந்தே வருகிறது. அவரை இருதயத்தில் ஏற்
றுக்கொள்ளும்போது மாம்சப் பிறப்பிலிருந்து நாம் நீங்கி தேவ
னாலே பிறந்து அவருக்குப் பிள்ளைகளாகிறோம். இந்தப் பிறப்
பைக் குறித்து பேதுரு: ''இயேசுகிறிஸ்து **மரித்தோரிலிருந்து
எழுந்ததினாலே,** அழியாததும் மாசற்றதும் வாடாததுமான சுதந்
திரத்திற்கேதுவாக ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது
மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை **மறுபடியும் ஜெநிப்பித்தார்''**
என்கிறார். உயிர்த்தெழுந்த இரட்சகர் தமது ஆவியின் மூலமாய்
நமக்குள் பிரவேசித்து, தமது ஜீவனாலே மறுபிறப்பை நம்மில்
உண்டாக்கி, நம்மை தேவ மக்களாக்குகிறார். இதுவே ஜீவனின்
உற்பத்தி.

# II

## ஜீவனின் வளர்ச்சி

இருதயத்தில் கிறிஸ்து **வசிப்பது** ஜீவனின் வளர்ச்சி. ''விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும்'' வேண்டிக்கொள்கிறேன் (எபே. 3:17). கிறிஸ்து நமக்குள் உருவாகிறது நமக்கு ஜீவனின் உற்பத்தியானால், அவர் நமக்குள்ளே **வாசமாயிருப்பது** அந்த ஜீவன் வளருவதாகும். ஆண்டவர் நமக்குள் பிரவேசித்து நமக்குள் ஜீவனையும் மறுபிறப்பையும் உண்டாக்குகிறார். நாம் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டு தேவனிடத்திற்கும், மரணத்தைவிட்டு ஜீவனுக்கும் திரும்புகிறோம். இந்த இரட்சிப்பின் மாறுதலுக்காக தேவனுக்கு ஸ்தோத்திரம்! ஆனால் காரியம் இங்கே முடிந்துபோகவில்லை. குழந்தை பிறந்தது சந்தோஷம்; அது வளரவேண்டும். செடி முளைத்தது நல்ல காரியம்; அது விருக்ஷமாக வேண்டும். ஜீவன் எங்கேயுண்டோ அங்கே அவசியம் வளர்ச்சியும் இருக்கவேண்டும். ''நான் அவைகளுக்கு ஜீவன் உண்டாகவும் அந்த ஜீவன் பரிபூரணப்படவும் வந்தேன்'' என்று இரட்சகர் சொல்லுகிறார். வளர்ச்சியில்லாவிட்டால் சாவுக்கேதுவான நோய் உள்ளே இருக்கும். ஆண்டவர் நமக்குள் உருவாகித் தமது ஜீவனாலே நம்மைப் பிழைக்கவைத்தபின் நம்மை விட்டுப் போய்விடுகிறவரல்ல. அவர் நமக்குள் என்றென்றைக்கும் வாசம்பண்ண விரும்புகிறார். ''கிறிஸ்து எனக்கு **ஜீவன்''** என்று சொன்ன பவுலே கலாத்தியர் நிருபத்தில்: ''இனி நானல்ல, கிறிஸ்துவே **எனக்குள் பிழைத்திருக்கிறார்''** என்றெழுதுகிறார். பிழைத்திருக்கிறார் என்பதற்கு **வாசம்பண்ணுகிறார்** என்று அர்த்தம். ''இருதயத்தில் கிறிஸ்து'' என்னும் விஷயத்தைப்பற்றி பவுல் முக்கியமாய்ப் பேசியிருந்தபோதிலும் இது அவர் உண்டுபண்ணின உபதேசமல்ல. இரட்சகர் தாமே தம்மை நமக்குள்ளே வெளிப்படுத்துவதைப்பற்றியும், நமக்குள்ளே வாசம் பண்ணுவதைப்பற்றியும் வாக்களித்திருக்கிறார். ''நாங்கள் வந்து அவனோடே **வாசம் பண்ணுவோம்''** என்கிறார்



(யோ. 14:21,23). அந்த வாக்கு தங்களில் நிறைவேறினதை அப்போஸ்தலரும் சீஷர்களும் தங்கள் அனுபவத்தில் கண்டார்கள்.

ஆண்டவர் நமக்குள் வசித்தால் மாத்திரம் நாம் அவருக்கொப்பாக வளரமுடியும். வளர்ச்சி இல்லையென்றால் உள்ள ஜீவனையும் இழந்துவிட நேரிடும். ''கிறிஸ்துவினுடைய நிறைவான **வளர்ச்சியின்** அளவுக்குத்தக்க பூரண புருஷராக வேண்டுமென்றும், தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் நாம் வளருகிறவர்களாயிருக்க வேண்டுமென்றும்'' பவுல் போதிக்கிறார். ''நமது கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் **வளருங்கள்''** என்று பேதுரு சொல்லுகிறார். நமக்குள் வசிக்கும் ஆண்டவர் திருவசனத்தின் மூலமாகவும், தமது ஆவியின் மூலமாகவும் நம்மை வளரச் செய்கிறார். இந்த வளர்ச்சியின் அவசியத்தை உணராமல் அநேகர் நின்றுவிடுகிறார்கள். இதுதான் மோசம். ஏராளமான தீமைகள் நம்மைச் சூழ்ந்திருக்கின்றன. புதிது புதிதான பாவ சோதனைகள் பலமாய் நம்மை மோதுகின்றன. எங்கு சென்றாலும் சாத்தான் தன் கண்ணிகளை வைத்திருக்கிறான். சமுத்திரத்தில் மறைந்திருக்கும் கண்ணிகளில் அகப்பட்டு எத்தனையோ கப்பல்கள் அமிழ்ந்துபோயின. அவனுடைய தந்திரங்களில் அகப்படாதிருக்கவேண்டுமானால் ஆவிக்குரிய முயற்சி அவசியம். நமக்குள் வசிக்கும் கிறிஸ்து சோம்பலாயிருப்பவரல்ல. அவர் இடைவிடாது உழைப்பவர். அவரோடுள்ள ஐக்கியம் நம்மைச் சும்மாயிருக்கவிடாது. ஆவிக்குரிய காரியங்களில் நாம் பிரியம் வைத்து, வாசிப்பதிலும், யோசிப்பதிலும், சம்பாஷிப்பதிலும், ஜெபிப்பதிலும், ஸ்தோத்திரிப்பதிலும், ஆண்டவர் நமக்குக் கொடுத்த கடமைகளை உற்சாகமாய் நிறைவேற்றுவதிலும் முயற்சியாயிருந்தால் சாத்தானுக்கு இடமிராது. பவுல் தீமோத்தேயுவுக்குக் கொடுத்த கட்டளையும் அதுதான். ''நான் வருமளவும் வாசிக்கிறதிலும், புத்தி சொல்லுகிறதிலும், உபதேசிக்கிறதிலும் ஜாக்கிரதையாயிரு'' என்றார். அசமந்தமும் சோம்பலும் பாவத்துக்கு வழி உண்டாக்கும். பாவம் ஜீவிய வளர்ச்சியைக் கெடுக்கும். முடிவில் நம்மைச் சாகடிக்கும்.

ஆகையால் சபைகளில் **இரட்சிப்பைப்** பிரதானமாகப் பிரசங்கிப்பதுபோல கிறிஸ்தவ **ஜீவிய வளர்ச்சியைப் பற்றியும்** பிரதானமாகப் போதிக்கவேண்டும். நரகம் தப்பி மோட்சம் சேரவேண்டுமென்கிற கவலையிருக்கிறதேயல்லாமல், ஆண்டவருக்கு மகிமையாக ஜீவிக்க வேண்டுமென்கிற கவலை அநேகருக்கில்லை. வளர்ச்சியில்லையானால் ஜீவன் பெற்ற பிள்ளைகள் உலகத்தால் இழுப்புண்டு கெட்டுப்போக நேரிடும். ஆராதனைகளுக்குப் போய் என்ன பலனைக் கண்டார்கள் என்று பிறர் குறைகூற நாம் இடங்கொடுக்கக்கூடாது. சபையார் பல நிலைமையுள்ளவர்களாய் ஆராதனைக்கு வருகிறார்கள். அவர்களுக்குள்ளே மனச்சோர்வுள்ளவர்கள், தொய்ந்துபோனவர்கள், இருதய கடினமுள்ளவர்கள், குடும்ப பாரத்தால் தவிக்கிறவர்கள், பாவத்தை மேற்கொள்ள முடியாதவர்கள், ஜெபம் கேட்கப்படாததால் ஆண்டவரோடு கோபித்துக்கொண்டவர்கள், ஏதோ ஒரு விஷயத்தில் தெளிவின்றித் திகைக்கிறவர்கள், இவ்வாறு பல அனுபவமுள்ளவர்களாய்த் தேவசமுகத்தில் கூடுகிறார்கள். வழக்கம்போல ஆராதனையை நடத்திவிட்டால் இவர்கள் போகிற வழியென்ன? பாவ மன்னிப்பாகிய இரட்சிப்பை மாத்திரம் கூறிக்கொண்டிருந்தால் பலவிதமாகத் தத்தளிக்கும் தேவ மக்களுடைய போராட்டங்கள் சந்தேகங்கள் எப்படி நீங்கும்? இவ்வாறான இடையூறுகள் நீங்காவிட்டால் அவர்கள் வளருவதெப்படி? கர்த்தருடைய ஊழியக்காரருடைய சிலாக்கியமும் உத்தரவாதமும் இங்கேதான் வெளிப்படுகிறது. ஆண்டவருக்குள் அனுதினமும் வளரும் கிருபைபெற்ற தேவ ஊழியர்கள், அவரால் போதிக்கப்பட்டு நடத்தப்படுகிறதால், ஆவியானவரின் அனுக்கிரகத்தால் அவர்கள் செய்யும் பிரசங்கங்கள் அவர்களுக்குத் தெரியாமலே பற்பல நிலைமையில் வந்திருக்கும் சபையாருக்கு ஆசீர்வாதமாயிருக்கின்றன. ஒருவர் தமக்குள்ளே கலங்கிக்கொண்டிருக்கிற அல்லது ஒரு குடும்பம் தங்களுக்குள் ஆலோசித்துக்கொண்டிருக்கிற மறைவான காரியங்களுக்கு ஏற்ற உத்தரவுகள் பிரசங்கத்தின் மூலமாய் அல்லது ஜெபத்தின் மூலமாய்க் கிடைத்து ஆறுதலடைந்ததை அறிந்திருக்கிறோம். இவ்வாறு இருதயங்களை அறியும் ஆண்டவர் அவரவருடைய நிலைமையில் அவர்களைச் சந்தித்து அவர்களை ஆசீர்வதிப்ப



தாலே அவர்கள் ஜீவியத்தில் வளர்ந்து பலப்படுவதற்கு ஏதுவாக இருக்கிறது. கடவுளைப் பயபக்தியுடன் வணங்கி அவரைப் போற்றுவதும், நாம் கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாக வளருவதும் ஆராதனைகளின் நோக்கமாயிருக்க வேண்டும்.

ஆவிக்குரிய கூட்டங்களில் எழுப்புதலடைந்து இரட்சிக்கப்பட்டதாக அறிக்கை செய்தவர்கள் அநேகர். அவர்கள் தாங்கள் குணப்பட்ட வருஷம் தேதிகளை வேதாகமத்தில் குறித்துக்கொள்வார்கள். தாங்கள் இன்ன காலத்தில், இன்னார் பிரசங்கத்தால் குணப்பட்டதாகவும் சொல்லிக்கொள்வார்கள். அது சரிதான். **இன்று** அவர்கள் எப்படியிருக்கிறார்கள்? அதுதான் கேள்வி. காலத்தைப் பார்த்தால் கிறிஸ்துவின் அறிவிலும் அவரது அன்பிலும் நிறைந்து அநேகருக்கு அவர்கள் ஆசீர்வாதமாயிருக்க வேண்டுமல்லவா? அவர்களைக் கவனிக்கிறவர்களுக்கு அவர்கள் கிறிஸ்துவின் சாயலைக் காட்டும் தேவ பக்தர்களாயிருக்கவேண்டியது நியாயம். அப்படியிருக்கிறார்களா? பின்னாகப் பார்த்து இன்ன காலத்தில் இரட்சிக்கப்பட்டோம் என்று தங்களைத் தேற்றிக்கொள்ளுகிறார்களே தவிர, ஆவிக்குரிய ஜீவியத்தில் வளரும்படி கவலைப்படவில்லையே. பலன் என்ன? பலவிதமான பாவங்களால் அவர்கள் மேற்கொள்ளப்பட்டு பிரயோஜனமற்ற மனுஷரானார்கள். அவர்கள் பேச்சு, செய்கை, காரியங்களில் மற்ற மனுஷருக்கும் அவர்களுக்கும் வித்தியாசமில்லை. இரட்சிப்பு, இரட்சிப்பு என்று பழைய பல்லவியைப் பாடிக்கொண்டிருக்கிறார்களேயன்றி கிறிஸ்துவில் நிலைத்திருந்து கனிகொடுக்கக் காணோம்.

கொரிந்து சபையார் கிறிஸ்துவை விசுவாசித்து தேவனுடைய பிள்ளைகளானார்கள். தங்கள் அறிவு, வரம், பாஷைகளைப்பற்றிப் பெருமை கொண்டார்களேயன்றி இரட்சகருடைய சாயலிலே வளரும்படி கவலைகொள்ளவில்லை. வளர்ச்சியில்லாததால் மாம்சத்துக்குரியவர்களானார்கள். காலத்தைப் பார்த்தால் கிறிஸ்துவுக்குள் புருஷராயிருக்கவேண்டிய அவர்கள் குழந்தைப் பருவமாகவேயிருந்தார்கள். பலமான ஆகாரமாகிய ஆவிக்குரிய மேலான போதனைகளை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவர்கள் ஜீவியம் பலப்படவில்லை.

மாம்சம் அவர்களை ஆண்டபடியால் அவர்களுக்குள் பொறாமை, வாக்குவாதம், பேதகங்கள், பிரிவினைகள், இழிவான பாவங்கள் காணப்பட்டன. கிறிஸ்து இருதயத்தில் வாசம்பண்ணும் விசுவாசத்தை இழந்தார்கள். அப்போஸ்தலன் அவர்களைப் பார்த்து, ''நீங்கள் விசுவாசம் உள்ளவர்களோ என்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்; உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள். இயேசுகிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறார் என்று உங்களை நீங்களே அறியீர்களா?'' என்று கேட்டார். மெய் விசுவாசிகள் உள்ளங்களில் கிறிஸ்து கட்டாயம் இருக்கவேண்டும் என்பது அவர் கருத்து. ஆண்டவர் நமக்குள் வாசம்பண்ண நாம் இடங்கொடாவிட்டால் வளர்ச்சி நின்றுவிடும், ஜீவியமும் பாழாகும்.

ஜீவிய வளர்ச்சிக்கு தேவ வசன ஆராய்ச்சி மிகவும் அவசியம். ''நீங்கள் **வளரும்படி,** புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்'' (*1 பேது. 2:3*). பெந்தெகொஸ்தே நாள் தொடங்கி அப்போஸ்தலர் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஆவியின் பலத்தோடு பிரசங்கித்தார்கள். வசனத்தைக் கேட்டு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள். ''இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டுவந்தார்.'' எங்கெங்கே கிறிஸ்து பிரசங்கிக்கப்பட்டு ஜனங்கள் விசுவாசிகளானார்களோ, அங்கெல்லாம் சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன. இவ்வாறு ஸ்தாபிக்கப்பட்ட சபைகளை அப்போஸ்தலன் சந்தித்து அவர்கள் கிறிஸ்துவில் நிலைத்திருக்கவும் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளரவும் வேண்டுமென்று சொல்லி அவர்களை விசுவாசத்தில் ஸ்திரப்படுத்திவந்தார். அந்தந்தச் சபைகளில் பல குறைவுகளும் பாவங்களும் உபதேசதர்க்கங்களும் காணப்பட்டபோது, அவர்களுக்கு எச்சரிப்பாகவும் போதனையாகவும் நிருபங்களை எழுதி அனுப்பினார். விசுவாசிகள் பாவமன்னிப்பைப் பெற்றது போதும் என்று அவர் எண்ணாமல், அவர்கள் கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாக **வளரவேண்டிய** அவசியத்தை வற்புறுத்தி எழுதினார். அவர் அக்காலத்தில் எழுதின நிருபங்கள் பிற்காலத்திலுள்ள சபைகளுக்குச் சிறந்த செல்வமாக ஆண்டவர் தந்திருக்கிறார். அவைகளின்



நோக்கமென்ன? ஆலயங்களில் பாடமாக வாசிக்கவும், வேத சாஸ்திரப் பாடசாலைகளில் மாணாக்கர் பரீட்சைக்காகப் படிக்கவும், குடும்பத்திலும் மற்ற சமயங்களிலும் எடுத்து வாசிக்கவு மாத்திரமா திருவசனம் கொடுக்கப்பட்டது? வேதாகமத்தில் ஏதோ மந்திர சக்தியிருப்பதுபோல அதைத் தலையின்கீழ் வைத்துப் படுத்தால் அல்லது வியாதியஸ்தர் கையில் கொடுத்தால் தீங்கு அணுகாதென்று நினைக்கிறவர்களுமிருக்கிறார்கள். வேதத்தை ஒழுங்காய் வாசித்துவிட்டாலே போதும் என்று தங்களைத் திருப்தி செய்துகொள்ளுகிறவர்களும் உண்டு. வேதம் கொடுக்கப்பட்ட நோக்கம் அதல்ல. நாம் கிறிஸ்துவை இருதயத்தில் ஏற்றுக்கொண்டு அவராலே மறுபிறப்படையவும், அவர் நமது இருதயத்தில் வாசம்பண்ணுவதால் பாவங்களை மேற்கொண்டு அவருடைய சாயலுக்கொப்பாக நாம் வளரவும், அவர் அன்பினால் நிறைந்து ஊழியம் செய்வதால் நாம் அநேகருக்கு ஆசீர்வாதமாயிருக்கவும், ஆண்டவர் அழைக்கும் வேளை வரும்போது சந்தோஷமாய் நித்திய மகிமைக்குள் பிரவேசிக்க ஆயத்தமாயிருக்கவும் வேதம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

''பெரோயா பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும், நற்குணசாலிகளாய் அல்லது உத்தமர்களாயிருந்தார்கள்'' (*அப். 17:11*). திருவசனத்தில் பற்றுதல் உள்ளவர்களுக்கு அது வழிக்கு ஒளியாகவும், அவர்கள் ஜீவியத்தைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துகிறதாகவுமிருக்கிறது. ஆண்டவரை நாம் கண்ணால் காண்பதில்லை. ஆனால் அன்று பேசின அவருடைய சத்தம் இன்றும் நமக்குள் தொனிக்கிறது. நமது உள்ளம் கொழுந்துவிட்டு எரிகிறது. இரட்சகர் தங்கள் இருதயங்களில் வசிக்கப்பெற்ற தேவ மக்கள் திருவசனத்தைப் படிக்கும்போது, அங்கே விலக்கப்பட்டிருக்கும் தீய குணங்கள் தங்களைவிட்டு நீங்கியிருக்கின்றனவாவென்றும், அங்கே கற்பித்திருக்கும் திவ்ய லட்சணங்கள் தங்களுக்குக் கிடைத்திருக்கின்றனவாவென்றும் பார்த்து, தங்களில் உண்டாயிருக்கும் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக

ஆண்டவரை ஸ்தோத்திரிக்கிறார்கள். இன்னும் தங்களைவிட்டு நீங்கவேண்டிய குறைவுகளையும், தாங்கள் இன்னும் பெற்றுக் கொள்ளாத ஆசீர்வாதங்களையும் வசனங்களில் கண்டால், வாசித்துக்கொண்டிருக்கும்போதே தங்கள் கண்களைக் கர்த்த ரிடம் உயர்த்தி, அவ்வாக்கியங்கள் தங்களில் நிறைவேறும்படி ஜெபிக்கிறார்கள். அவர்கள் பூரணராகிவிடவில்லை. ஆனால் தங்களுக்குள் வசிக்கும் கிறிஸ்துவின் பலத்தால் அவருக்கொப் பாக வளர்ந்துகொண்டே போகிறார்கள். இரட்சிக்கப்படாதவர் கள் வேதத்தில் வைக்கும் மூடநம்பிக்கையால் என்ன பிரயோஜ னம்? தங்கள் ஜீவியத்தில் பாழாய்ப்போன இஸ்ரவேலர் பெலிஸ்தரை மேற்கொள்ளுவதற்குக் கர்த்தருடைய பெட்டியை நம்பினதுபோலிருக்கும். ஜெயிப்போம் என்று நினைத்துப் பெட்டியைத் தங்கள் நடுவில் கொண்டுவந்தார்கள். அந்தப் பெட்டி அவர்களை இரட்சிக்கவில்லை. சத்துருக்கள் கைகளில் அகப்பட்டு மடிந்தார்கள்.

ஜீவியத்தை மாற்றாத வேத அறிவு வீண். சுயாதீன மிஷன் வைத்து நடத்தின ஓர் மிஷனெரி, பிரசங்கியார் ஒருவரை வந்து கூட்டங்கள் நடத்தும்படி அழைத்திருந்தார். அவரைச் சந்திக்க ஸ்டேஷனுக்கு ஒருவரும் போகவில்லை. அது புது இடமா யிருந்தபடியால் இரவில் போய்ச் சேர்ந்த பிரசங்கியாருக்கு வழி தெரியாமல், வெகுநேரம் அங்குமிங்கும் அலைந்து, நடுராத்திரி யில் கிறிஸ்தவர் ஒருவர் வீட்டையடைந்து அங்கே இரவைப் போக்கினார். காலையில் மிஷனெரியிடம் அந்தப் பிரசங்கியார் போனபோது: சுகமாய் வந்து சேர்ந்தீரா? எல்லாம் சௌகரியமா யிருந்ததாவென்று கேட்டார். பிரசங்கியார் ஒன்றும் சொல்ல வில்லை. கூட்டங்கள் முடிந்தபின் பிரசங்கியார் தம்மிடத்திற்குப் போக ரயில் ஏறினார். மிஷனெரியும் அதே வண்டியில் போக வேண்டியதிருந்ததால் இருவரும் ஒன்றாகப் பிரயாணஞ் செய் தார்கள். மிஷனெரி வேதாகமத்தைத் திறந்து ரோமர் ஆறாம் அதிகாரத்தில், நமது பழைய மனுஷன் கிறிஸ்துவோடுகூட சிலுவையிலறையப்பட்டான், பாவ சரீரம் ஒழிந்தது, இனி நாம் பாவஞ் செய்யவேண்டியதில்லை என்ற வசனங்களை எடுத்து



பிரசங்கியாரிடம் பேசினார். பிரசங்கியார் அவரைப் பார்த்து: ஐயா, உங்கள் வேத சாஸ்திரப் போதனையை ஒரு பக்கம் வைத்துவிடுங்கள்; உங்கள் அன்பும் அனுதாபமும் எனக்குக் கிடைத்தால் போதும் என்றார். நமக்கு எவ்வளவு வேத அறிவு இருந்தாலும் அன்பில்லையென்றால் நாம் ஒன்றுமில்லை. அன்பு மயமான கிறிஸ்து நமக்குள் வசித்தால் மாத்திரம் நாம் அன்பர் களாகக்கூடும்.

நமது ஜீவியத்தைக் குறித்து நமக்கு **நிச்சயம்** வேண்டும். ''நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்'' என்று பவுல் சொன் னார். கிறிஸ்தவர்களில் அநேகருக்கு ஆவிக்குரிய காரியங்களில் சிரத்தையில்லை. பூமிக்குரிய காரியங்களில் சர்வ ஜாக்கிரதையா யிருக்கிறார்கள். காணப்படுகிறவைகள் அநித்தியம் என்பதை யும், காணப்படாதவைகள் நித்தியம் என்பதையும் அவர்கள் யோசிக்கிறதில்லை. அவர்களுடைய ஜீவன், பலம், நேரம், அறிவு யாவும் இம்மைக்கென்றே செலவழிக்கப்படுகின்றன. சரீர க்ஷேமங்களைப்பற்றி என்ன கேட்டாலும் உடனே பதில் சொல்லுவார்கள். ஆவிக்குரிய காரியங்களைப்பற்றி விசாரித் தால் மௌனமாயிருப்பார்கள். ஒருவேளை வாய் திறந்து பேசி னாலும்: இப்போ நமக்கு என்ன தெரியும்? எல்லாம் கடைசி யிலேதான் தெரியும் என்பார்கள். கிறிஸ்தவர்கள் என்னும் பேரையும் விட்டுவிடுகிறதில்லை. என்ன பிரயோஜனம்?

ஜாதிகளை அழிப்பதற்கும், தேசங்களைப் பிடிப்பதற்கும், ஆஸ்திகளைக் கொள்ளையடிப்பதற்கும் கிறிஸ்துவின் போதனை விரோதமாயிருக்கிறதென்று ஐரோப்பாவிலுள்ளவர்கள் கிறிஸ்து மார்க்கத்தைத் தள்ளிவிட்டார்கள். அது சரிதான். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவர் மாதிரியின்படி நடக்கிறதாயிருந்தால் இப்படிப்பட்ட அக்கிரமங்களையும் பழிபாதகங்களையும் துணிந்து நிறைவேற்ற முடியுமா? நமக்கோ அவ்வளவு தைரிய மில்லை. ஆண்டவரை மறந்து நமது இஷ்டம்போல் பாவ வழிகளில் நடந்தாலும் **கிறிஸ்தவர்கள்** என்கிற பேரை நாம்

விட்டுவிடுகிறதில்லை. கிறிஸ்துவோ, கிறிஸ்து இல்லையோ நாம் ஒரு சபையை ஒட்டிக்கொண்டிருக்க விரும்புகிறோம். கிறிஸ்துவின்மேல் பற்றுதல் இல்லாதவர்கள் தாங்கள் கிறிஸ்த வர்களல்லவென்று சொல்லி சபையை விட்டு விலகிக் கொள் வார்களானால் தொகை குறையலாம், கிருபை குறையாது. அப்படி விலகவேண்டுமென்று நாம் சொல்லுகிறதில்லை. உள் ளத்தில் **உண்மை** வேண்டும் என்றே விரும்புகிறோம். கூட்டத் தோடு கூட்டமாய் ஆலயத்திற்குப் போய், ஆராதனைக்கு இருந்து, வீடு திரும்புவது வழக்கமாயிருக்கிறது. குணமோ மாறவில்லை. நாம் காரியங்களை நுட்பமாய் யோசிக்கவேண் டும். ஆவிக்குரிய நித்திய காரியங்களில் ஏனோதானோவென்று இருக்கக்கூடாது. என் ஆத்ம நிலைமை என்ன? நான் ஏன் கிறிஸ்தவனாயிருக்கிறேன்? நான் கிறிஸ்தவனாயிருப்பதால் கண்ட பலன் என்ன? எனக்கும் கிறிஸ்துவுக்குமுள்ள சம்பந்தம் என்ன? அவரை என் இரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவர் என் உள்ளத்தில் வசிக்க இடங்கொடுத்திருக்கிறேனா'' அவரைப் பார்க்கிலும் வேறெதையாகிலும் நான் அதிகமாய் நேசிக்கி றேனா? என்னை முழுவதுமாய் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத் திருக்கிறேன் என்பதை அவர் அறிவாரா? என் ஜீவியத்தில் கிறிஸ்துவின் சாயலை மற்றவர்கள் காண்கிறார்களா? என் ஜீவி யம் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கிறதா? அல்லது சாத்தா னால் வஞ்சிக்கப்பட்டு, தகாதவர்களோடு உறவாடி, பாவ வழியில் நடந்து என் ஆத்துமாவைப் பாழாக்கி வருகிறேனா? நான் செய்த தீமையினால் அவமானப்பட்ட குடும்பங்க ளுண்டா? வியாகுலமடைந்த மனுஷருண்டா? இருதயங்களைச் சோதித்தறிகிற ஆண்டவர் பார்வையில் இந்நேரத்தில் நான் எப்படியிருக்கிறேன்? இப்படிப்பட்ட தற்பரிசோதனை நமக்கு மிகவும் அவசியம். தேவ காரியங்களில் **உண்மை** வேண்டும். இப்படியுமில்லாமல் அப்படியுமில்லாமல் செத்த மீன் வெள்ளத் தால் இழுப்புண்டு போவதுபோல நமது காரியம் இருக்கக் கூடாது. ''கர்த்தர் தெய்வமானால் அவரைப் பற்றிக்கொள்ளுங் கள்; பாகால் தெய்வமானால் அவனைப் பற்றிக்கொள்ளுங்கள்;



எந்த மட்டும் இரண்டு நினைவுகளினால் குந்திக் குந்தி நடப்பீர் கள்?'' என்று எலியா சீர்கெட்ட இஸ்ரவேலரைக் கேட்டார். அதே கேள்விதான் நமக்கும். கிறிஸ்து கடவுளுடைய குமாரன் என்பதும், சர்வத்தையும் உண்டாக்கினவர் என்பதும், நம் மீதுள்ள கிருபையினால் உலகத்துக்கு வந்து, நம்மை இரட்சிக்கும் படி தமது ஜீவனைக் கொடுத்து, உயிர்த்தெழுந்து, வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமுள்ளவராய் பிதாவின் மகிமையில் அவர் வீற்றிருப்பதும், காலம் நிறைவேறும்போது உலகத்தை நியாயந்தீர்க்கும்படி அவர் வருவதும் உண்மையென்று நாம் நம்பினால், அவர் பாதத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து பணிந்து கொண்டு, அவரை முழுமனதோடே இருதயத்தில் ஏற்றுக் கொண்டு, அவருக்கென்றே பிழைக்கவேண்டும். இவைகள் பொய்யானால் இந்நேரமே கிறிஸ்துவைத் தள்ளிவிட்டு, கிறிஸ்த வன் என்கிற பேரையும் கிறுக்கிவிட்டு, மனங்கொண்டபடி நடந்து அழியவேண்டும். நடுநிலைமை கிடையாது. இது வீண் பேச்சல்ல.

கிறிஸ்து நமது இருதயத்தில் வசிக்கும்போது நம்மைத் தமது சாயலுக்கொப்பாக மாற்றுகிறார். அவரால் இரட்சிக்கப் பட்டவர்கள் அவர் மாதிரியின்படி நடக்கவேண்டுமென்று கற் பிக்கிறார். ''நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன்; என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்'' என்றும், ''நான் உங்களுக் குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரி யைக் காண்பித்தேன்'' என்றும் சொல்லுகிறார். அவர் தமது மரணத்தால் நமக்கு இரட்சகரானதுபோல, தமது ஜீவியத்தால் நமக்கு மாதிரியானார். மனுஷன் இழந்துவிட்ட **தேவசாயல் தேவரூபம்** இன்னதென்பதை தமது ஜீவியத்தால் காண்பித்து, நாமும் அவரைப்போல் நடக்கும்படி போதிக்கிறார். அப்போஸ் தலருடைய போதனைகளும் அதுவே. ''அவருக்குள் நிலைத் திருக்கிறேன் என்று சொல்லுகிறவன், **அவர் நடந்தபடியே** தானும் நடக்கவேண்டும்'' என்று யோவானும், ''நீங்கள் தமது அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு **மாதிரி**

யைப் பின்வைத்துப் போனார்'' என்று பேதுருவும் எழுதியிருக்கிறார்கள். இது விஷயத்தில் பவுலின் போதனை சிரேஷ்டமாயிருக்கிறது. ''கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது'' என்றும், விசுவாசிகள் தாழ்மையிலும், சாந்தத்திலும், பொறுமையிலும், மன்னிப்பிலும், அன்பிலும், சகிப்பிலும், நன்மை செய்வதிலும், பாடனுபவிப்பதிலும் கிறிஸ்துவைப்போல் நடந்துகொள்ள வேண்டுமென்றும் திட்டமாய்ப் போதித்திருக்கிறார்.

கிறிஸ்து நமக்குள் வசிப்பது மெய்யானால் நமது மூலமாய்த் தம்மை வெளிப்படுத்தாதிரார். அவருடைய ஊழிய நாட்களில் சில சமயங்களில் தனித்திருக்க விரும்பி வீட்டிற்குள் சென்று மறைந்திருக்கும்படி பார்த்தார். அவரால் மறைந்திருக்க முடியவில்லை. ஜனங்களை இழுத்துக்கொள்ளும் அன்பின் காந்தத்தைத் தமக்குள் வைத்துக்கொண்டு அவர் எப்படி மறைந்திருக்க முடியும்? அவர் நமக்குள் வசிப்பது மெய்யானால் அவர் மறைந்திருக்க முடியாது. தாம் எப்படிப்பட்டவர் என்பதை நமது ஜீவியத்தில் வெளிப்படுத்துவார். வீட்டுக்குள் வசிப்பவன் இன்னான் என்பதை அந்த வீடு வெளிப்படுத்தும். ஒரு வீட்டைப் பார்க்கிறோம். ஜன்னல்கள் உடைந்து, கதவுகள் தகர்ந்து பாழாய்ப் போயிருக்கின்றன. அழுக்குத் துணிகள் அங்குமிங்கும் தொங்குகின்றன. சாமான்கள் ஒழுங்கீனமாய்ச் சிதறிக் கிடக்கின்றன. எங்கும் குப்பையும் அழுக்கும் காணப்படுகின்றன. இந்த அலங்கோலமான தோற்றத்திற்குக் காரணமென்ன? உள்ளே வசிக்கிறவன் ஓயாக் குடிகாரனும் துன்மார்க்கனுமான மனுஷன். சற்று அப்புறம் சென்று வேறொரு வீட்டைப் பார்க்கிறோம். ஆ, எவ்வளவு அழகு! எவ்வளவு சுத்தம்! எல்லாம் நன்றாயிருக்கிறது. காரணமென்ன? உள்ளே வசிப்பவர்கள் கல்வி அறிவும், நாகரிகமும், மேலான அந்தஸ்துமுள்ளவர்கள். வீட்டுக்குள் வசிப்பவர்கள் எப்படியோ, அதுபோலவே அந்த வீடும் இருக்கும்.



ஆண்டவர் நமக்குள் வசிக்கும்போது அவரே வீட்டுக்கு எஜமானாகிறார். உள்ளான காரியங்களைத் தமது இஷ்டம்போல் ஒழுங்குபடுத்துகிறார். தமக்குப் பிரியமில்லாதவைகளை வீட்டைவிட்டு அகற்றி, தமது பரம ஆசீர்வாதங்களினால் நமது ஜீவியத்தை அலங்கரிக்கிறார். அவரைப்போலவே அவர் வசிக்கும் வீடும் இருக்கும். ''அவர்களுடைய கனிகளாலே அவர்களை அறிவீர்கள்'' என்று ஆண்டவரே சொன்னபடி, நமது செய்கைகள் நமக்குள் வசிப்பது யாரென்பதை வெளிப்படுத்திவிடும். நம்மில் கோபமும், மூர்க்கமும், பெருமையும், பிடிவாதமும், பகையும், இடும்பும், பொறாமையும், பொருளாசையும், பிரிவினையும், கலகமும், மற்றவர்களை அவமானப்படுத்துவதுமான தீய குணங்கள் காணப்படுமானால் சாத்தான் நமக்குள் வசிக்கிறான் என்பதற்குச் சந்தேகமில்லை. கிறிஸ்து நமக்குள் வசிப்பது மெய்யானால் இத் தீய குணங்கள் அழிந்து, அவருடைய சிறந்த தேவலட்சணங்கள் நம்மில் காணப்படும் என்பது நிச்சயம்.

கிறிஸ்துவைப்போல் நடக்க நம்மால் முடியுமா? அவர் பரிசுத்தர்; நாம் அசுத்தர். அவர் வல்லவர்; நாம் பலவீனர். அப்படியிருக்க, அவரது ஒப்பற்ற மாதிரியை நாம் பின்பற்றி நடப்பதெப்படி என்று கேட்கலாம். அவர் நடந்ததுபோல நாம் நடக்க முடியவே முடியாது. அவரைப் பார்த்து நடப்போம் என்று நினைப்போமானால் அது காப்பிப் புஸ்தகத்தின் தலைப்பிலுள்ள அச்செழுத்துக்களைப் பார்த்து பிள்ளைகள் அடியில் கிறுக்குகிறதுபோலிருக்கும். அவரைப்போல் நடக்கவேண்டும் என்கிற ஆசை நமக்குப் பூரணமாயிருக்கவேண்டும். ஆனால் நமது சுய பலத்தால் நடக்க முடியாதென்பதையும் திட்டமாய் அறிந்துகொள்ள வேண்டும். அவரோடிருந்த சீஷரால் அவர் நடந்தபடி நடக்கமுடியவில்லை. மாதிரி காண்பித்தவரே தமது மாதிரியின்படி நம்மை நடக்கப்பண்ணுகிறவர். பூமியிலே நமக்கு மாதிரி காண்பித்தார்; பரலோகம் சென்று தமது ஆவியின் மூலம் நமக்குள் வந்து தமது அடிச்சுவடுகளைப் பின்பற்றி

நடக்கப் பலப்படுத்துகிறார். இதன் உண்மையை அப்போஸ்தல
ரும் சீஷர்களும் பெந்தெகொஸ்தே நாளில் கண்டார்கள். **அவர்**
**நமக்குள் வசித்து, நமது மூலமாகத் தம்மை வெளிப்படுத்துவதே**
**அவருடைய மாதிரியின்படி நாம் நடப்பதாகும்.** நமது சொந்த
ஜீவியமல்ல, அவரது ஜீவியமே நமது ஜீவியமாகிறது. நாமல்ல,
கிறிஸ்துவே நமக்குள் பிழைத்திருக்கிறார். இதுதான் வழி.

ஒவ்வொரு ஜீவனும் தன் தன் இயற்கையை வெளிப்படுத்து
கிறது. ஆட்டின் ஜீவன் சாந்தம்; ஓநாயின் ஜீவன் பட்சித்தல்.
கரும்பின் ஜீவன் மதுரம்; வேம்பின் ஜீவன் கசப்பு. சாத்தானின்
ஜீவன் இருள்; கிறிஸ்துவின் ஜீவன் ஒளி. ''அவருக்குள் ஜீவ
னிருந்தது; அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது.'' அவர்
நமக்குள் ஜீவனாக வசிக்கும்போது, நமது ஜீவியம் பிரகாச
முள்ளதாயிருக்கும். அவரைப்போல் பிழைத்தல் ஒரே நாளில்
ஆகிற காரியமல்ல அல்லது ஒரே விசுவாசியால் ஆகிற காரியமு
மல்ல. எல்லாப் பரிசுத்தவான்களும் சேர்ந்துதான் முழு கிறிஸ்து
வைக் காட்ட முடியும். நாம் தனித் தனியே எவ்வளவுதூரம்
அவரைப்போல் மாறக்கூடுமோ அவ்வளவும் நமக்கு ஆசீர்வாதந்
தான். தவறுதல்கள் காணப்படலாம். சோர்ந்து போகக்கூடாது.
அவர் நமக்குள் வசிக்கிறார் என்னும் விசுவாசத்தை விட்டுவிடக்
கூடாது. ''**விசுவாசத்தினாலே** கிறிஸ்து உங்கள் இருதயங்களில்
வாசமாயிருக்கவும்'' என்கிறார். அவிசுவாசம் அவரைப் புறக்
கணிக்கும். விசுவாசமோ அவரை ஏற்றுக்கொண்டு சொந்தமாக்
கும். ஒவ்வொருநாளும் நம்மையும் நமக்குரிய சகல காரியங்க
ளையும் ஆண்டவருக்கு மனப்பூர்வமாக ஒப்புவித்து, அவரரு
ளும் பலத்தால் எங்கும் எல்லாரிடத்திலும் அவருக்குப் பிரிய
மாக நடந்துகொள்ள வேண்டும். இந்த நல்ல ஜீவியத்தைக்
கெடுக்க சாத்தான் மும்முரமாக வேலை செய்வான். நமக்குள்
ளும் புறம்பேயும் போராட்டங்களை உண்டாக்குவான். ''தமக்கு
விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட விரோதங்களைச்
சகித்த அவரையே நினைத்துக்கொண்டு'' அவர் கிருபையால்
சாந்தமாய் நடந்துகொள்ள வேண்டும். திருவசனத் தியானத்தா



லும் ஜெபசிந்தையாலும் அவரோடுள்ள ஐக்கியத்தைக் காத்துக்
கொள்ள வேண்டும். இவ்வாறு அனுதினமும் இடைவிடாமல்
அவரில் நிலைத்திருந்து பிழைக்கும்போது படிப்படியாய் அவரு
டைய சாயலுக்கொப்பாக வளரும் பாக்கியம் நமக்குக் கிடைக்
கும். இதுவே கிறிஸ்து நமக்குள் வசிப்பதால் உண்டாகும்
ஜீவனின் வளர்ச்சி.

# III

## ஜீவனின் முயற்சி

இருதயத்தில் கிறிஸ்து கிரியை செய்வது ஜீவனின் முயற்சி. ''அதற்காக நான் **எனக்குள்ளே** வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பெலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன்'' (கொலோ. *1:29*). *(1)* கிறிஸ்து **நமக்குள் உருவாகிறது** ஜீவனின் உற்பத்தி. அவரே நமது ஜீவனாயிருந்து மறுபிறப்பை உண்டாக்கி, நம்மைத் தேவ மக்களாக்குகிறார். *(2)* அவர் **நமக்குள் வசிப்பது** ஜீவனின் வளர்ச்சி. அவர் நமக்குள் வசிப்பதாலே நாம் அவருடைய மாதிரியின்படி நடக்கவும், அவருடைய சாயலுக்கொப்பாக வளரவும் கிருபை செய்கிறார். நம்மைத் தமது பரம குணங்களால் அலங்கரித்து தம்மை நமது மூலமாக வெளிப்படுத்துகிறார். *(3)* அவர் **நமக்குள் வல்லமையாய்க் கிரியை செய்வதாலே** நாம் அவருடைய ராஜ்யத்திற்கென்றும், ஆத்துமாக்கள் இரட்சிப்புக்கென்றும் வேலை செய்யும்படி நம்மைப் பெலப்படுத்துகிறார். நமது இரட்சிப்போடும் ஜீவிய வளர்ச்சியோடும் நம்மை நிறுத்திவிடுகிறவரல்ல. நம்மை இரட்சித்து பிறரை நாம் இரட்சகரண்டை நடத்தும்படி அனுப்புகிறார். நம்மை ஆசீர்வதித்து மற்றவர்களுக்கு நாம் ஆசீர்வாதமாயிருக்கும்படி செய்கிறார். எங்கள் மட்டுக்குப் பக்தியாயிருந்தால் போதாதா, மற்றவர்களைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டுமா என்கிறார்கள். ''எங்கள் மட்டுக்குப் பக்தி'' என்பது உருப்படாது. விளக்கைக் கொளுத்தி அதை மரக்காலால் மூடினால் உள்ளே புகை நிறைந்து விளக்கு அவிந்துபோகும். இறைக்கிற கிணறு ஊறும். நீர்ப்பாய்ச்சுகிறவனுக்கு நீர் பாய்ச்சப்படும். கொடுக்கிறவர்களுக்கு இன்னும் அதிகமாய்க் கொடுக்கப்படும். இலவசமாய் நாம் பெற்ற கிருபைகளை இலவசமாய்க் கொடுக்க



வேண்டும். இதுவே இரட்சிப்பின் ஒழுங்கு. ஆண்டவருடைய அன்பை அறிந்து அவரது இரட்சிப்பை அனுபவிக்கிறவர்கள் சும்மாயிருக்க முடியாது. ஜீவியத்தில் மாறுதலடைந்த தேவனுடைய பிள்ளைகள் தங்கள் அறிவிற்கும் பலத்துக்கும் தக்கதாக எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படி பிரயாசப்படுவார்கள். ஒழுங்காய்ச் சம்பளம்பெற்று வேலை செய்யும் கண்காணிமார், குருமார், பிரசங்கிகள் முதலான ஊழியர்கள் பிற்காலத்தில் திருச்சபையில் ஏற்படுத்தப்பட்டார்கள். ''சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாக வேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார்'' *(1* கொரி. *9:14)*. ஆனால் அநேகருடைய விஷயத்தில் சுவிசேஷ ஊழியம் வேறு வேலைகளைப்போல பொருள் சம்பாதிக்கும் ஆதாயத் தொழிலாக எண்ணப்படுவது மிகவும் விசனமான காரியம். பொருளே நமது பிரதான நோக்கமாயிருக்குமானால் ஆவியானவருக்கு இடமிராது. வேலையிலும் பலனிராது. ஆதிச் சபையில் இரட்சிக்கப்பட்ட புருஷர் ஸ்திரீகள் அனைவரும் எங்கும் கிறிஸ்துவைப் பிரசங்கித்தார்கள். அப்படிச் செய்யும்படி ஒருவரும் அவர்களைக் கட்டாயப்படுத்தவில்லை; அவர்களோடு சம்பளம் பேசவில்லை. தாங்கள் கிருபையாய்ப் பெற்றுக் கொண்ட இரட்சிப்பின் ஆசீர்வாதங்களை அவர்களால் அடக்க முடியாமல் இருதயத்தின் நிறைவின்படி எங்கும் பிரஸ்தாபித்தார்கள். இன்றும் அவர்களைப்போல அன்பினால் ஏவப்பட்டு ஊழியம் செய்யும் தேவ மக்கள் இருக்கிறார்கள். பள்ளிக்கூடங்களில் வேலை செய்யும் உபாத்திமார், ஆஸ்பத்திரியில் வேலை செய்கிறவர்கள் மற்றும் பற்பல துறைகளில் உத்தியோகம் பார்க்கிறவர்கள் இரட்சிக்கப்பட்டவர்களாயிருந்தால், தங்களைச் சூழ்ந்திருக்கும் சோதனைகள் தொந்தரவுகளால் சோர்ந்து போகாமல், எகிப்து தேசத்தில் யோசேப்பு கர்த்தரோடு சஞ்சரித்தது போலவும், பாபிலோனில் தானியேல் கர்த்தருக்குப் பிரியமாய் நடந்துகொண்டதுபோலவும் கிறிஸ்துவோடுள்ள ஐக்கியத்தினால் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக நடந்துகொள்வார்கள்.

ஆண்டவர் யார் யாரை இரட்சிக்கிறாரோ அவர்களைத் தமது சாட்சிகளாக வேலை செய்யும்படி அனுப்புகிறார். பிதா அவரை மனுமக்களை இரட்சிக்கும்படி அனுப்பினதுபோல, இரட்சகர் நம்மைத் தமது இரட்சிப்புக்குச் சாட்சிகளாயிருக்கும்படி அனுப்புகிறார். சாட்சி என்பது ஜீவிய சாட்சி, ஊழிய சாட்சி என இருவகைப்படும். இவ் இருவகைச் சாட்சியைப்பற்றி அப்போஸ்தலன் தமது அனுபவத்தைச் சொல்லுகிறார்: ''விசுவாசிகளாகிய உங்களுக்குள்ளே நாங்கள் எவ்வளவு பரிசுத்தமும், நீதியும், பிழையின்மையுமாய் நடந்தோம் என்பதற்கு நீங்களும் சாட்சி, தேவனும் சாட்சி'' என்கிறார் (1 தெச. 2:10). இது ஜீவியத்தைப்பற்றிய சாட்சி. தமது ஊழிய சாட்சியைப்பற்றி: ''எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடே மாத்திரமல்ல, வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும், முழு நிச்சயத்தோடும் வந்தது'' என்கிறார் (1 தெச. 1:5). ஜீவியத்திலும் வல்லமை, ஊழியத்திலும் வல்லமை. ஜீவியத்துக்கும் ஊழியத்துக்கும் நெருங்கிய சம்பந்தமிருக்கிறது. ஒன்று கெட்டால் மற்றதும் கெடும். ஆண்டவருக்குப் பிரியமில்லாத ஜீவியத்திலிருந்து அவருக்குப் பிரியமான ஊழியம் நடக்காது. சாட்சிகள் என்பதற்கு மாதிரிகள் (Samples) என்று அர்த்தம். ''நீங்கள் எனக்குச் சாட்சிகள்'' என்று ஆண்டவர் சொல்லும்போது, நாம் அவரைக் காண்பிக்கும் சிறு சிறு மாதிரித் துண்டுகளாயிருக்க வேண்டுமென்பது அவருடைய கருத்து. எந்த மனுஷனும் பூரண கிறிஸ்துவைக் காண்பிக்க முடியாது. நம்மைக் கவனிப்பவர்கள் கொஞ்சமாவது கிறிஸ்துவின் சாயலை நம்மில் காண வேண்டும். அவர் நமக்குள் வசிப்பதினாலே மாத்திரம் அவருடைய சாயல் நம்மில் காணப்படும். நல்ல ஊழியத்திற்கு நல்ல ஜீவியம் அவசியம். தங்கள் ஜீவியத்தில் மாறுதல் இல்லாதவர்கள் மற்றவர்களுக்கு இரட்சிப்பைக் கூறி அறிவிப்பார்களானால் அது பொய்ச்சாட்சியாகும். ''நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன்'' என்று சொல்லக்கூடியவர்களே மெய்ச்சாட்சியாவார்கள். அவர்கள் ஊழியம் ஆசீர்வதிக்கப்படும்.



தேவ ஊழியத்தின் மகத்துவத்தை அநேகர் உணராதிருக்கிறார்கள். அப்போஸ்தலன் இந்த ஊழியத்தைக் குறித்து எவ்வளவோ மகிமையான காரியங்களைச் சொல்லியிருக்கிறார். ''தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி'' என்றும், ''இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல் தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்'' என்றும் எழுதுகிறார் (2 கொரி. 4:4,7). தாம் பெற்றுக்கொண்ட சுவிசேஷ ஊழியத்தைப்பற்றி அது மகிமையான பொக்கிஷம் என்கிறார்; அதை நிறைவேற்றவேண்டிய வல்லமை தேவன் அருளிய வல்லமை என்கிறார். இந்த மகத்துவமான ஊழியத்தை நாம் உண்மையோடும் பயபக்தியோடும் நிறைவேற்றுகிறோமா? அவருடைய வசனத்தை எப்பொழுது பிரசங்கித்தாலும் ''கிறிஸ்துவுக்குள் தேவ சந்நிதானத்தில் பேசுகிறோமா?'' நாம் எப்படிப்பட்டவர்களாயிருக்கிறோமோ, நமது ஊழியத்தின் பலனும் அப்படித்தானிருக்கும். அசுத்தமான ஊற்றிலிருந்து சுத்தமான ஜலம் வராது.

கர்த்தருடைய ஊழியத்தை வெகு லேசாக நினைத்துக்கொள்ளுகிறோம். என்ன, இது ஒரு பெரிய காரியமா? ஜெபம்பண்ணத் தெரியாதா? வேதம் வாசிக்கத் தெரியாதா? பாடத் தெரியாதா? பிரசங்கிக்கத் தெரியாதா? என்கிறோம். நாம் நினைக்கிறபடியே இக்காரியங்களை லேசாய் நடத்திவிடுகிறோம். பழைய ஏற்பாட்டில் ஓர் சரித்திரமோ, புதிய ஏற்பாட்டில் ஓர் உவமையோ அற்புதமோ எடுத்துப் பேசிவிட்டால் தீர்ந்தது. வார்த்தைகள் திருத்தமாகயிருக்கலாம், சத்தம் பலமாய்த் தொனிக்கலாம், கேட்கிறவர்கள் நம்மை கெட்டிக்காரப் பிரசங்கி என்றும் பேசிக்கொள்ளலாம். ஆண்டவர் என்ன சொல்லுவார்? அவருடைய பார்வையில் நாம் எப்படியிருக்கிறோம்? நமது ஜீவியத்தில் சுத்தமுண்டா? அவர் எடுத்து உபயோகிக்க விரும்பும் சுத்தமான பாத்திரமாயிருக்கிறோமா? நமது ஊழியத்தில் தேவ பலம் காணப்படுகிறதா? ஆண்டவருக்குப் பிரியமான ஜீவியமும் ஆவி

யின் பலத்தால் செய்யப்படும் ஊழியமும் நற்பலனைக் கொடுக்கும். சபையாரெல்லாரும் இரட்சிக்கப்பட்டு பரிசுத்தவான்களானால்தான் நாம் உத்தம ஊழியர்கள் என்று அர்த்தமல்ல. இயேசு கிறிஸ்து தாமே இன்று ஓர் சபையில் வேலை செய்தாலும் அவரை ஏற்றுக்கொள்ளுகிறவர்களும் இருப்பார்கள், நிர்விசாரிகளும் இருப்பார்கள். ஆனால் நாம் ஆண்டவருக்குப் பிரியமாய் நடந்து, அன்பினால் ஏவப்பட்டு உத்தம ஊழியம் செய்யும்போது, பலனை அவர் பார்த்துக்கொள்வார். பலனில்லாமல் போவதில்லை. நமது உத்தரவாதத்தை உண்மையோடு நிறைவேற்றினோம் என்கிற சமாதானம் நமக்குண்டு.

நமது **ஜீவியத்தைக்** குறித்தும் **ஊழியத்தைக்** குறித்தும் ஒரு காரியத்தை நாம் திட்டமாய் அறியவேண்டும். **இரண்டும் நம்மால் ஆகிறதல்ல.** இதிலேதான் அநேகர் தடுமாறுகிறார்கள். உள்ளத்தில் வசிக்கும் கிறிஸ்துவின் ஜீவியமே நமது ஜீவியம். உள்ளத்தில் கிரியை செய்யும் கிறிஸ்துவின் ஊழியமே நமது ஊழியம். உலகத்திலிருந்தபோது ஆண்டவர் தமது ஊழியத்தை முடித்தாரென்றும், இனி நாமே **அவருக்காக** வேலை செய்ய வேண்டுமென்றும் எண்ணலாகாது. ஆண்டவர் பூமியில் செய்த ஊழியத்தைக் குறித்து: ''அவர் எடுத்துக்கொள்ளப்பட்ட நாள் வரைக்கும் செய்யவும் உபதேசிக்கவும் **தொடங்கின** எல்லாவற்றையும் குறித்து முதலாம் பிரபந்தத்தை உண்டுபண்ணினேன்'' என்று லூக்கா தமது சுவிசேஷத்தில் சொல்லுகிறார். அவர் எழுதின இரண்டாம் பிரபந்தம் அப்போஸ்தலர் நடபடி புஸ்தகம். அதிலே ஆண்டவர் பரலோகம் போய் தமது ஆவியின் மூலமாய் தாம் பூமியிலிருந்தபோது ''செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கின'' வேலையை நிறுத்திவிடாமல், அப்போஸ்தலர் மூலமாகவும் உத்தம விசுவாசிகள் மூலமாகவும் **அவரே** நடப்பித்துக்கொண்டு போகிறார் என்பதை எடுத்துக் காண்பிக்கிறார். அப்போஸ்தலர் நடபடியில் நாம் காண்கிற இரட்சிப்பின் வேலைகள் ஆண்டவர் தமது ஆவியின் மூலமாக **அவரே** செய்த வேலைகள். அவர் பரலோகத்திற்குப் போன பின்பு அப்போஸ்த



லர் புறப்பட்டுப்போய் எங்கும் பிரசங்கம்பண்ணினார்கள் என்றும், ''கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியை நடப்பித்தார்'' என்றும் மாற்கு சொல்லுகிறார். இங்கே கர்த்தர் அவர்களோடு கூட இருந்தார் என்பது முன்பு சரீரத்திலே அவர்களோடு இருந்ததுபோல் அல்ல. பெந்தெகொஸ்தே நாள் முதல் அவர் தமது ஆவியின் மூலமாய் **அடியார்களுக்குள்ளே** வசித்துக் கிரியை நடப்பித்து வருகிறார். இதன் உண்மையை நடபடி புஸ்தகத்திலே காண்கிறோம்.

பெந்தெகொஸ்தே நாளில் அப்போஸ்தலர் ஆவியின் பலத்தோடு சாட்சி கொடுத்ததை ஜனங்கள் கேட்டுப் பிரமித்தபோது, பேதுரு அவர்களைப் பார்த்து: ''மகிமையடைந்த ஆண்டவர் பரிசுத்த ஆவியினாலே நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார்'' என்றார். பிறவிச் சப்பாணி நடக்கிறதைக் கண்டு ஜனங்கள் மிகவும் ஆச்சரியப்பட்டுப் பிரமித்தபோது: ''இஸ்ரவேலரே, நீங்கள் இப்படி ஆச்சரியப்படுகிறதென்ன? நாங்கள் எங்கள் சுய சக்தியினாலாவது எங்கள் சுய பக்தியினாலாவது இவனை நடக்கப்பண்ணவில்லை. இயேசு கிறிஸ்துவே இவனுக்கு இந்தச் சர்வாங்க சுகத்தைக் கொடுத்தார்'' என்றார். நடபடி புஸ்தகம் முழுவதும் கிறிஸ்துமயமாகயிருக்கிறது. ஸ்தேவான் விஷயத்தில் கிறிஸ்துவைக் காண்கிறோம். கிறிஸ்துவைப்போல அவரையும் நகரத்திற்குப் புறம்பே தள்ளிக் கொலைசெய்தார்கள். ஆண்டவர் சிலுவையிலிருந்து: ''பிதாவே, உமது கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்'' என்றும், ''பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே'' என்றும் ஜெபித்தார். ஸ்தேவான் மரிக்கும் சமயத்தில் அதே சத்தம் தொனிக்கிறது. ''கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளும்'' என்றும், ''ஆண்டவரே. இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்'' என்றும் வேண்டிக்கொண்டார். பேதுரு விஷயத்திலும் கிறிஸ்துவின் சத்தத்தைக் கேட்கிறோம். பேதுரு லித்தா ஊருக்கு வந்து, எட்டு வருஷம் திமிர்வாதக்

காரனான ஒரு மனுஷனைக்கண்டு: ''ஐனேயாவே, இயேசு கிறிஸ்து உன்னைக் குணமாக்குகிறார். நீ எழுந்து உன் படுக்கையை நீயே போட்டுக்கொள்'' என்று சொன்னது, பெதஸ்தாக் குளத்தருகில் முப்பத்தெட்டு வருஷம் நோயாளியான மனுஷனைப் பார்த்து: ''எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட'' என்று ஆண்டவர் சொன்னதுபோல இருக்கிறது. யோப்பாப் பட்டணத்தில் தபித்தாள் என்னும் சீஷி வியாதிப்பட்டு மரித்தாள். பேதுரு பிரேதத்தைப் பார்த்து, ''தபித்தாளே எழுந்திரு'' என்று சொன்னது சரியாய் இரட்சகர் யவீரின் மகளைப் பார்த்துச் சொன்னது போலிருக்கிறது. ஆண்டவர் ''தலித்தா கூமி'' என்றார்; பேதுரு ''தபித்தா கூமி'' என்றார். ஒரு எழுத்துதான் வித்தியாசம். கிறிஸ்துவின் சத்தமே தொனிக்கிறது. சரீரத்திலிருந்து வேலை செய்த கிறிஸ்து. தாம் தொடங்கின வேலையை நிறுத்தாமல் பெந்தெகொஸ்தே நாள் முதல் தமது அடியாருக்குள்ளிருந்து தமது வேலையை நடப்பித்துக்கொண்டு போகிறார் என்பதைக் காண்கிறோம். தேவ ஊழியராகிய நமது ஜீவியத்திற்கும் ஊழியத்திற்கும் இதுவே எக்காலமும் மாதிரி. நமது ஜீவியமும் அவராலே, நமது ஊழியமும் அவராலே. அவர் நமக்குள்ளிருந்து கிரியை நடப்பிக்காவிட்டால் நம்மால் ஒன்றுமே ஆகாது. அவரை விட்டுப் பிரிந்து நாமாக நடப்பிக்கும் சகல முயற்சிகளும் மாம்ச பிரயத்தனங்களாகும். நமது சபை ஆலோசனைச் சங்கங்களும் கமிட்டிக் கூட்டங்களும் தங்கள் சுய ஆலோசனைகளையும் சுய தீர்மானங்களையும் நிறைவேற்றுகிறவைகளாயிராமல், தங்களை முழுவதுமாய் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்து அவரது ஆவியினாலே நடத்தப்பட்டுக் காரியங்களைச் செய்வார்களானால் எவ்வளவோ ஆசீர்வாதமாயிருக்கும்! நமது சுய ஆலோசனைகளும் தீர்மானங்களும் சபைகளிலுள்ள குழப்பங்களையும் விரோதங்களையும் அகற்றமாட்டாது. கிறிஸ்துவைத் தங்கள் இருதயங்களில் வசிக்கப்பெற்ற உத்தம அடியார்களின் ஜெபங்களும் பிரயத்தனங்களும் சபைகளுக்குச் சமாதானத்தைக் கொண்டுவரும்.



நாமல்ல, ஆண்டவரே நமது மூலமாய்க் கிரியை செய்கிறவர் என்பதைத் திராட்சச்செடியின் போதனையிலும் காண்கிறோம். கொடி தானாகக் கனிகொடுப்பதில்லை. செடியானது தன்னில் நிலைத்திருக்கும் கொடிகளைக் கனிகொடுக்கும்படி செய்கிறது. செடியிலிருந்து சாரமாகிய ஜீவன் கொடிகளுக்குள் சென்று கனி கொடுக்கச் செய்கிறது. செடியை விட்டுப் பிரிந்த கொடிகள் காய்ந்து உலர்ந்துபோகும். கிறிஸ்து நமக்குள் வாசம் பண்ணி, நமக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்காவிட்டால் நமது முயற்சிகள் பிரயாசங்கள் யாவும் வியர்த்தமாகும். கிறிஸ்து நமக்குள் இல்லாவிட்டாலும் நமது சுய அறிவால், சுய பலத்தால் மும்முரமான வேலைகளை நாம் நடப்பிக்கக்கூடும். ஆனால் அவைகள் ஆண்டவருடைய அக்கினிப் பரிசோதனையில் அழிந்து சாம்பலாகும். நமக்குள் இருந்து அவர் செய்யும் ஊழியம் எவ்வளவு சொற்பமானாலும் அது நிலைக்கும். அவர் செய்வதெதுவோ அது அழியாது நிலைநிற்கும். நம்மில் காணப்படவேண்டிய கனிகளைப்பற்றி ''கனிகள்'' என்றும், 'அதிகக் கனிகள்'' என்றும், 'மிகுந்த கனிகள்'' என்றும், ''நிலைத்திருக்கும் கனிகள்'' என்றும் சொல்லுகிறார். அவருக்கும் நமக்குமுள்ள ஐக்கியம் நெருங்க நெருங்க நம்மில் கனிகளும் பெருகிக்கொண்டு போகின்றன. நாம் கிறிஸ்துவுக்குள் வளருகிறோம் என்பதற்கு இது அத்தாட்சி. மேலும் ''நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும் உங்கள் கனி **நிலைத்திருக்கும்படிக்கும்** உங்களை ஏற்படுத்தினேன்'' என்கிறார். நாம் அவரில் நிலைத்திருக்கும்போது அவரே நமது மூலமாய்க் கனிகொடுக்கிறபடியினாலே நமது வேலைகள் அழியாமல் நிலைத்திருக்கும் என்பது நிச்சயம். **கனிகள்** என்பது ஜீவியக் கனிகள் ஊழியக் கனிகள் என இருவகைப்படும். அவர் நமக்குள் **வாசம்பண்ணுவதால்** அவரிடத்தில் காணப்பட்ட திவ்ய லட்சணங்களாகிய அன்பு, சாந்தம், தாழ்மை, பொறுமை, மன்னிப்பு, பரிசுத்தம், சகிப்பு முதலான ஜீவியக் கனிகள் நம்மில் காணப்படும். அவர் நமக்குள் **வல்லமையாய்க் கிரியை செய்வதால்** ''சகலவித நற்கிரியைகளாகிய கனிகளால்' நிறைந்திருப்போம் (கொலோ. 1:10).

இப்படிப்பட்ட ஜீவியம் ஜீவ நதிகள்போல் அநேகருக்கு ஆசீர்வாதமாயிருக்கும.

அப்போஸ்தலன் செய்த ஊழியத்தைக் குறித்து ஆச்சரியப்படுகிறோம். ஊழியத்தில் அவரோடு ஒருவரையும் ஒப்பிடமுடியாது. எத்தனையோ கஷ்டமான பிரயாணங்கள்! பிரயாணங்களில் எவ்வளவோ ஆபத்துகள்! சுய ஜனங்களாலும் அந்நியராலும் எவ்வளவோ பாடுகள்! சிறைச்சாலையின் உபத்திரவங்கள், அடிகள், கல்லெறிகள், பசி, தாகம், குளிர் முதலான கொடுமைகள். இவை யாவற்றிலும் கொஞ்சமும் மனஞ்சோராமல் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை எங்கும் பிரசங்கித்தார். எல்லா இடங்களிலும் சபைகளை ஸ்தாபித்தார். அவர்களுக்கு நிருபங்களை எழுதியனுப்பினார். ஆத்துமாக்களை இரட்சிக்கும்படி அவருக்கிருந்த வாஞ்சை கொஞ்சமல்ல. தன் பிராணனையும் அருமையாக எண்ணவில்லை. இவை யாவற்றிற்கும் காரணமென்ன சொல்லுகிறார்? ''எல்லாரைப் பார்க்கிலும் அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன், ஆகிலும் **நான் அல்ல''** என்கிறார். இங்கேதான் இரகசியம் வெளிப்படுகிறது. அவர் தமது சுய பலத்தாலும், சுய அறிவாலும், தமது சாமர்த்தியத்தாலும் தேவ ஊழியத்தை நடத்தினவரல்ல. **நான் அல்ல,** ஆனால் **''எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற** அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன்'' என்கிறார். மின்சார சக்தியால் வண்டிகள் வேகமாய் ஓடுகின்றன. அச்சடிப்பு முதலான வேலைகள் நடக்கின்றன. பிரகாசமான விளக்குகள் ஜோதியாய்ப் பிரகாசிக்கின்றன. ஆனால் அதன் சக்தியோ மறைந்திருக்கிறது. அப்போஸ்தலனுக்குள் ஆண்டவர் நடப்பித்த அவருடைய மறைவான வல்லமையின் பலனை அவருடைய சிறந்த வேலைகளில் காண்கிறோம். தாம் இரட்சிக்கப்பட்டதைக் குறித்து: ''கிறிஸ்து **எனக்கு ஜீவன்''** என்கிறார். தமது ஜீவியத்தைக் குறித்து: ''கிறிஸ்துவே **எனக்குள் பிழைத்திருக்கிறார்''** என்கிறார். தமது ஊழியத்தைக் குறித்து: ''அவர் **எனக்குள்ளே** வல்லமையாய்க் கிரியை



நடப்பிக்கிறார். கிறிஸ்து **எனக்குள்ளே** பேசுகிறதாகவும் சொல்லுகிறார்'' (2 கொரி. 13:3). அப்போஸ்தலனுக்கு சகலமும் கிறிஸ்துதான். பரிசுத்தவான்கள் எல்லாருடைய அனுபவமும் அதுதான்.

கிறிஸ்துவைத் தங்கள இருதயங்களில் ஏற்றுக்கொண்ட மக்களாலே கிறிஸ்து மார்க்கம் உண்டானது. தங்களை முழுவதும் அவருக்கு ஒப்புக்கொடுக்க, அவரே அவர்களுக்குள்ளிருந்து அவர்களை இரட்சித்தார்; தம்மை அவர்களுக்குள்ளே வெளிப்படுத்தினார். அவர்களுக்குள்ளேயிருந்து அவர்களுக்குப் போதித்தார்; அவர்களுக்குள்ளே வசித்து தமது சாயலுக்கொப்பாக அவர்களை மாற்றினார்; அவர்களுக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பித்து அவர்களைப் பலத்த ஊழியக்காரராக்கினார். அவர்கள் ஒன்றுமில்லை; அவரே அவர்களுக்குள் சகலமுமாயிருந்தார். இந்த மகத்துவமான இரட்சிப்பின் மாறுதல்களை அவர்களில் கண்ட மற்றவர்கள்: ''இவர்கள் கிறிஸ்தவர்கள்'' என்று சொன்னார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் சின்னச் சின்னக் கிறிஸ்து போலிருந்தார்கள்.

தற்காலக் கிறிஸ்தவர்கள் எப்படியிருக்கிறார்கள்? நம்மை மற்றவர்கள் கிறிஸ்தவர்கள் என்று சொல்வது எதினாலே? சிலரைப் பார்த்தவுடனே அவர்களை இந்துக்கள் என்கிறோம். மற்றொரு கூட்டத்தாரைக் கண்டவுடனே அவர்களை மகமதியர் என்கிறோம். இதிலே மத சம்பந்தம் இல்லை. அவர்களுடைய உடை, நடை, பாவனைகளைக்கொண்டு இன்னாரென்று அறிந்துகொள்ளுகிறோம். மற்றவர்கள் நம்மைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்வதும் அவ்வாறே. நமது உடை, நடை, பாவனைகள், ஆலயங்கள், ஆராதனைகள் இவைகளைக் கண்டு நம்மைக் கிறிஸ்தவர்கள் என்கிறார்கள். சில இந்து வாலிப புருஷர் ஸ்திரீகளை நாம் காணும்போது, நீங்கள் கிறிஸ்தவர்களா என்று கேட்கிறோம். அவர்கள் அல்ல என்கிறார்கள். உங்களைப் பார்த்தால் சரியாய் கிறிஸ்தவர்கள் போலிருக்கிறதே என்கிறோம்.

அவர்கள் உடை, நடை, பாவனைகளில் உண்டாயிருக்கிற மாறுதலே இதற்குக் காரணம். அவர்கள் கிறிஸ்துவை அறிந்தவர்களுமல்ல, அவரை ஏற்றுக்கொண்டவர்களுமல்ல. உடை, நடை, பாவனைகள் நம்மைக் கிறிஸ்தவர்களாக்காது. **கிறிஸ்துவே** நமது கிறிஸ்து மார்க்கம். ஆலயங்களைக் கட்டவும், ஞானஸ்நான ஆராதனைகள், நற்கருணை ஆராதனைகள், மற்ற ஆராதனைகளை எப்படி நடத்துவதென்று நமக்குப் போதிக்கவும் அவர் பரலோகத்திலிருந்து இங்கே வரவில்லை. அவர் **மனுஷனைத்** தேடிவந்தார். அவனைக் கண்டுபிடிக்குமளவும் தேடுகிறார். கண்டுபிடித்தால் அவனைத் தமக்குச் சொந்தமாக்கி, அவன் இருதயத்தில் வாசம்பண்ணி தமது திவ்ய சாயலுக்கொப்பாக மாற்றுகிறார். அவருடைய **சாயல்** அவனில் காணப்படுவதே அவன் **கிறிஸ்தவன்** என்பதற்கு அடையாளம். மார்க்கத்துக்கும், புறம்பான உடை நடை, தோற்றங்களுக்கும் சம்பந்தமில்லை. மேலும் உடை, நடை, சாப்பாடு முதலிய காரியங்களில் நாம் கிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டியவர்கள் அல்ல. அவர் தம் தேசத்தவர்களுக்கேற்றபடி நடந்துகொண்டார். நாம் நமது தேசத்துக்கேற்றபடி நடந்துகொள்ளுகிறோம். அவருடைய ஜீவியத்தில் காணப்பட்ட சிறந்த **தேவலட்சணங்களே** நாம் பின்பற்றி நடக்க வேண்டிய காரியங்கள். நாம் எப்படி உடுத்தவேண்டும், எப்படிச் சாப்பிடவேண்டும் என்று அவர் போதிக்க வந்தவரல்ல. உள்ளான மாறுதல் உண்டாகும்போது புறம்பான காரியங்கள் அதற்கேற்றாற்போலிருக்கும். கிறிஸ்துவைத் தங்கள் ஜீவனாக ஏற்றுக்கொள்ளாமலும், ஜீவியத்தில் இரட்சிப்பின் மாறுதலடையாமலும், புறம்பான மார்க்க ஆசாரங்களிலே பற்றுதல் வைப்பவர்கள் கடைசியிலே மோசம்போவார்கள். இப்படிப்பட்டவர்களைப் பார்த்து: ''நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள்'' என்று சொல்லுவார். அவரைத் தள்ளிவிட்டு ஆயிரங் காரியங்களை நாம் அனுசரித்தாலும் பிரயோஜனமென்ன? ஒன்றுமில்லை.

# IV

## ஜீவனின் உயர்ச்சி

இருதயத்தில் கிறிஸ்து **மகிமையின் நம்பிக்கையாயிருப்பது** நமது ஜீவியத்தின் உயர்ச்சி. உயர்ச்சி என்பது நமது ஜீவியம் பூரணப்படுவதைக் குறிக்கும். **தேவ மகிமையைப்** பெறுவது ஜீவியத்தின் பூரணமாகும். ''கிறிஸ்துவானவர் **மகிமையின்** நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்'' என்கிறார் (கொலோ. 1:27). யாக்கோபு அப்போஸ்தலன்: ''கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம்பண்ணின **ஜீவ கிரீடம்''** என்கிறார். ஆண்டவர் சிமிர்னா சபையைப் பார்த்து: ''நீ மரண பரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது **ஜீவ கிரீடத்தை** உனக்குத் தருவேன்'' என்றார். கிரீடம் என்பது அரசர்கள் தங்கள் சிரசில் வைத்திருக்கும் விலையேறப்பெற்ற முடியையும், அவர்கள் மகிமையையும் குறிக்கும். அது போலவே கிரீடம் என்பது ஒரு காரியம் **பூரணப்படுவதைக்** குறிக்கும். ஜீவ கிரீடம் என்பது நமது ஜீவனின் உயர்ச்சியை, அதன் பரிபூரணத்தை, அதன் மகிமையைக் காண்பிக்கிறது. நாம் மகிமையில் பிரவேசிப்பது கிறிஸ்து நமக்குள் தொடங்கின இரட்சிப்பின் முடிவான ஆசீர்வாதமாகும். அவர் **நமக்குள் உருவாகி** மறுபிறப்பின்மூலம் நம்மைத் தேவ மக்களாக்குகிறார். அவர் **நமக்குள்ளே வாசம்பண்ணி** தமது சாயலுக்கொப்பாக நம்மை மாற்றிவருகிறார். அவர் **நமக்குள்ளே கிரியைசெய்து** தமது ஊழியத்தில் நம்மை உபயோகிக்கிறார். இனி ஆக வேண்டியதென்ன? அவர் நம்மை அழைக்கும் வேளை வரும்போது **அவருடைய மகிமையில்** பிரவேசிக்கவேண்டியது. ''உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை **மகிமையில்** ஏற்றுக்கொள்வீர்'' என்று சங்கீதக்காரன் ஜெபித்தது சரி. பரம மகிமையில் நாம் பங்கடைவதற்குக் கிறிஸ்து இப்பொழுதே **''மகிமையின் நம்பிக்கையாக''** நமக்குள் இருக்க வேண்டியது அவசியம். தேவ ராஜ்யத்தில் நாம் பிரவேசிக்கு முன்னே தேவ ராஜ்யம் நமக்குள் பிரவேசிக்கவேண்டும் என்று

ஆண்டவர் போதித்தார். மகிமையடைவோம் என்பதற்கு மகிமையின் ஆண்டவர் நமக்குள் இருப்பது ஆதாரமும் உறுதியுமாயிருக்கிறது.

மகிமை என்னும் வார்த்தையைச் சாதாரணமாய் எல்லாரும் உபயோகித்து வந்தபோதிலும் அதன் அர்த்தத்தை விளக்கிக் காட்டுவது கஷ்டம். ஆளுக்கும், இடத்துக்கும், சமயத்துக்கும் தக்கபடி அதன் அர்த்தம் வித்தியாசப்படும். **மகிமை** என்பது ஒளி, பிரகாசம், பூரணம், அந்தஸ்து, மாட்சிமை, அலங்காரம், கீர்த்தி, பெருமை, வல்லமை, பலன், மேன்மை என்னும் பல அர்த்தமாகும். **மகிமைப்படுத்தல்** என்பது துதித்தல், உயர்த்தல், போற்றுதல், கனம்பண்ணுதல், வணங்குதல் என்னும் பொருள்படும்.

**மகிமை** என்னும் வார்த்தையால் வேதாகமம் நிறைந்திருக்கிறது. இரட்சகர் தேவ மகிமையைப்பற்றியும் விசுவாசிகள் பெற்றுக்கொள்ளும் மகிமையைப் பற்றியும் பேசியிருக்கிறார். அப்போஸ்தலன் தமது நிருபங்களில் மகிமையைப்பற்றி அதிகமாய் எழுதியிருக்கிறார். பேதுருவும் தமது நிருபங்களில் மகிமையைப்பற்றிப் போதிக்கிறார். அப்போஸ்தலன் யோவான் தமது சுவிசேஷத்திலும் வெளிப்படுத்தின விசேஷத்திலும் மகிமையைப்பற்றிச் சொல்லியிருந்தபோதிலும், அவருடைய நிருபங்களில் அந்த வார்த்தையைக் காணோம். மகிமை என்று அவர் சொல்லாவிட்டாலும் மகிமையின் லட்சணங்களாகிய அன்பு, தேவ ஐக்கியம், ஒளி, ஜீவன் என்பவைகளைப்பற்றி விஸ்தாரமாய் எழுதுகிறார். மேலும் ''கிறிஸ்து வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாய் நாம் அவரைத் தரிசிப்பதால் அவருக்கு ஒப்பாயிருப்போம்'' என்று சொன்னவரும் அவரே (*1 யோவா. 3:2*). ஆண்டவர் வெளிப்படும்போது தமது பூரண மகிமையோடு வருவார் என்பதை யோவான் அறியாதவர் அல்ல. கிறிஸ்துவை ஜீவனாக ஏற்றுக்கொண்டு, அவரில் நிலைத்திருந்து பிழைக்கிறவர்கள் அவருடைய மகிமையில் பங்கடைவார்கள் என்பது அவருடைய பூரணமான நம்பிக்கை.



முதல் மூன்று விஷயங்களையும் குறித்துத் தாராளமாகப் பேசினோம். கிறிஸ்து இருதயத்தில் உருவாகிறதால் உண்டாகும் மறுபிறப்பும் புத்திர சுவிகாரமும்; அவர் இருதயத்தில் வசிப்பதால் நமது ஜீவியம் கிறிஸ்துவுக்கொப்பாய் மாறிவருவதும்; அவர் இருதயத்தில் கிரியை நடப்பிப்பதால் நாம் நிறைவேற்றி வரும் ஊழியமும் இப்போதே நமது அனுபவத்தில் அறியக்கூடியவைகள். மகிமையடைவதோ இனி வெளிப்படப்போகிற காரியம். அது நமது இரட்சிப்பின் பூரணம். அந்த மகிமை எப்படிப்பட்டதென்பதை உள்ளபடி அறியமுடியாது. அதன் முன் ருசியை கிறிஸ்துவுக்குள் கொஞ்சம் ருசித்தபோதிலும் மகிமையில் பிரவேசிக்கும்போதுதான் உள்ளபடி அறிந்துகொள்ளமுடியும்.

தேவன் தமது ஜனமாகிய இஸ்ரவேலருக்குக் காணக்கூடிய புறம்பான அடையாளங்களாலே தமது மகிமையை வெளிப்படுத்திவந்தார். சீனாய் மலையில் அவர் இறங்கினபோது காரிருள், மின்னல், இடி, மேகம், அக்கினி, புகைக்காடு காணப்பட்டன. ''கர்த்தருடைய **மகிமை** சீனாய் மலையில் தங்கியிருந்ததை ஜனங்கள் கண்டார்கள்'' என்று சொல்லியிருக்கிறது (யாத். *24:16*). ஆசரிப்புக்கூடாரத்தில் ''கர்த்தருடைய **மகிமை** சகல ஜனங்களுக்கும் காணப்பட்டது'' என்று வாசிக்கிறோம் (லேவி. *9:23*). இங்கே மேகம் தேவசமுகத்துக்கு அடையாளமாயிருந்தது. சாலமோன் கட்டிமுடித்த தேவாலயத்தைப் பிரதிஷ்டை செய்தபோது: ''கர்த்தருடைய **மகிமை** கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று'' என்று சொல்லப்பட்டிருக்கிறது (*1* இராஜா. *8:11*). இங்கும் மேகம் ஆலயத்தை நிரப்பினதாக வாசிக்கிறோம். உடன்படிக்கைப் பெட்டி பிடிபட்டபோது: ''**மகிமை** இஸ்ரவேலைவிட்டு விலகிப்போயிற்று'' என்றார்கள் (*1 சாமு. 4:22*). இங்கே பெட்டி கர்த்தருடைய சமுகத்துக்கு அடையாளமாயிருந்தது. ஏசாயா கண்ட தரிசனத்தைக் குறித்து: ''ஏசாயா அவருடைய **மகிமையைக்** கண்டபோது இவைகளைச் சொன்னான்'' என்றெழுதியிருக்கிறது (யோவா. *12:41*). அந்தத் தரிசனத்தில் ஆண்டவருடைய வஸ்திரத்தொங்கலாலும், புகையினாலும் தேவாலயம் நிறைந்திருப்பதைக் கண்டார்.

புதிய ஏற்பாட்டுக்கு வருவோமானால், கிறிஸ்து பிறந்த சமயத்தில் கர்த்தருடைய தூதன் மேய்ப்பர்களிடம் வந்து நின்றபோது ''கர்த்தருடைய **மகிமை** அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்தது'' என்று வாசிக்கிறோம் (லூக். 2:9). இங்கே மகிமை என்பது ஒளியைக் குறிக்கும். ஆண்டவர் மார்த்தாளைப் பார்த்து: ''நீ விசுவாசித்தால் தேவனுடைய **மகிமையைக்** காண்பாய்'' என்றார். அவர் தண்ணீரைத் திராட்சரசமாக மாற்றித் தமது **மகிமையை** வெளிப்படுத்தினார். இங்கே மகிமை என்பது அவருடைய வல்லமையைக் காண்பிக்கிறது. ''வல்லமையுள்ளவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார்'' என்று மரியம்மாள் பாடினார்கள். ஆண்டவர் மறுரூபமானபோது அவரோடிருந்த மூன்று சீஷர்கள் அவருடைய **மகிமையைக்** கண்டார்கள். வெகுகாலத்துக்குப்பின் அம்மூவரில் ஒருவரான யோவான் இந்த மறுரூப காட்சியைக் குறித்து: ''அவருடைய **மகிமையைக் கண்டோம்**'' என்று எழுதியிருக்கிறார் (யோவா. 1:14). அதுபோலவே பேதுருவும் தமது நிருபத்தில்: ''நாங்கள் தந்திரமான கட்டுக் கதைகளைப் பின்பற்றினவர்களாக அல்ல, அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டோம் என்றும், இவர் என்னுடைய நேசகுமாரன், இவரிடத்தில் பிரியமாயிருக்கிறேன் என்று சொல்லுகிற சத்தம் உன்னதமான மகிமையிலிருந்து அவருக்கு உண்டாகி, பிதாவாகிய தேவனால் அவர் கனத்தையும் **மகிமையையும்** பெற்றபோது அவரோடேகூட நாங்கள் பரிசுத்த பர்வதத்திலிருக்கையில் வானத்திலிருந்து பிறந்த அந்தச் சத்தத்தைக் கேட்டோம்'' என்றும் எழுதுகிறார் (2 பேது. 1:16-18). இங்கே மகிமை என்பது ஆண்டவர் முகத்தில் தோன்றிய பிரகாசத்தைக் குறிக்கிறது. பவுல் தமஸ்குவுக்குப் போகிற வழியில் கிறிஸ்துவைத் தரிசித்தபோது ''அந்த ஒளியின் **மகிமையினாலே** நான் பார்வையற்றுப் போனேன்'' என்கிறார் (அப். 22:11). ''சூரியனுடைய மகிமையும் வேறே, சந்திரனுடைய மகிமையும் வேறே, நட்சத்திரங்களுடைய மகிமையும் வேறே'' என்று சொல்லுவது அவைகளின் பிரகாசத்தையே குறிக்கும்.



**மகிமை, மகிமை** என்று சொல்லப்பட்டிருக்கிற இவைகளை நாம் ஆராய்ந்து பார்க்கும்போது, இவர்கள் யாவரும் கர்த்தருடைய மகிமையைக் கண்டதாகச் சொன்னபோதிலும், அவருடைய யதார்த்தமான தெய்வீக மகிமையைக் கண்டவர்கள் அல்ல. **தேவன் தம்மில் எவ்விதமாயிருக்கிறாரோ அதுவே அவருடைய மகிமை.** அந்த மகிமையை ஒருவரும் உள்ளபடி கண்டதில்லை. இங்கே கர்த்தருடைய மகிமை என்று சொல்லப்பட்டிருப்பதெல்லாம் கண்ணால் காணக்கூடிய புறம்பான அடையாளங்களாகிய காரிருள், மேகம், புகை, ஒளி, பிரகாசம் என்பவைகளையே குறிக்கிறது. மோசே சகல மனுஷரிலும் விசேஷித்த சிலாக்கியம் பெற்றவர். இக்காட்சிகளை மலையில் அவர் கண்டார். தேவன் பேசுவதையும் கேட்டார். இவைகள் அவரைத் திருப்தி செய்யாததால் கர்த்தரை நோக்கி: ''உம்முடைய **மகிமையை** எனக்குக் காண்பித்தருளும்'' என்று வேண்டிக்கொண்டார். அதற்குக் கர்த்தர்: ''ஒரு மனுஷனும் என்னைக்கண்டு உயிரோடிருக்க முடியாது, என்னண்டையில் ஒரு இடம் உண்டு. நீ அந்தக் கல்மேல் நில், என் **மகிமை** கடந்து போகும்போது நான் உன்னை அந்தக் கன்மலையின் வெடிப்பிலே வைத்து, நான் கடந்துபோகும் மட்டும் என் கரத்தாலே உன்னை மூடுவேன், பின்பு என் கரத்தை எடுப்பேன், அப்போது நீ என் பின்பக்கத்தைக் காண்பாய், என் முகமோ காணப்படாது'' என்றார் (யாத். 33:18-23). இங்கே மோசே கண்டது கர்த்தருடைய முதுகு என்னும் ஒரு அடையாளமேயன்றி அவருடைய யதார்த்த தெய்வீக மகிமையை அவர் காணவில்லை. இந்தச் சரீரத்தில் நாம் குடியிருக்குமளவும் நமது அறிவும், அனுபவமும், ஊழியமும் அரைகுறையானதென்பது நிச்சயம். 'இங்கே கண்ணாடியில் நிழலாட்டமாகப் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம்'' (1 கொரி. 13:12). கர்த்தர் மோசேயை கன்மலையின் வெடிப்பிலே வைத்துக் காட்சியருளினதுபோல, பிளவுண்ட மலையாகிய கிறிஸ்துவுக்குள் சஞ்சரிக்கும் மக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது **மகிமையின்** அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும்பொருட்டு அவர்கள் **இருதயங்களில்** பிரகாசிக்கிறார் (2 கொரி. 4:6). இந்தக் கருத்தின்படி மோசேயின் விருப்பம் ஒருவாறு நிறைவேறினதைக் கிறிஸ்து

வின் மறுரூபத்தில் காண்கிறோம். மோசே மறுரூப மலைக்கு வந்து சூரியனைப்போல் பிரகாசித்த கிறிஸ்துவின் திருமுகத்தில் தோன்றிய மகிமையைக் கண்டு களித்தார். இதுவும் ஒளிப்பிரகா சமேயன்றி கடவுளுடைய யதார்த்த மகிமையல்ல. ஆனால் வெளிப்படப்போகிற மகிமைக்கு இது முன்னடையாளமாயும், அந்த மகிமையோடே சம்பந்தப்பட்டதாயுமிருந்தது. ஏனென் றால் ''நீதிமான்கள் தங்கள் பிதாவின் இராஜ்யத்திலே சூரிய னைப்போல பிரகாசிப்பார்கள்'' என்று இரட்சகரே சொல்லு கிறார் (மத். 13:43).

மனுஷனை சிருஷ்டிகர் தமது **மகிமைக்கென்று** உண்டாக்கி னார். ''நான் என் மகிமைக்கென்று சிருஷ்டித்து உருவாக்கிப் படைத்தவர்கள்'' என்கிறார் (ஏசா. 43:7). மனுஷர் அவருக்கு மகிமையாக இங்கே பிழைக்கவும், முடிவிலே தமது மகிமை யில் பங்கு பெறவும் வேண்டுமென்பது அவருடைய அனாதி தீர்மானம். மனுஷர் உண்டாகுமுன்னே, உலகம் தோன்று முன்னே தேவன் கிறிஸ்துவுக்குள் எப்படி நமது இரட்சிப்பை ஆயத்தம்பண்ணினாரோ, அதுபோலவே நாம் அவருக்குள் பெற் றுக்கொள்ளப்போகிற தேவ மகிமையையும் அவர் தமது முன் னறிவிலே கண்டார். அதைக் குறித்து பவுல்: ''தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக் கும் பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்க ளைத் தமது குமாரனுடைய **சாயலுக்கு** ஒப்பாயிருப்பதற்கு முன் குறித்திருக்கிறார்; எவர்களை முன் குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கி னாரோ அவர்களை **மகிமைப்படுத்தியுமிருக்கிறார்''** என்றும், ''கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்'' என் றும் சொல்லுகிறார் (ரோம. 8:29,30; எபே. 2:7). இன்னும் நாம் அந்த மகிமையில் பிரவேசிக்காமலும், ஆண்டவரோடேகூட உட்காராமலும் இருந்தும் தேவனுடைய முன்னறிவில் இவை கள் முடிந்த காரியமாயிருக்கிறது. இந்த மேலான நோக்கத் தோடே அவர் மனுஷனை உண்டாக்கினார்.



மற்ற சிருஷ்டிகளைத் தமது வார்த்தையால் உண்டாக்கின கடவுள், மனுஷனை விசேஷித்தவிதமாய்ச் சிருஷ்டித்தார். அவன் சரீரத்தை மண்ணிலிருந்து உண்டாக்கி, அவன் நாசியில் தமது தெய்வீக ஜீவசுவாசத்தை ஊதி அவனைப் பிழைக்க வைத்தார். ஆகையால் அவன் தேவ சாயல் தேவரூபம் பெற்றவனா யிருந்தான். சர்வ சிருஷ்டிகளுக்கும் மேலான கிரீடமானான். பூமியிலுள்ள எல்லாவற்றையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி அவன் அவைகளை ஆண்டுகொள்ளும்படி கட்டளை யிட்டார். மற்ற சிருஷ்டிகளைப்போல் அவனும் தேவசித்தப் படியே பிழைத்து, அவருக்குப் பிரியமாய் நடந்திருப்பானானால் தன் சரீரத்திலும் ஆவியிலும் சிருஷ்டி கர்த்தாவை மகிமைப்படுத்தி யிருப்பான். ஏற்றகாலம் வரும்போது பரமபிதா அவனுக்கும் அவனுடைய பரிசுத்த சந்ததிக்கும் தமது மகிமையிலே பங்களித் திருப்பார். மனுஷன் பாவம் செய்தபின்புதான் அவனுக்குச் சந்ததி பிறக்க வேண்டுமென்றல்ல. அவர்களை ஆணும் பெண் ணுமாக உண்டாக்கினபோதே தேவன் அவர்களை ஆசீர்வதித்து: ''நீங்கள் பலுகிப் பெருகிப் பூமியை நிரப்புங்கள்'' என்றார். அதற்குள்ளாகப் பாவம் முந்திக்கொண்டது. மக்களனைவரும் பாவ சுபாவத்தில் பிறந்தார்கள். ''எல்லாரும் பாவம் செய்து **தேவ மகிமையற்றவர்களானார்கள்''** (ரோம. 3:23). மனுஷரு டைய அக்கிரமங்களும் பாவங்களும் உலகத்திலே பெருகின. மனுஷர் தங்கள் வழிகளை எவ்வளவோ கெடுத்துக்கொண்டார் கள். அப்படியிருந்தும் பரமபிதா தமது தயவுள்ள தீர்மானத்தை மாற்றவில்லை, அதை விட்டுவிடவுமில்லை. மனுஷன் பாவம் செய்யாதிருந்து தமது சித்தத்தின்படி பிழைத்திருந்தால் நியாய மான வழியிலும், பாவம் செய்தால் தமது குமாரன் மூலமாகவும் அவனை மகிமைப்படுத்தவேண்டுமென்பது அவர் தீர்மானம். அதைப்பற்றி சற்று சிந்தித்துப் பார்ப்போம்.

மனுஷர் இவ்வாறு தேவசாயலை இழந்து கெட்டுப்போன போதிலும், தங்களுக்கு மகிமையையும் கனத்தையும் தேடும் ஆசையோ அவர்களைவிட்டு விலகவில்லை. ஆனால் பாவம் அவர்களை தேவனைவிட்டுப் பிரித்து, கண்களைக் குருடாக்கி,

அவர்கள் புத்தியை அந்தகாரப்படுத்திவிட்டதால் மெய்யான, நிலையான மகிமை இன்னதென்று அறியாமல் உலகத்திலிருந்து தங்களுக்கு மகிமையைத் தேடுகிறார்கள். இந்தத் தேட்டம் அவரவர்களுடைய எண்ணம்போலிருக்கிறது. சிலர் ஐசுவரியத்தைச் சேர்ப்பதில், சிலர் யுத்தவீரராவதில், சிலர் கல்விக் களஞ்சியமாவதில், சிலர் சித்திரவித்தையில், சிலர் சாஸ்திர ஆராய்ச்சியில், சிலர் அரசாங்கத்திலே உயர்ந்த பதவியைத் தேடுவதில், சிலர் வீடுகளைச் சம்பாதிப்பதில், சிலர் உலக இன்பங்களை அனுபவிப்பதில், இவ்வாறு பலரும் பலவகையாய்த் தங்களுக்கு மகிமையையும் கனத்தையும் தேடுகிறார்கள். சிறு பிள்ளைகள் மினுங்குகிற காகிதங்களைக் கிழித்துத் தங்கள் நெற்றி, மூக்கு, கைகள், கால்களில் ஒட்டிக்கொண்டு அவைகளைப் பொன்னாபரணங்களாக நினைத்துக்கொள்வார்கள். அதுபோலவே உலகம் இப்படிப்பட்ட காரியங்களை மகிமையாக மதிக்கிறது. உலக மகிமையை சாலொமோன் ராஜாவைப்போல் தேடினவர்களும் அனுபவித்தவர்களுமில்லை. ''சாலொமோன் தன் **சர்வ மகிமையிலும்**'' என்று ஆண்டவரே சொன்னார். பாபிலோன் ராஜாவின் ராஜரீகம், பராக்கிரமம், வல்லமை, மகிமை என்பவைகளைப் பற்றித் தானியேல் பேசியிருக்கிறார். அசீரியா ராஜாவின் மகத்துவங்களைப்பற்றி ஏசாயா விவரித்துச் சொல்லியிருக்கிறார். வனாந்தரத்தில் சாத்தான் கிறிஸ்துவினிடத்தில் வந்து உலகத்தின் ராஜ்யங்களையும் அவைகளின் **மகிமைகளையும்** காண்பித்து, தன்னை அவர் வணங்கினால் இந்த மகிமைகளைக் கொடுப்பதாக அவரைச் சோதித்தான். ''எனக்குப் பின்னாகப் போ சாத்தானே'' என்பதுதான் அவர் அவனுக்குக் கொடுத்த வணக்கம். உலக மகிமை அவர் பார்வையில் தூசிக்குச் சமானம். ''மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது'' (லூக். 16:15). மனுஷருடைய மகிமை கடவுளுக்கு அருவருப்பு.

உலக மகிமைகளை மனுஷர் எவ்வளவு ஆவலோடு தேடினாலும் அவைகள் அவர்களைத் திருப்தி செய்வதில்லை, அவைகள் நிலைத்திருப்பதுமில்லை. சாலொமோனுடைய சர்வ



மகிமையும் சேர்ந்து ஒரு காட்டுப் புஷ்பத்துக்கு ஈடல்ல என்று ஆண்டவர் சொன்னார். தான் விரும்பின எல்லாவற்றையும் தடையின்றி அனுபவித்த சாலொமோன், தன் சர்வ மகிமையாலும் திருப்தியடையாமல்: ''எல்லாம் மாயையும் மனதைச் சஞ்சலப்படுத்துகிறதுமாயிருக்கிறது'' என்று புலம்பினார். ''ஒருவன் ஐசுவரியவானாகி, அவன் வீட்டின் **மகிமை** பெருகும்போது நீ பயப்படாதே; அவன் மரிக்கும்போது ஒன்றும் கொண்டுபோவதில்லை, அவன் **மகிமை** அவனைப் பின்பற்றிச் செல்வதில்லை'' என்றார் சங்கீதக்காரன். மகா அலெக்சாந்தர், நெப்போலியன், ஹிட்லர் முதலியவர்கள் தேடின **மகிமை** எங்கே? ''அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலட்சையே'' என்றும், ''அது புல்லின் பூவைப்போல் உலர்ந்து உதிர்ந்துபோகும்'' என்றும் வேதம் கூறுகிறது. தேவன் மனுஷனுக்குக் கொடுக்கும்படி தீர்மானித்திருக்கிற மகிமை எப்படிப்பட்டதென்பதையும், அதைப் பெற்றுக்கொள்ளும் வழி இன்னதென்பதையும் உலகம் அறியவில்லை, கிறிஸ்துவுக்குள்ளான உன்னத ஆசீர்வாதங்களை நாம் அனுபவித்தால் அல்லாமல், அழிந்துபோகும் உலக மகிமைகளின் சோதனைக்கும் கவர்ச்சிக்கும் நாம் தப்ப முடியாது.

மேலும் மனுஷன் தனக்குத்தானே மகிமையைத் தேடுவதும் சரியல்ல. மகிமை கர்த்தருக்கு மாத்திரம் உரியது. ''நான் கர்த்தர், இது என் நாமம்; என் **மகிமையை** வேறொருவனுக்கும் கொடேன்'' என்கிறார் (ஏசா. 42:8). சிருஷ்டிகருடைய மகிமையைச் சிருஷ்டி தேடுவதை அவர் சகிக்கமாட்டார். வானத்திலும் பூமியிலுமுள்ள சகலமும் அவரையே மகிமைப்படுத்த வேண்டியது. ''ஒருவன் தான் ஒன்றுமில்லாதவனாயிருந்தும் தன்னை ஒரு பொருட்டென்று எண்ணினால் அவன் தன்னைத்தானே வஞ்சிக்கிறவனாயிருப்பான்'' (கலா. 6:3). தேவன் தமது தயவுள்ள சித்தத்தின்படியே சகல வரங்களையும் நன்மைகளையும் நமக்குக் கிருபையாகக் கொடுக்கிறார். அவைகளை அவர் கொடுக்க நாம் பெற்றுக்கொண்டோம் என்பதை மறந்து, எல்லாம் நம்மாலானதுபோல நமக்கு மகிமையைத் தேடும்போது

தேவன் அதைச் சகிக்கமாட்டார். பாபிலோன் தேசத்தில் நேபு காத்நேச்சார் தன் அரண்மனை மேல் உலாவிக்கொண்டிருந்த போது: ''இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால் என் **மகிமைப்** பிரஸ்தாபத்துக்கென்று நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா'' என்றான். அவ்வளவுதான். அந்நிமிஷமே தேவ கோபம் உண்டாகி ''அவன் மனுஷரிலிருந்து தள்ளப்பட்டு மாடுகளைப்போல் புல்லை மேய்ந்து வெளியின் மிருகங்க ளோடு சஞ்சரித்தான்.'' அப்போஸ்தலர் நாட்களில் ஏரோது ராஜா தன் சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்து பிரசங்கம் பண்ணி னான். ஜனங்கள் அதைக்கேட்டு: இது மனுஷ சத்தமல்ல, தேவ சத்தம் என்றார்கள். அந்நிமிஷமே தேவ கோபம் மூண்டது. ''அவன் தேவனுக்கு **மகிமையைச்** செலுத்தாதபடியால் உடனே கர்த்தருடைய தூதன் அவனை அடிக்க அவன் புழுப்புழுத்துச் செத்தான்.'' இந்தப் பெருமை ராஜாக்களையும் பிரபுக்களையு மாத்திரமல்ல, ஏழைகளையும் ஆண்டுகொள்ளுகிறது. தரித்திர நிலைமையிலிருந்து சுவாமி நம்மை உயர்த்தும்போது, முந்தின நிலைமையை மறந்து மேட்டிமையாய் நடக்கிறோம். ''தேவன் பெருமைக்காரருக்கு எதிர்த்து நிற்கிறார்'' என்பது எவ்வளவு உண்மை. கல்வியோ, வரங்களோ, உத்தியோகமோ, சம்பாத்தி யமோ, சமார்த்தியமோ, சகலமும் அவர் கொடுக்க நாம் பெற் றுக்கொண்டோம் என்பதை நன்றியுடன் உணர்ந்து, அவருக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தி, எல்லாவற்றாலும் அவருக்கே மகிமையைச் செலுத்தவேண்டும். தாழ்மையுள்ளவர்களுக்கு மேலும் மேலும் கிருபை அளிக்கிறார். **நாமல்ல,** அவரே நம்மை மகிமைப்படுத்துகிறவர். தம்மை மகிமைப்படுத்துகிறவர்களை **அவர்** மகிமைப்படுத்துகிறார். தங்களைத் தாழ்த்துகிறவர்களை **அவர்** உயர்த்துகிறார். உயர்வும் மகிமையும் அவராலே நமக்குக் கிடைக்கவேண்டியது. **மகிமை** என்பதைப்பற்றி இதுவரை பொதுவாய்க் கவனித்தோம். தேவன் கிறிஸ்துவுக்குள் நமக்கு அருளச் சித்தமாயிருக்கும் மகிமையைப்பற்றியும், அதைப் பெற் றுக்கொள்ளும் வழியைப்பற்றியும் இப்போது சிந்திப்போம்.



பாவத்தால் நாம் இழந்துபோன தேவ மகிமையைத் திரும்ப வும் நமக்குக் கொடுக்கவேண்டுமென்பது பரம பிதாவின் அனா தித் தீர்மானம் என்பதை ஏற்கெனவே பார்த்தோம். ''மீறுதலின் பலன் கிருபை வரத்தின் பலனுக்கு ஒப்பானதல்ல'' (ரோம. *5:15*). நாம் இழந்துவிட்ட மகிமையைப் பார்க்கிலும் கிறிஸ்து வுக்குள் நாம் பெற்றுக்கொள்ளப்போகிற மகிமை மகா உன்னத மானது. இந்த மகிமையைக் குறித்து சங்கீதக்காரன் ''நீர் மனு ஷனை மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டினீர். உமது கரத்தின் கிரியைகள்மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து, சகலத் தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்'' என்கி றார் (சங். *8:5,6*). இந்த நம்பிக்கை சங்கீதக்காரனிடத்திலும் மற்றுமுள்ள பூர்வ பக்தர்களிடத்திலும் இருந்தது. ஆனால் தேவன் தமது தீர்மானத்தை எவ்வாறு நிறைவேற்றப்போகிறார் என்பதை அவர்கள் திட்டமாய் அறிந்தவர்களல்ல. முற்காலத் தில் மறைவாயிருந்த இந்த இரகசியத்தைப் பிற்காலத்திலுள்ள பரிசுத்தவான்களுக்கு வெளிப்படுத்தச் சித்தமானார். ''கிறிஸ்து வானவர் **மகிமையின் நம்பிக்கையாக** நமக்குள் இருப்பதே அந்த இரகசியம்.'' கிறிஸ்துவினுடைய ஜீவியம், ஊழியம், பாடுகள், மரணம், உயிர்த்தெழுதல், மகிமைக்குட் பிரவேசித்தல் முதலா னவைகளாலும், தேவ அருள் பெற்ற அவரது அடியார்கள் தங்கள் நிருபங்களில் இந்த மகிமையைப்பற்றி விளக்கிக்காட்டி யிருப்பதாலும், மனுஷனைப்பற்றிய தேவ தீர்மானம் என்ன வென்பதை ஒருவாறு அறியலானோம்.

நாம் இழந்துவிட்ட தேவ மகிமையை நமக்குச் சம்பாதித் துக் கொடுக்கும்படி பரமபிதா தமது குமாரனை உலகத்திற்கு அனுப்பினார். இவர் **இரண்டு காரியங்களைச்** செய்யவேண்டி யிருந்தது. முதலாவது, தேவ சாயலாகவும் தேவரூபமாகவும் சிருஷ்டிக்கப்பட்ட மனுஷன் தேவனுக்கு முன்பாக எப்படிப் பிழைக்க வேண்டும் என்பதை **தமது ஜீவியத்தில் நடந்து காட்ட வேண்டும்.** இரண்டாவது, நாம் மகிமையில் பிரவேசிப்பதற்கு **வழியை** உண்டாக்கவேண்டும். இவை இரண்டையும் ஆண்டவர் பூரணமாகச் செய்து முடித்தார்.

முதலாவது அவர் **ஜீவியத்தைக்** கவனிப்போம். கிறிஸ்துவின் ஜீவிய சரித்திரத்தை நாம் கருத்தாய்ப் படித்தால் ஒரு காரியத்தை விசேஷமாகக் காணலாம். அவர் ஜீவியம், ஊழியம், பாடுகள் முழுவதிலும் எந்தக் காரியத்திலாகிலும் தமது சித்தம் போல் அவர் நடந்தவரல்ல. ''நானல்ல, பிதாவே எனக்கு எல்லாம்'' என்பது அவரது வாழ்க்கைப் பிரமாணம். மனுஷன் தன் சுய சித்தப்படி நடந்து தேவ மகிமையை இழந்தான். இவரோ தேவ சித்தப்படியே நடந்து தேவ மகிமைக்குரியவரானார். இது லேசான காரியமல்ல. கடவுளுக்குச் சமமான குமாரன் தம்மைத்தாமே வெறுமையாக்கி, நமது மாம்சத்தையும் ரத்தத்தையும் சுதந்தரித்துக்கொண்டு பலவீன சரீரத்தில் வெளிப்பட்டார். எல்லாவிதத்திலும் தமது சகோதரருக்கு ஒப்பான மனுஷ குமாரனாக உலகில் சஞ்சரித்தபடியால், சகலவிதமான சோதனைகள், போராட்டங்கள், அவமானங்கள், பாடுகளுக்கு அவர் தப்பமுடியவில்லை. ஆதி மனுஷனைக் கெடுத்த சாத்தான் இவரையும் தேவசித்தப் பாதையிலிருந்து விலக்கிக் கெடுக்கும்படி எவ்வளவோ பிரயாசப்பட்டான். இனத்தார் மூலமாகவும், சீஷர்கள் மூலமாகவும், ஜனங்கள் மூலமாகவும், அதிகாரிகள் மூலமாகவும் அவரைக் கெடுக்கும்படி அவன் செய்த முயற்சிகள் கொஞ்சமல்ல. ஏதாவது ஒரு விஷயத்தில் அவர் தவறியிருந்தால் உலகத்தின் கதி அதோகதிதான். பசியினால் சாக நேரிட்டாலும், இரத்தவேர்வை சிந்தித் தரையிலே விழுந்தாலும், சகிக்க முடியாத அவமானங்கள் நிந்தைகளால் அவர் இருதயம் பிளந்தாலும், வாரடிகளாலும் முள்முடியினாலும் ஏராளமான ரத்தம் அவர் தேகத்திலிருந்து வெளியேற, அரை உயிரும் குறை உயிருமாகி நடக்கமுடியாமல் வழியில் விழுந்தாலும், சிலுவையின் அகோர வேதனையால் மரிக்கவேண்டியதிருந்தாலும், தமக்கு ஜீவனான பிதாவின் முகம் மறைய, மூன்று மணி நேரமாகச் சிலுவையிலே கொடிய அவஸ்தைப்பட்டு, என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர் என்று கதற நேரிட்டாலும், தமக்கு என்ன சம்பவித்தாலும் பிதாவின் **சித்தத்தைவிட்டு** கடுகளவாகிலும் அவர் விலகப்போகிறவரல்ல. ஒரு விஷயத்திலாகிலும் தமக்குப் பிரியமாய் நடவாமல் எல்லாக் காரியங்களிலும்



பிதாவுக்குப் பிரியமானதையே எப்பொழுதும் செய்தார். அவருக்குச் சுய சித்தமிருந்தும், ஒரு காரியத்திலாவது தமது சித்தத்தை நிறைவேற்றாமல் பிதாவின் சித்தத்தின்படியே நினைத்தார், பேசினார், பிரயாணங்கள் செய்தார், சகல கிரியைகளையும் நிறைவேற்றினார். நிந்தையான சிலுவை வெறுக்கவேண்டிய காரியமாயிருந்தும், அது தமக்குப் பிதா ஏற்படுத்தின பாதை என்றறிந்து சந்தோஷமாக அதை ஏற்றுக்கொண்டார். அதைத் தமக்கு மகிமையாகவும் எண்ணினார். சிலுவையை எதிர் பார்த்து: ''மனுஷகுமாரன் மகிமைப்படும்படியான வேளை வந்தது'' என்றார். இவ்வாறு பாவமற்றவராக நடந்து, தேவசாயலின்படியும் தேவரூபத்தின்படியும் உண்டாக்கப்பட்ட மனுஷன், தேவனுக்கு முன்பாக எப்படிப் பிழைக்கவேண்டுமென்பதை தமது ஜீவியத்தில் திருஷ்டாந்தப்படுத்திக் காண்பித்தார். இவர் தேவனுடைய மகிமையின் பிரகாசமும் அவருடைய தன்மையின் சொரூபமுமானார்.

அவர் மனுமக்கள் நடுவில் சஞ்சரித்து ஊழியஞ் செய்த காலத்தில், அவருடைய கீர்த்தி எங்கும் வியாபித்தது. அவருடைய போதகத்தையும் அரிய செயல்களையும் கவனித்த ஜனங்கள் ஆச்சரியப்பட்டுப் பிரமித்து ''தேவனை மகிமைப்படுத்தினார்கள்.'' ஒருபோதும் அவர் தமக்கு மகிமையைத் தேடவில்லை. மனுஷரால் வரும் மகிமையை அவர் விரும்பவில்லை. தமது ஜீவியம் ஊழியத்தால் வரக்கூடிய மகிமை யாவையும் பிதாவுக்கே கொடுத்தார். முடிவாக அவர் ஜெபித்தபோது: ''பிதாவே, பூமியிலே நான் உம்மை **மகிமைப்படுத்தினேன்;** நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன்'' என்றார். இவ்வாறு அவரது முதற்பாக ஊழியம் தேவ சித்தப்படியே நிறைவேறி முடிந்தபோது, மறுரூப மலையில் ''இவர் என்னுடைய நேசகுமாரன், இவரிடத்தில் பிரியமாயிருக்கிறேன்'' என்று சொல்லுகிற சத்தம் உன்னதமான மகிமையிலிருந்து அவருக்கு உண்டாகி, பிதாவாகிய தேவனால் அவர் **கனத்தையும் மகிமையையும்** பெற்றார். இது விஷயத்தில் நமக்கு அவர் சிறந்த மாதிரியானார்.

இரண்டாவது, நாம் மகிமையில் பிரவேசிப்பதற்கு அவர் **வழியை** உண்டாக்க வேண்டும். அவர் போதகத்தைக் கேட்டும், அவர் மாதிரியைப் பார்த்தும் நாம் ஈடேறத் தகுதியுள்ளவர்கள் அல்ல. அது பிந்தி நடக்கிற காரியம். அதற்குமுன் ஆண்டவர் நமக்காக நிறைவேற்றவேண்டிய மகத்தான வேலை உண்டு. அதைச் சிலுவையிலே நிறைவேற்றினார். நமதாண்டவருடைய ஜீவியத்தில் சிலுவையின் **மரணமே** பிரதானம். அப்படியில்லா திருந்தால் அவரது முதல் பாக ஊழியம் முடிந்து, மறுரூப மலையில் அவர் பிதாவினால் கனத்தையும் மகிமையையும் நற்சாட்சியாகப் பெற்ற சமயத்தில் அங்கிருந்தே பிதாவிடம் போயிருக்கலாம். அவர் போகவில்லை, அவர் எருசலேமில் நிறைவேற்றவேண்டிய பாடுகள் மரணத்தை எதிர்நோக்கி மலை யைவிட்டு இறங்கினார். அவருடைய பாடுகளின் வழியே அவ ருக்கும் நமக்கும் மகிமையைக் கொடுக்கும் வழி. அவர் உயிர்த் தெழுந்தபின் சீஷரிடம் ''கிறிஸ்து இவ்விதமாகப் **பாடுபடவும் தமது மகிமையில் பிரவேசிக்கவும்** வேண்டியதில்லையா?'' என்று கேட்டார். நாம் பெற்றுக்கொள்ளும் மகிமையைப்பற்றி: ''தமக்காகவும் தம்மாலேயும் சகலத்தையும் உண்டாக்கினவர், அநேகம் பிள்ளைகளை **மகிமையில்** கொண்டுவந்து சேர்க்கை யில் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை (காரணரை) உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது அவருக்கு ஏற்றதா யிருந்தது'' என்று வாசிக்கிறோம் (எபி. *2:10*). அவருடைய மரணத்தாலேயன்றி நமது பாவங்கள் மன்னிக்கப்படவும், பிதா வாகிய தேவனோடு நாம் ஒப்புரவாகவும், கிறிஸ்து தமது ஆவியின் மூலம் நமக்குள் வசிக்கவும், நாம் நித்திய மகிமைக் குட் பிரவேசிக்கவும் வேறு வழியில்லை.

இவ்வாறு தமது மாசற்ற ஜீவியத்தாலும், பாடுகள் மரணத் தாலும் பிதாவை மகிமைப்படுத்தின குமாரனை பிதா மகிமைப் படுத்துவது அவசியமாயிற்று. ''தேவன் அவரில் மகிமைப்பட் டிருந்தால், தேவன் அவரைத் தம்மில் மகிமைப்படுத்துவார்; சீக்கிரமாய் அவரை மகிமைப்படுத்துவார்'' என்றார் (யோவா. *13:32*). அந்தப்படியே பிதா தமது நேசகுமாரனும் நமது அருமை



இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவை உன்னதத்திற்கு உயர்த்தி ''கனத்தினாலும் மகிமையினாலும்'' அவரை முடிசூட்டினார். அப்போஸ்தலன் சொல்லுகிறபடி கிறிஸ்து சிலுவையின் மரண பரியந்தம் பூரணமாய்க் கீழ்ப்படிந்ததினாலே ''தேவன் எல்லா வற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமை யாக **இயேசுகிறிஸ்து கர்த்தர்** என்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும் எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்'' (பிலி. *2:9-11*). மனுஷன் பாவத்தால் இழந்த மகிமையைப் பார்க்கிலும் அன்பின் ஆண்டவர் நமக்கா கச் சம்பாதித்திருக்கிற மகிமை எவ்வளவோ உன்னதமானது. பாவத்தின் கேடுகள் கிருபையின் ஐசுவரியத்துக்கு முன்பாக நிற்கமுடியுமா?

இயேசுகிறிஸ்து நமது மீட்பராகச் செய்துமுடித்த சகலமும் **நமக்காகவே** என்பதை நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது. அவர் தமது ஜீவியத்தில் செய்து முடித்த சகல நற்கிரியைகளாலும் பிதாவை மகிமைப்படுத்தினார். தமது பாடுகள் மரணத்தின் மூலம் அவரடைந்த வெற்றியினால் பிதாவை மகிமைப்படுத்தி, விசுவாசிகள் எல்லாருக்கும் மகிமையின் வாசலைத் திறந்தார். பாவத்தால் நாம் இழந்த தேவ மகிமையை நமக்காகச் சம்பாதித் தவரும் அவரே, அந்த மகிமையில் நாம் பிரவேசிப்பதற்கு வழியும் அவரே. சிரசாகிய அவரடைந்த மகிமை சிரசோடு சம்பந்தப்பட்ட சரீரத்திற்கும் உரியது. நாம் ஒரு சபையின் அங்கங்களாயிருக்கலாம். அவருடைய சரீரத்தின் அவயவங்களா யிருக்கிறோமா? அவரோடுள்ள ஐக்கியமே நம்மை அவருடைய சரீரத்திற்குரியவர்களாக்கும். அவருடையவைகள் யாவும் நம்மு டையவைகள். இந்த மகிமையை நாம் பெற்றுக்கொள்ளும் போது தேவன் கிறிஸ்துவுக்குள் கொண்டிருந்த அனாதி தீர்மா னம் நம்மில் நிறைவேறும். இந்த மகிமையை நாம் காணவேண்டு மென்றும், அதில் பங்குபெறவேண்டுமென்றும் இரட்சகர் தமது பிதாவை வேண்டிக்கொண்டார் (யோவா. *17:24*). ''நீர் எனக்குத்

**தந்த மகிமையை** நான் அவர்களுக்குக் கொடுத்தேன்'' என்கிறார். **அது என்ன மகிமை** என்று கேட்டால், ''பிதா குமாரனிலும் குமாரன் பிதாவிலும் ஒன்றாயிருக்கிறதுபோல நாமும் அவர்களில் ஒன்றாயிருக்கும் மகிமை'' என்பதை அவ்வசனத்திலேயே விளக்கிக் காட்டுகிறார். இந்த உன்னதமான மகிமையில் நாம் பிரவேசிப்பதெப்படி? அவருடைய மகிமையில் நாம் பங்கு பெறுவதெப்படி? பேதுரு சொல்லுகிறபடி ''சகல கிருபையும் பொருந்திய தேவன் கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது **நித்திய மகிமைக்கு** அழைத்திருக்கிறார்'' என்பது நிச்சயம் (1 பேது. 5:10). ''தம்முடைய ராஜ்யத்திற்கும் **மகிமைக்கும்** உங்களை அழைத்த தேவனுக்கு நீங்கள் பாத்திரராய் நடக்க வேண்டும்'' என்றும் (1 தெச. 2:11); ''தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் கிறிஸ்து இயேசுவினால் உண்டான இரட்சிப்பை **நித்திய மகிமையோடே** பெற்றுக்கொள்வார்கள்'' என்றும் பவுல் சொல்லுகிறார் (2 தீமோ. 2:10).

மகிமையான இவ்வளவு பெரிய இரட்சிப்பை பரமபிதா கிருபையாகத் தமது குமாரன் மூலம் ஆயத்தம் பண்ணியிருக்க நாம் என்ன செய்கிறோம்? சீக்கிரமாக வெளிப்படப்போகிற இந்த நித்திய மகிமை நமது கவனத்தை ஆண்டுகொண்டிருக்கிறதா? உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் நாம் அமிழ்ந்திருக்கிறதைப் பார்த்தால் இதெல்லாம் வீண்பேச்சுபோல் நினைக்கிறோமல்லவா? அல்லது கிறிஸ்து நமக்காக மரித்ததால் எப்படியும் மகிமையிலே சேர்த்துக்கொள்வாரென்று லேசாய் நினைத்துக்கொண்டிருக்கிறோமோ? ஒருவன் கிறிஸ்துவின் காரியங்களை உள்ளபடி நம்புவானானால் யாதொரு பிரசங்கமுமின்றி முற்றிலும் மாறிவிடுவான். ஆண்டவர் இரக்கப்பட்டு நமக்கு அநேக நன்மைகளை அருளலாம். ஆனால் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களோ எடுத்துக்கொடுக்கிற காரியங்கள் அல்ல. அவைகள் கிறிஸ்துவின் மூலம் **நமக்குள்ளே** நிறைவேற்றப்பட வேண்டியவைகள். கிறிஸ்து **மகிமையின்** நம்பிக்கையாக நமக்குள் இருப்பதோடுகூட, நாம் தேவ மகிமையைப் பெற்றுக்



கொள்வதற்கு தமது ஆவியின்மூலம் நமக்குள்ளே கிரியை நடப்பித்து நம்மைத் தகுதியுள்ளவர்களாக்குகிறார். ''தமது **மகிமைக்காக ஆயத்தம் பண்ணின** கிருபா பாத்திரங்கள்மேல் தமது மகிமையின் ஐசுவரியத்தை தெரியப்படுத்தச் சித்தமானார்'' என்று சொல்லியிருக்கிறது. பவுல் வரப்போகிற மகிமையைப் பற்றிப் பேசிக்கொண்டு வரும்போது: ''இதற்கு நம்மை **ஆயத்தப்படுத்துகிறவர்** தேவனே, ஆவியென்னும் அச்சாரத்தை நமக்குத் தந்தவரும் அவரே'' என்கிறார் (2 கொரி. 5:5). இரட்சகர் பவுலை ஊழியத்திற்கு அனுப்பினபோது: ''அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் **பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும்** பெற்றுக்கொள்ளும்படியாக, அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டு தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும்பொருட்டு இப்பொழுது உன்னை அவர்களிடம் அனுப்புகிறேன்'' என்றார் (அப். 26:18). மகிமையின் சுதந்தரத்தைப் பெறுவதற்கு நம்மில் எவ்வளவோ மாறுதலும் பரிசுத்தமாக்கப்படுவதும் அவசியமென்பதை மேற்கூறிய வசனங்கள் காண்பிக்கின்றன. ''ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு நம்மைத் **தகுதியுள்ளவர்களாக்குகிறார்**'' (கொலோ. 1:12). பரமபிதா கிறிஸ்துவுக்குள் நமக்காக ஆயத்தம் செய்திருக்கிற மகிமையை நாம் பெற்றுக்கொள்வதற்கு நாமும் **ஆயத்தமாக்கப்படவேண்டும்** என்பதை அநேக வசனங்களில் காண்கிறோம். ஆண்டவர் விரும்புகிறதினாலோ அல்லது நாம் விரும்புகிறதினாலோ தேவ மகிமையை நாம் பெற்றுக்கொள்ளப்போகிறதில்லை. தேவன் நித்திய மகிமையை ஆயத்தம்பண்ணி வைத்திருக்கிறதற்காகவும், அந்த மகிமையை நாம் பெற்றுக்கொள்ளும்படி நம்மை அழைத்திருக்கிறதற்காகவும் அவருக்கு ஸ்தோத்திரம்! ஆனால் அதைப் பெற்றுக்கொள்ளும்படியான **தகுதி** நம்மில் உண்டாகவேண்டும். இது நம்மாலாகிற காரியமல்ல. ''கிறிஸ்து மகிமையின் நம்பிக்கையாக நமக்குள்ளிருந்து'' தமது ஆவியின் மூலமாய் நம்மைத் தகுதியுள்ளவர்களாக்குகிறார். அது எப்படியாகிறது என்பதை முடிவாகக் கவனிப்போம்.

நமதாண்டவர் மகிமைக்குச்சென்ற பாதையை நாம் கவனிக்க
வேண்டும். அவர் பிதாவின் சித்தப்படியே நடந்து, தமது
ஜீவியம், பாடுகள், மரணத்தின்மூலமாய் பிதாவைப் பூமியிலே
மகிமைப்படுத்தினார். தம்மை மகிமைப்படுத்தின குமாரனை
பிதா மகிமைப்படுத்தினார். அதுவே நமக்கு மாதிரி. தேவன்
நம்மில் மகிமைப்படும்போது நம்மைத் தமது குமாரனுக்குள்
மகிமைப்படுத்துகிறார். நமது மகிமையைப்பற்றி ஐந்து காரியங்
களைக் கவனிப்போம். அவை குண மகிமை, ஊழிய மகிமை,
சரீர மகிமை, ஸ்தல மகிமை, ஆளுகை மகிமை என்னப்படும்.

(1) **குண மகிமை.** இது நமது ஜீவியத்தில் காணப்படவேண்
டிய மகிமை. நமக்குள் வசிக்கும் ஆண்டவர் தமது ஆவியி
னாலே நமது ஜீவியத்தை மாற்றுகிறார். நம்மில் ஆவியின்
கனிகள் காணப்படும்படி செய்கிறார். கிறிஸ்துவின் சிந்தைகளே
ஆவியின் கனிகள். தீமையான குணங்கள் நம்மைவிட்டு நீங்க,
கிறிஸ்துவில் காணப்பட்ட தெய்வீக லட்சணங்கள் நம்மில்
காணப்படும்போது பிதாவுக்கு மகிமை உண்டாகும். ''நீங்கள்
மிகுந்த கனிகளைக் கொடுப்பதினாலே என் பிதா **மகிமைப்படு
வார்''** என்றார். கிறிஸ்துவின் சாயலுக்கொப்பான ஜீவிய மாறு
தல் ஒரே நாளில் ஆகிற காரியமல்ல, நமக்குள் வசிக்கும்
ஆண்டவர் தமது ஆவியின் மூலமாய்ப் படிப்படியாகத் தமக்
கொப்பாக மாற்றுகிறார். ''நாமெல்லாரும் திறந்தமுகமாய்க்
கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோல
கண்டு ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே
**மகிமையின்மேல் மகிமையடைந்து** மறுரூபப்படுகிறோம்''
(2 கொரி. 3:18). இதுவே குண மகிமை. கிறிஸ்து நமக்குள்
பிரவேசித்து அங்கே உருவாகிறதால் அவர் சாயலுக்கொப்பான
மறுரூபம் ஆரம்பிக்கிறது. ''நீங்கள் இந்தப் பிரபஞ்சத்துக்கு
ஒத்த வேஷம் தரியாமல் தேவனுடைய நன்மையும் பிரியமும்
பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக
உங்கள் **மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்''** (ரோ.
12:2). இது மறுரூப ஆரம்பம். மனுஷன் புது சிருஷ்டியாகிறான்.
மறுரூபத்தை ஆரம்பித்த ஆண்டவரே, தமது சாயலுக்கொப்பாக



நாம் வளரும்படி மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூப
மாகும்படி செய்கிறார். அநேகருக்குக் கிறிஸ்து இரண்டாயிரம்
வருஷங்களுக்குமுன் சஞ்சரித்த ஒரு ஆளாகத் தோன்றுகிறார்.
பழைய காலத்தில் இருந்த ஒரு பெரியவராக அவரை ஞாபகப்
படுத்திக்கொள்ளுகிறார்கள். **இன்று** மகிமையின் ஆண்டவராக
உன்னதத்தில் இருப்பதையும், **இன்று** நமது இருதயங்களில்
வசித்துத் தமது ஆவியின் மூலமாய் நமக்குள் கிரியை நடப்பிப்
பதையும் அவர்கள் அறியவில்லை. ஆகையால் அவர்கள்
ஜீவியத்தில் மாறுதல் இல்லை; உள்ளான மறுரூப மகிமை
யில்லை. நமது ஜீவியத்தில் பிதா மகிமைப்படும்போது தமது
மகிமையை நமக்குக் கொடுப்பார். மனுஷனைப்பற்றிய தேவ
தீர்மானம் அவனில் பூரணப்படுவது மனுஷனுக்கு மகிமை.

(2) **ஊழிய மகிமை.** ''மனுஷர் உங்கள் **நற்கிரியைகளைக்**
கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை **மகிமைப்படுத்
தும்படி உங்கள் வெளிச்சம்** அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கட
வது'' (மத். 5:16). நமது இரட்சகர் நடப்பித்த காருண்ய
செயல்களைக் கண்டு ஜனங்கள் தேவனை **மகிமைப்படுத்தினார்
கள்.** அதுபோலவே அப்போஸ்தலருடைய ஊழியத்தைக்
குறித்து ''எல்லாரும் தேவனை **மகிமைப்படுத்தினார்கள்''** என்று
வாசிக்கிறோம். பவுலின் ஜீவிய மாறுதலைப்பற்றிக் கேள்விப்
பட்ட யூதேயா தேசத்துச் சபைகளைக் குறித்து: ''அவர்கள்
என்னைப்பற்றி தேவனை **மகிமைப்படுத்தினார்கள்''** என்கிறார்
(கலா. 1:24). மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோ
கத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தவேண்டும்
என்று இரட்சகர் போதிக்கிறார். மோசேயின் ஊழியத்தைக்
குறித்து பவுல் அது மரணத்துக்கேதுவான ஊழியம், ஒழிந்து
போகிற மகிமையுள்ள ஊழியம், ஆக்கினைத் தீர்ப்புக் கொடுக்கிற
ஊழியம் என்றும் கிறிஸ்துவின் சுவிசேஷ ஊழியத்தைக் குறித்து:
இது ஆவிக்குரிய ஊழியம், நீதியைக் கொடுக்கும் ஊழியம்,
சிறந்த மகிமையுள்ள ஊழியம், நிலைத்திருக்கும் ஊழியம்
என்றும் வித்தியாசப்படுத்திப் பேசுகிறார். மேலும் மோசேயின்
முகம் பிரகாசித்ததினால் ஜனங்கள் அவர் முகத்தைப் பார்க்கக்

கூடாமலிருந்தது. ஆகையால் மோசே தன் முகத்தின்மேல் முக்
காடு போட்டுக்கொண்டார். அந்த முக்காடு இஸ்ரவேலருடைய
இருதயத்தில் இந்நாள்வரைக்கும் இருக்கிறதென்றும், கிறிஸ்துவி
னிடம் அவர்கள் மனந்திரும்பும்போது அந்த முக்காடு நீங்கும்
என்றும் சொல்லி, முக்காட்டு ஊழியம் அவ்வளவு மகிமை
யுள்ளதாயிருந்தால், நாம் திறந்தமுகமாய்க் கர்த்தருடைய
மகிமையைக் கண்ணாடியில் கண்டு மறுரூபமாகிற ஊழியம்
எவ்வளவு அதிக மகிமையுள்ளதாயிருக்கும் என்கிறார்.
கண்ணாடி என்பது திருவசனத்தைக் குறிக்கும் (யாக். 1:23).

மகிமையின் கர்த்தருக்கு நாம் உண்மையாய் ஊழியஞ்
செய்வோமானால் அவருடைய மகிமையில் நிச்சயமாகவே பங்
கடைவோம். ''நான் எங்கேயிருக்கிறேனோ அங்கே என் ஊழி
யக்காரனும் இருப்பான்'' என்கிறார். ''ஒருவன் எனக்கு ஊழி
யம் செய்வானானால் அவனை என் பிதா **கனம் பண்ணுவார்''**
என்றும் சொல்லுகிறார். வானத்திலும் பூமியிலும் சகல அதிகார
மும் உள்ள இரட்சகருக்கு ஊழியம் செய்வதற்கொப்பான மகிமை
வேறில்லை. தன்னை இரட்சித்து ஆட்கொண்ட ஆண்டவர்
எவ்வளவு மகிமையுள்ளவரென்கிற அறிவுதான் பவுலை அவ்
வளவு மகத்துவமான ஊழியம் செய்யும்படி நடத்தினது. நாம்
எந்த நிலைமையிலிருந்தாலும், ஆண்டவர் நமக்கருளிய அறிவுக்
கும், வரத்துக்கும், பலத்துக்கும், சமயத்துக்கும் தக்கதாக, அவ
ரது அன்பினால் நிறைந்து மற்றவர்களைக் கிறிஸ்துவிடம் நடத்
துவோமானால் பரத்தில் எவ்வளவோ சந்தோஷம் உண்டாகும்.
அவ்வளவும் நமக்கு மகிமைதான். பூமியிலே பிதா தந்த வேலை
யைப் பழுதின்றி நிறைவேற்றின குமாரனை பிதா மகிமைப்படுத்
தினதுபோல ஆண்டவர் நமக்குத் தந்திருக்கிற வேலையை
ஊக்கமாய் நிறைவேற்றுவோமானால் தமது மகிமையிலே நம்
மைச் சேர்த்துக்கொள்வார். இது ஊழிய மகிமை.

*(3)* **சரீர மகிமை.** நமது சரீரம் கர்த்தருடையது; அவரே
அதை உண்டாக்கினவர். நமது சரீரம் கர்த்தருக்குச் சொந்தம்;
அவரே அதை இரட்சித்தவர். நமது சரீரம் பரிசுத்த ஆவியினு



டைய ஆலயம்; அவர் அதில் வசிக்க வேண்டியவர். ''ஆகை
யால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் **சரீரத்தினாலும்**
உங்கள் ஆவியினாலும் தேவனை **மகிமைப்படுத்துங்கள்''** என்கி
றார் பவுல் (1 கொரி. 6:20). தம்மைப்பற்றி அவர் பேசும்போது:
''கிறிஸ்து என் சரீரத்தினாலே **மகிமைப்படுகிறார்''** என்கிறார்
(பிலி. 1:20). ஆவி நம்மில் பிரதானம் என்றாலும் சரீரமில்லாமல்
நாம் இங்கே என்ன செய்ய முடியும்? அப்போஸ்தலனுக்குத்
தமது சரீரத்தைவிட்டுப் பிரிந்து கிறிஸ்துவிடம் போயிருக்க
அதிக ஆசையிருந்தது. ''அப்படியிருந்தும் நான் சரீரத்தில் தரித்
திருப்பது உங்களுக்கு அதிக அவசியம்'' என்று பிலிப்பியருக்குச்
சொல்லுகிறார். அப்போஸ்தலன் ஆண்டவருடைய மகிமைக்கா
கச் செய்த அவ்வளவு ஏராளமும் மகத்துவமுமான வேலைகள்
அனைத்தும் அவருடைய சரீரத்தின் மூலமாகவே நடந்தன.
''கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்படுகிறார்'' என்று அவர்
சொன்னது எவ்வளவு உண்மை!

ஆவியாயிருக்கிற தேவகுமாரன் மனுஷரை இரட்சிக்கும்படி சித்தங்கொண்டபோது அவருக்கு சரீரம் அவசியமாயிருந்தது. பிதா அந்தச் சரீரத்தை ஆயத்தம் பண்ணினார். ''தேவனே, உமது சித்தத்தின்படி செய்ய இதோ வருகிறேன், நீர் எனக்கு ஒரு சரீரத்தை ஆயத்தம் பண்ணினீர்'' என்று இரட்சகரே சொல்லுகிறார் (எபி. 10:5,9). ஆண்டவர் தமது **சரீரத்தின் மூலமாய்** மனுஷன் தேவனுக்கு முன்பாக எப்படிப் பிழைக்க வேண்டும் என்று மாதிரி காண்பித்தார். அவர் தமது **சரீரத்தின் மூலமாய்** எங்கும், எல்லாருக்கும், எப்பொழுதும் ஏராளமான நன்மைகளைப் பொழிந்தருளினார். அவர் தமது **சரீரத்தின் மூலமாய்** நமது பாவங்களை ஏற்றுக்கொண்டு, தம்மைச் சிலுவைக்கு ஒப்புக்கொடுத்து அந்தச் சரீரத்திலே நமது பாவத்தை ஆக்கினைக்குள்ளாக்கி, நித்திய மகிமையை நமக்காகச் சம்பாதித்தார். அவர் தமது சரீரத்திலே பிதாவின் சித்தத்தைப் பரிபூரணமாய் நிறைவேற்றி பிதாவை மகிமைப்படுத்தினதினாலே பிதா அவரை உன்னதத்திற்கு உயர்த்தி மகிமைப்படுத்தினார். அவரது சரீரமும் மகிமையடைந்தது.

நமது சரீரத்தின் மேன்மையை நாம் சரியாய் உணர்ந்தவர்கஎல்ல. பாவ ஜென்மிகளாய்ப் பிறந்து நமது சரீரங்களை அசுத்தத்திற்கும் அக்கிரமங்களுக்கும் அடிமைகளாக ஒப்புக்கொடுத்துவிட்டோம். நமது புத்தி அந்தகாரப்பட்டதால் பாவ சந்தோஷங்களை அனுபவிக்கத்தான் இந்தச் சரீரம் கொடுக்கப்பட்டிருப்பதாக எண்ணிக்கொண்டோம். சரீரம் ஆண்டவர் வசிக்கவேண்டிய ஆலயம் என்பதை நாம் உணரவில்லை. சாத்தான் பாவத்தின் மூலம் நம்மை வஞ்சித்து நமது சரீரங்களை ஆண்டுகொண்டான். பாவ வழியில் நடந்தபோது வெகு சந்தோஷமாயிருந்தது. அதன் கேட்டை அப்போது அறியவில்லை. விதைத்ததை அறுக்க கொஞ்சகாலம் பிடிக்கும். நாட்கள் செல்லவே பாவத்தின் பலனை வட்டிமுதலோடு அறுக்க நேரிடுகிறது. பெருந்திண்டியினாலும், குடிவெறியினாலும், துன்மார்க்கச் செய்கைகளினாலும், மூர்க்க வெறியினாலும் தங்கள் சரீரங்களைப் பாழாக்கினவர்கள் பிற்காலத்தில் சகிக்க முடியாத பாடுகளையும் வேதனைகளையும் சரீரத்தில் அனுபவித்து அங்கலாய்ப்பதைக் கண்ணாலே கண்டிருக்கிறோம். ''ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார்' என்று பவுல் எச்சரிக்கிறார் (1 கொரி. 3:17). மேலும் ''சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாம் எல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்'' (2 கொரி. 5:10). பாவத்தில் நம்மோடு சம்பந்தப்பட்ட சரீரம் ஆக்கினைக்குத் தப்பிக்கொள்ள முடியாது. ''ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்'' என்று கர்த்தர் சொல்லுகிறார். இது எவ்வளவு பயங்கரமான காரியம்!

ஆனால் தாமதமின்றி நம்மை முழுவதுமாய் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுப்போமானால், அவர் நமது இருதயத்தில் பிரவேசித்து நம்மை முற்றிலும் மாற்றுவார். ''சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள அல்லது ஆவிக்குரிய ஆராதனை'' என்று பவுல் எழுதுகிறார் (ரோ. 12:1). கிறிஸ்து நமது இருதயத்தில் வசிக்காமல் பாவம் நீங்கவோ பரிசுத்தம் உண்டாகவோ வழியில்லை. அவர் நமக்குள் வசிப்பதால் தேவன் நமது சரீரத்தில் மகிமைப்படுகிறார். அருமை இரட்சகரைப்போல நாமும் எதைச் செய்தாலும் பிதா மகிமைப்படும்படி நாடுவோம். நாம் புசித்தாலும், குடித்தாலும், உடுத்தினாலும், பேசினாலும், வேலை செய்தாலும், சம்பாதித்தாலும், பிரயாணம் செய்தாலும், இளைப்பாறினாலும், பிரசங்கித்தாலும், நன்மை செய்தாலும், வாங்கினாலும், கொடுத்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்வோம். மனுஷர் நமது நற்கிரியைகளைக்கண்டு பிதாவை மகிமைப்படுத்துவார்கள். நாம் நமது சரீரத்தில் ஆண்டவரை மகிமைப்படுத்தும்போது அவர் நமது சரீரத்தை மகிமைப்படுத்துவார்.



நமது இரட்சகர் வரும்போது ''அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே நம்முடைய அற்பமான அல்லது தாழ்வான சரீரத்தை தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்'' (பிலி. 3:21). அவர் உயிர்த்தெழுந்தபோது தமது பலவீன சரீரத்தைக் கல்லறையிலே விட்டுவிடவில்லை. அந்தச் சரீரமே மகிமையான ஆவிக்குரிய சரீரமாக மாறி, கல்லறையை விட்டு வெளியேறினது. பழைய சரீரத்தைத் தள்ளிவிட்டு வேறொரு சரீரத்தை அவர் எடுத்துக்கொண்டவரல்ல. ஏனென்றால் ஆணிகளால் உண்டான தழும்புகள் மகிமையடைந்த அவரது சரீரத்தில் இருந்தன. தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக அவர் வாசம்பண்ணுகிற சரீரங்களை மறுரூபப்படுத்துவார். நமது சரீரம் புதைக்கப்பட்டு அழிந்து போகலாம். ஆண்டவர் அதை அழிவில்லாத சரீரமாக எழுப்புவார். கனவீனமுள்ளதாய்ப் புதைக்கப்படும்; மகிமையுள்ளதாய் எழுப்புவார். பலவீனத்தில் புதைக்கப்படும்; பலமுள்ளதாய் எழுப்புவார். நாலு நாட்களுக்குப்பின் அவர் எழுப்பின லாசருவை

நினைத்துக்கொள்ள வேண்டியது. அவருக்கு நாலு நாளும் சரிதான், நாலாயிரம் வருஷமும் சரிதான். உயிரோடெழுப்பும் வல்லமை ஒன்றே. ஜென்ம சரீரம் புதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும். அவர் வெளிப்படும்போது கர்த்தருக்குள் நித்திரையடைந்தவர்கள் மகிமையான சரீரங்களோடு முதலாவது எழுந்திருப்பார்கள். அக்காலத்தில் உயிரோடிருக்கும் விசுவாசிகள் ஒரு இமைப்பொழுதில் மறுரூபமாக்கப்பட்டு மகிமையான சரீரத்தைப் பெற்றுக்கொள்வார்கள். இவ்வாறு இருதிறத்தாரும் மகிமையின் ஆண்டவரோடே இருக்கும்படி, மகிமையான சரீரத்தோடு மகிமைக்குட் பிரவேசிப்பார்கள். ''நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது நாமும் அவரோடேகூட **மகிமையிலே** வெளிப்படுவோம்'' (கொலோ. 3:4). இதுவே சரீர மகிமை.

*(4)* ***ஸ்தல மகிமை.*** இதைப்பற்றி நாம் என்ன சொல்லுகிறது? ''என் பிதாவின் வீட்டிலே அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன். நான் போகிற இடத்தை அறிந்திருக்கிறீர்கள், வழியையும் அறிந்திருக்கிறீர்கள்'' என்றார். உடனே தோமா கேட்டது சரி. ''ஆண்டவரே நீர் போகிற இடமே தெரியாதே, வழி எங்களுக்கு எப்படித் தெரியும்'' என்றார். அதற்கு ஆண்டவர்: நானே அந்த இடத்திற்கு வழி, என் பிதாவினிடம் வரவேண்டுமானால், அவரைக் காணவேண்டுமானால் நான்தான் அதற்கு வழி, வேறு வழியில்லை என்றார். அவர் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்தார்களேயல்லாமல் காரியத்தை அவர்கள் அறிந்து கொண்டவர்கள் அல்ல. நாமாகிலும் அந்த மகிமையின் ஸ்தலத்தை அறிந்துகொண்டோமா? அல்ல. அங்கே போவதற்கு ஆவலோடு காத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் ஆண்டவர் இருக்கும் இடத்தை நாம் கண்டவர்கள் அல்ல. அது எங்கேயிருக்



கிறதென்பது நமக்குத் தெரியாது. பரலோகம் என்று சொன்னவுடனே நமது கண்கள் மேலே நோக்குகின்றன. பகலில் சூரியன் பிரகாசிக்கும்போது ஆண்டவர் இருக்கும் இடத்தை நினைத்து கையை மேலே காட்டுகிறோம். பூமி சுற்றி, சூரியன் மறைந்து, நாம் நேர்கீழே மறுபக்கத்துக்குப் போகும்போதும் அவரை நினைத்து மேலே பார்க்கிறோம். பிதாவின் மகிமையிலிருந்து புறப்பட்டு வந்த இரட்சகர் மறுபடியும் பிதாவிடம் போயிருக்கிறார் என்பது நிச்சயம். அங்கிருந்து ஆவியை அனுப்பினார். அங்கிருந்து நமக்காக வேண்டுதல் செய்கிறார். அங்கிருந்து ''குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக'' நமது ஜெபங்களைக் கேட்டு நன்மை செய்கிறார். அவர் அங்கிருந்தபோதிலும் தமது ஆவியின் மூலம் நமக்குள் வசிக்கிறார். இவைகளை நமது அனுபவத்தில் அறிந்திருக்கிறோம். ஆகிலும் அவர் இருக்கும் மகிமையின் ஸ்தலத்தை நாம் காணவில்லை. மோட்ச மகிமையைப்பற்றி எத்தனையோ பாட்டுகளைப் பாடுகிறோம், எத்தனையோ பிரசங்கங்களைக் கேட்கிறோம். என்றாலும் சர்வலோகங்களையும் உண்டுபண்ணின மகிமையின் கர்த்தர் இருக்கும் ஸ்தலம் எவ்வளவு மகிமையுள்ளதென்று நாம் கிரகிக்க முடியவில்லை. வானத்திலும் பூமியிலுமுள்ள சிருஷ்டிப்புகளை இவ்வளவு மகிமையாய் உண்டுபண்ணின ஆண்டவர் கோடாகோடி தூதர்களோடு தாம் வாசம்பண்ணும் ஸ்தலத்தை எவ்வளவோ மகிமையாக வைத்திருக்கக்கூடும். ''ஸ்தேவான் வானத்தை அண்ணாந்து பார்த்து, தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் கண்டார்'' என்று சொல்லியிருக்கிறது. தங்கள் ஜீவியத்திலும், ஊழியத்திலும், சரீரத்திலும் மகிமை பெற்ற தேவ மக்கள் நித்திய மகிமைக்குட் பிரவேசிப்பார்கள் என்பதைக் கவனிக்கும்போது, பரம வாசஸ்தலம் எவ்வளவோ மகிமையுள்ளதாயிருக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. பிதாவின் வீட்டில் இரட்சகர் நமக்காக வாசஸ்தலத்தை **ஆயத்தம்பண்ணிக்கொண்டிருப்பது** இதை உறுதிப்படுத்துகிறது. இரட்சகர் பிதாவின் உன்னதமான மகிமைக்குட் பிரவேசித்திருக்கிறார். அவர் எங்கேயிருக்கிறாரோ அங்கே நாமும் அவரோடேகூட இருக்கவும், அவருடைய மகிமையில்

பங்குபெறவும் விரும்புகிறார். இங்கே நமது அறிவு குறைவுள்ளது. இம்மையின் வாழ்க்கையிலிருந்துகொண்டு மறுமையின் காரியங்களை அறியமுடியாது. ஆண்டவர் பரம மகிமையைப் பற்றி அதிகம் சொல்லாத காரணம் அதுதான். நாம் அங்கே பிரவேசிக்கும்போது பரம வாசஸ்தலத்தின் மகிமையை இருக்கிறபடி கண்டு ஆனந்திப்போம்.

*(5)* **ஆளுகை மகிமை.** நாம் ஆரம்பத்தில் கவனித்தபடி தேவன் மனுஷனுக்கு தமது கரத்தின் கிரியைகளின்மேல் ஆளுகை தந்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினார். ''அப்படியிருந்தும் இன்னும் அவனுக்குச் சகலமும் கீழ்ப்பட்டிருக்கக் காணோம்.'' சகலத்தையும் ஆளும் மகிமையை மனுஷன் தன் பாவத்தினால் இழந்தான். ஆனால் நமது இரட்சகராகிய ''இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம்'' (எபி. 2:9). சர்வத்தையும் ஆளும் அதிகாரமும் அவருடையது. அவரோடேகூட நாமும் ஆளுகை செய்யவேண்டுமென்பது பிதாவுடைய தீர்மானம். நாம் ஆதாமுக்குள் இழந்துபோன ஆளுகையைப் பார்க்கிலும் கிறிஸ்துவினால் உண்டான ஆளுகை எத்தனையோ மடங்கு மகிமையுள்ளது. சீஷர்கள் ஒரு சமயம் ஆண்டவரைப் பார்த்து: இதோ நாங்கள் எல்லாவற்றையும் விட்டு உம்மைப் பின்பற்றினோமே; எங்களுக்கு என்ன கிடைக்கும் என்று கேட்டார்கள். அவரது அன்பையும் இரட்சிப்பின் மகிமையையும் அவர்கள் இன்னும் சரியாய் அறிந்துகொள்ளாததால் அவரிடத்தில் பேரம்பேச ஆரம்பித்தார். பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிறகு, ''என்ன கிடைக்கும்'' என்று தாங்கள் கேட்டதைக் குறித்து வெட்கப்பட்டு, தாங்கள் அவருக்காக என்ன செய்யலாம், உயிரையும் கொடுத்துவிடலாம் என்று முடிவு செய்தார்கள். நாம் சரியாய்க் கேட்டாலும் புத்தியீனமாய்க் கேட்டாலும் நமக்கேற்ற பதில் சொல்லும் ஆண்டவர் அவர்களைப் பார்த்து: ''மறுஜன்ம காலத்திலே மனுஷகுமாரன் தமது **மகிமையுள்ள** சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும்போது, என்னைப்



பின்பற்றின நீங்களும் இஸ்ரவேலின் பன்னிரெண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாகப் பன்னிரெண்டு சிங்காசனங்களின் மேல் வீற்றிருப்பீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்றார் (மத். 19:28). ஆளுகிற மகிமையில் அவர்களுக்கும் பங்குண்டு. அவர்களுக்கு மாத்திரமல்ல, ''பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்கள் என்று அறியீர்களா?'' என்று பவுல் கேட்கிறார் (1 கொரி. 6:2). இந்த மகிமையின் ஆளுகையைக் குறித்து ஆண்டவர்: ''நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்தில் அவரோடேகூட உட்கார்ந்ததுபோல ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள் செய்வேன்'' என்கிறார் (வெளி. 3:21). சிங்காசனம் என்பது ஆளுகையைக் குறிக்கும். இவ்வாறு கிறிஸ்துவை **மகிமையின் நம்பிக்கையாகத்** தங்கள் இருதயத்தில் ஏற்றுக்கொண்ட தேவ மக்கள் தங்கள் குணத்திலும், ஊழியத்திலும், சரீரத்திலும், பரம வாசஸ்தலத்திலும், ஆளுகையிலும் தேவ மகிமை பெற்று வாழுவார்கள்.

அவர் ஜெயங்கொண்டு பிதாவின் சிங்காசனத்தில் உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவர்கள் அவரோடேகூட அவருடைய சிங்காசனத்தில் உட்காருவார்கள் என்கிறார். **ஜெயங்கொண்டு** என்னும் வார்த்தை போராட்டத்தைக் குறிக்கிறது. நமக்குத் தேவ மகிமையைச் சம்பாதித்துக் கொடுக்கும்படி வந்த இரட்சகர் பட்டபாடுகளும் அவமானங்களும் கொஞ்சமல்ல. சகலத்தையும் தமது அன்பினால் மேற்கொண்டு ஜெயித்தார். அவரை உண்மையாய்ப் பின்செல்லும் பிள்ளைகள் உபத்திரவம், பாடுகள், அவமானங்களுக்குத் தப்பமுடியாது. நாம் தீமை செய்து பாடுகளைச் சகிப்பதில் மேன்மையில்லை. ''நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள்; தேவனுடைய **மகிமையுள்ள** ஆவியானவர் உங்களில் தங்கியிருக்கிறார்; அவர்களாலே தூஷிக்கப்படுகிறார், உங்களாலே **மகிமைப்படுகிறார்.** ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினாலே பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம்

தேவனை **மகிமைப்படுத்தக்கடவன்**'' (*1 பேது. 4:14,16*). நாம் ஆண்டவருக்காகச் சகிக்கும் பாடுகள் அவருக்கு மகிமையைக் கொடுக்கின்றன. ''மேலும் அதிசீக்கிரத்தில் நீங்கும் லேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான **நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது**'' (2 கொரி. 4:17). ''இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் **மகிமைக்கு** ஒப்பிடத் தக்கவைகள் அல்ல'' என்றும், ''அவரோடேகூட பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட **ஆளுகையும்** செய்வோம்'' என்றும் பவுல் சொல்லுகிறார் (ரோ. *8:18*; 2 தீமோ. *2:12*). ஆகவே ஆண்டவர் அருளும் பலத்தால் அவமானம் பாடுகளைப் பொறுமையாய்ச் சகித்து ஜெயம் பெறுவோமானால், கிறிஸ்துவோடுகூட அவருடைய சிங்காசனத்தில் உட்காரவும், ஆளுகை செய்யவும் அவர் அருள் செய்வார். **''கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக நமக்குள் இருப்பதே''** நித்திய மகிமையில் நாம் பிரவேசித்து, மேலான பாக்கியங்களை அனுபவிப்போம் என்பதற்கு உறுதியான ஆதாரமும் அச்சாரமுமாயிருக்கிறது.

முடிவாக ஒரு வார்த்தை. இவ்வளவு மேலான ஜீவியம் செய்ய எல்லாராலும் முடியுமா? இது பரிசுத்தவான்களுக்கும் குறிக்கப்பட்ட சிலருக்கும் ஏற்ற ஜீவியம் என்று நாம் நினைக்கலாகாது. பரிசுத்தவான்கள் என்று ஒருவருமில்லை. எல்லாரும் ஒன்றுபோல் பாவஞ்செய்து, தேவ மகிமையை இழந்துபோனவர்களே. தங்கள் பாவக்கேட்டையும் ஒன்றுமில்லாமையையும் உணர்ந்து, அருமை இரட்சகரைத் தங்கள் இருதயங்களில் ஏற்றுக் கொள்ளுகிறவர்கள் எவர்களோ அவர்களைத் தேவ மக்களாக்குகிறவரும், தமது சாயலுக்கொப்பாய் மாற்றுகிறவரும், தமக்கு ஊழியம் செய்யப் பலப்படுத்துகிறவரும், நித்திய மகிமையில் பங்கு பெறச் செய்கிறவரும் அவரே. இது விஷயத்தில் ஒருவரும் பெருமைபாராட்ட முடியாது. நமக்குள் வசிக்கும் கிறிஸ்துவே நமது ஜீவனின் உற்பத்திக்கும், ஜீவனின் வளர்ச்சிக்கும், ஜீவனின் முயற்சிக்கும், ஜீவனின் உயர்ச்சிக்கும் காரணராயிருக்கிறார். முதலிலிருந்து முடிவு வரை அவரே நமக்குள்ளிருந்து எல்லாவற்றையும் நடப்பிக்கிறவர்.



அவரே நமக்காக எல்லாவற்றையும் செய்கிறவர் என்று சொன்னதினாலே நாம் சும்மாயிருக்க வேண்டும் என்று அர்த்தமல்ல. நாம் செய்யவேண்டிய பாகம் உண்டு. நமது பாகம் லேசு; அவர் செய்யவேண்டியதோ மகா பெரிது. கொடி செடியில் நிலைத்திருக்க வேண்டியது. செடி கொடியைக் கனிகொடுக்கச் செய்கிறது. தன் சரீரத்தில் பயங்கரமான கட்டி உள்ளவன் தன்னை வைத்தியன் கையில் விட்டுவிடுகிறான். வைத்தியன் தன் திறமையினால் அந்தக் கட்டியை அகற்றிக் குணமாக்குகிறான். நமது பாவங்களையும் பலவீனங்களையும் உணர்ந்து ஆண்டவர் கையில் நம்மை ஒப்புவிக்கிறோம். அவர் தமது ஆவியின்மூலம் நமக்குள் வசித்து தமது இரட்சிப்பை நமது ஜீவியத்தில் பலிதப்படுத்துகிறார். அவர் இந்த மேலான ஜீவியத்தில் நடத்துகிறதை அறியவேண்டுமானால் நம்மிடத்தில் **உண்மை**யிருக்கவேண்டும். இருமனமுள்ளவர்கள் தங்கள் காரியங்களில் நிலையற்றவர்கள். கர்த்தருக்கு நம்மைச் சமூலமாய் ஒப்புக்கொடுக்கிற விஷயத்தில் இருமனம் உதவாது. நம்மையும் நமக்குள்ள யாவையும் ஆண்டவர் கையில் பூரணமாய் ஒப்புவித்து, அவர் நமது இருதயத்தில் வசிக்கவும், தமக்குச் சித்தமானபடி நடத்தவும், நம்மை உபயோகிக்கவும் இடங்கொடுக்க வேண்டும். எந்தக் காரியத்திலாவது இது இப்படித்தான் நடக்கவேண்டும், அது அப்படித்தான் நடக்க வேண்டும் என்கிற சுய இஷ்டப் பிடிவாதம் கூடாது. அனாவசியமாய்ப் பிறர் காரியங்களில் தலையிட்டு மனதைப் பாரப்படுத்திக்கொள்ளக் கூடாது. பாவம் நேரிடும் என்று தெரிந்த ஆட்களையும் இடங்களையும் பொல்லாங்காய்த் தோன்றுகிற யாவையும் விட்டு விலகவேண்டும். திருவசனத் தியானத்தாலும், ஆண்டவரோடு முகமுகமாய்ப் பேசும் தனி ஜெபங்களாலும், அனுபவமுள்ள பரிசுத்தவான்கள் எழுதின பக்திக்குரிய புஸ்தகங்களைப் படிப்பதாலும், எப்பொழுதும் எல்லாரிடத்திலும் தாழ்மையும், பொறுமையும், அன்பும், அனுதாபமுமாய் நடந்துகொள்வதாலும் இருதயத்தில் வசிக்கும் கிறிஸ்துவோடுள்ள ஐக்கியத்தை நாள்தோறும் புதுப்பித்துக் கொள்ளவேண்டும். நேற்று நாம் தேவதூதனைப்போல் நடந்திருந்தாலும், அதை நம்பி இன்று தேட

வேண்டிய புதிய கிருபைகளை மறந்துவிடக்கூடாது. ஏதாவது ஒரு விஷயத்தில் தவறிவிட்டால் அதையே நினைத்து நினைத்து மனம் சோர்ந்துபோவது சரியல்ல. அது சாத்தான் நம்மை இன்னும் கெடுப்பதற்கு இடங்கொடுப்பதாகும். தேவனுக்குப் பிரியமாய் நடந்துகொள்வதே நமது ஜீவியத்தின் பிரதான நோக்கமாயிருப்பதால் ''அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் ரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரித்துக் கொண்டேயிருக்கும்'' *(1 யோவா. 1:7)*. தாய் தன் குழந்தையைச் சுத்தம் பண்ணுவதுபோல இதை அவரே பார்த்துக்கொள்வார். இந்தச் சுத்திகரிப்பு ஆண்டவருக்கும் நமக்குமுள்ள ஐக்கிய ஜீவியத்தின் பலனாயிருக்கிறதென்று யோவான் சொல்லுகிறார். நாம் அறியாமலே எத்தனையோ கறைகள் நம்மில் காணப்படலாம். அவர் சுத்திகரியாவிட்டால் நம்மை மாசற்றவர்களாக பிதாவின்முன் அவர் நிறுத்துவதெப்படி? சோம்பல் ஆகாது. எப்பொழுதும் முயற்சியுள்ள ஆண்டவர் நமக்குள் வசிப்பது மெய்யானால் நமது ஜீவியமும் முயற்சியுள்ளதாகவேயிருக்கும். உலக நன்மைகளை அனுபவிப்பதற்கு மனுஷர் எவ்வளவோ முயற்சி செய்கிறார்கள். என்றபோதிலும் சரீர முயற்சி அற்பப் பிரயோஜனமுள்ளது. ஆவிக்குரிய முயற்சியோ பரலோக ஆசீர்வாதங்களையும், பூமிக்குரிய நன்மைகளையும் சேர்த்துக்கொடுக்கிறபடியால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது *(1 தீமோ. 4:7,8)*.

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரரே, சகோதரிகளே, நீங்கள் இந்தப் புஸ்தகத்தைப் படித்து சத்தியத்தை அறிந்துகொள்வது மாத்திரம் போதாது, மகிமையின் கர்த்தரை உங்கள் இருதயங்களில் இப்பொழுதே ஏற்றுக்கொள்ளுங்கள்; அவர் உங்களை ஆசீர்வதிப்பார். ''நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால் இவைகளைச் செய்வீர்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்'' *(யோவா. 13:17)*.

## ஐயரின் பிற நூல்கள்

ஏழு வார்த்தைகள்

கிருபைப் பிரவாகம்

கிறிஸ்தவ ஜீவியம்

என் சுய சரிதை

நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர்

கிறிஸ்தற்ற கிறிஸ்து மார்க்கம்

## வர இருப்பவை

கிறிஸ்துவின் ஜீவியம்

நூறு பிரசங்கங்கள்

**IRUTHAYATHIL CHRISTU**

By. S. Paramanantham

விலை ரூ. 30.00 (இந்தியாவில் மட்டும்)